அகஸ்திய முனிவர்

அருளிச் செய்த

பரிபூரணம் 400

மூலமும் - உரையும்



சென்னை

K. A. மதுரை முதலியாரவர்களால்

பதிப்பிக்கப்பட்டது.

1945

இதன் விலை] 1-8-0

586

உ

கடவுள் துணை.

அகஸ்தியமுனிவர்

அருளிச்செய்த

பரிபூரணம்—400

—: மூலமும்-உரையும் :—

முத்தமிழ் க்ஷேத்திரம் பழனி

R. M. K. குருநாதசாமி

அவர்களின் பௌத்திரரும் சிஷியரும் வைத்தியரும்

தமிழ் ஆசிரியருமான

R. M. P. திருமலைசாமி பிள்ளை

(அவர்களால் உரை எழுதப்பட்டது.)

சென்னை

K. A. மதுரை முதலியாரால்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1937 [ரூபா 1—8—0

Register Copy Right.

உரையாசிரியாரின் வரலாறும் சிறப்பாயிரமும்

நமது தேசத்தின்கண் இளக்கிய பதினென் சித்தருக்குள் அகஸ்தியமுனியே சிறந்தவராக பல காவியங்களில் சொல்லியுள்ளது ஆனதைப்பற்றியே இம்முனிவர் பெருமானே இந்நாள்வரை கொண்டாடப்படுகிறது, நிற்க இன்னவர் எழுதிய வைத்திய சாஸ்திரம் மறைபொருளாயிருப்பதால் எராளமான பொருள் செலவின் பேரில் பழனி க்ஷேத்திரம் தலைமுறை வைத்தியர் குருநாதசாமி பௌத்திரரும் சிஷியருமான R. M. K. திருமலைசாமி பிள்ளையால் மொழிபெயர்த்து அநேகம் பேர் சுலபமாய் வைத்தியத்தின் ஒழுங்கைக் கற்றுக்கொள்ளச் செய்தது மிகவும் மேலானது.

இப்பூகோளப் பிரப்பில் பரமாத்மாவால் சிருஷ்டிக்கப்பட்டுள்ள எல்லா வஸ்துக்களை யும் ஜீவன்களையும் அடக்கியாட்கொண்டு அவ்வற்றினுக்கெல்லாம் மேலாக நின்று நிலவும் மானிடப் பிறவிபெற்ற நமக்கு இன்றியமையாதனவாகியவை பாஷைகளே, அவை பலவுள என்றுலும் தனித்தனி அவற்றுள் வைத்தியம், வாதம், மந்திரம், நாடி, சோதிடம், காவியம், ஞானம் இன்னோரன்ன பல பாகுளாடுற்று ஜீவாத்மா கோடிகளது சரீரத்தில் பிணி முதலியவை வாராமல் தடுத்துப் வந்தனவற்றை இலகுவில் நீக்குவதும் மேற்கூறிய பல பாகுபாடுகளனைத்தினும் முதன்மையானதுப்பற்றி அகஸ்தியர் முதல் சித்தர்கள் பதினெண்மர் அவதரித்துப் பல ஆயிரக்கணக்கான வைத்தியக் காவியங்களியற்றியும் பல ஆயிரக் கணக்கான மாணவர்களுக்குக கற்பித்தும் வந்தனர்கள் இன்றைக்குச் சற்றேறக் குறைய பன்னீராயிரத் திருநூறு வருடங்களுக்குமுன் முதல் சங்கக்காலந்தொட்டு மூன்றுஞ் சங்கக்காலம் முடிவு வரை முறையே, அகஸ்தியர், தொல்காப்பியர்; நக்கீரார் முதலிய பல செந்நாப்புலவர்கள் இருந்து காவியங்களை ஆதரித்துக்குண்டல கேசி, சிந்தாமணி, சிலப்பதிகாரம், இறையனுரைகப்பொருள், மணிமேகலை, வளையாபதி நாலடி, ஈரடி முதலிய நீதிஞான நூல்களையாத்து அவற்றினை வலியுருத்தி வந்தாங்கு இவ்வைத்திய காவியத்திற்கு அகஸ்தியர் இலக்கண நூல் இயற்றுதற்கு முன்னரே சிவப்பெருமான் உபதேசித்தபடி இருபத்தைந்து வைத்திய நூல்கள் இயற்

றிடிங்கூட, அத்தகைய சங்கம் நிர்வாகிக்கப்பட்டு அதனை ஆதரித்து வந்தனரென்று துணிதற்குப் பெரும்பாலும் சரித்திரம் இடநிதந்துளது ஏனெனில் இவை கர்னவம்சத்துப் பரம்பரைச் சந்ததி வழியாகத் தந்தை தன் பிள்ளைக்கும் பிள்ளை தன் பிள்ளைக்குமாகத் தொண்டு தொட்டுக் காட்டிக் கையாடி வந்ததே காரணமென்ப, ஆனதுப்பற்றியே தமிழிற் காவிய இலக்கியத்திற்குப் பல இலக்கணங்களும், பேரகராதியும் ஏற்படுத்தப்பட்டிருப்பதுபோன்று இவ்வற்றினுக்கு இரண்டொரு நிகண்டுகளைத் தவிர இலக்கணமோ அல்லது பேரகராதியோ விசேடமாக, ஏற்படவில்லைமேலும் வைத்திய சம்மந்தப்பட்ட சால்திரங்கள் உலகந் துடங்கிய காலத்திலேயே தமிழ்மொழியிலும் வடமொழியிலும் கோடிக்கனக்கான நூல் மெலுந்துகிடந்து பின்னர் அவை குறைந்து வந்ததற்கும், லத்தின், ஜெர்மன், பிரஞ்சு ஆங்கில முதலிய அன்னிய பாஷைகளில் இந்த வைத்திய சாஸ்திரங்கள் நவநவ அதிகரித்துக்கொண்டே வருவதற்கும் நமது தேமாந்தர்கள் பழைய சாஸ்திரத்தைப் பேணுதுவிட்டதும் போகர் அமரிக்கா முதலிய மேநாட்டுப் பிரயாணம் செய்தபோது அங்காங்கே பல ஆயிரக்கணக்கான மாணவர்களைச் சேகரித்து அவர்களுக்குச் சென்ற உயிரை மீட்டும் வழியொன்றைத் தவிற மற்ற அனைத்தையும் கற்பித்து அவர்கள் அவற்னற அங்ஙனமே நமது பாஷைகளில் போற்றிப்பொதிந்து ஆதரித்துப் பயன்று முயன்றுவருவதுதான் அவர்கள் முதன்மை பெற்றதற்குக் காரணம் இனி நமது சித்தர்கள் நன்குய் ஆராய்ந்து அதன் கண்ணுள்ள மறைபொருளைத் தெரிந்து நமதுதேசம் முன்னேறி இந்நூல் பிரயோஜனப் படுமென்று கருதி மொழிபேர்த்துள்ளது ஆகையால் இதை கண்ணுரும் பெரியோர்கள் அங்கிகரிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். இங்ஙனம்:

வைத்தியரும் தமிழ் பண்டிட்டருமான,

குமரகுருசாமி,

பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை.

நூலாசிரியன் வரலாறு

தெய்வீகத்தன்மை பொருந்திய அகஸ்திமாமுனிவரின் பிறப்பு வளர்ப்பு அப்பெரியாரின் பெற்றோர்கள் யார் என்றும் எக்குலத்திலுதித்தார் அவர் பிறந்த வூர் எது? அவர்கள் பெற்றோர்களின் தொழில் முதலியவற்றைத் திட்டவட்டமாய் சொல்வதறிது. இருந்தாலும் அன்னவரைப் பற்றி சில புராணங்களில் சொல்லியுள்ள சிற்சில குறிப்புகளைக்கொண்டு அப்பெரியார் கவசத்தில் பிறந்தாகவும் அன்னவர் குருமுனி என்ற பெயரோடு விளங்கியதாகவும் புராணக் காவியங்களில் கிடைத்துள்ள சில உதாரணங்களைக்கொண்டு எனது சிற்றறிவுக்கு எட்டியவாறு இப்பெரியாரின் ஜீவிய சரித்திரத்தை ஒருவாறு சொல்ல முன்வந்தேன் :—

இப்பெரியார் எழுதியுள்ள காவியத்திலிருந்து நாம் தெரிந்துகொள்ளவேண்டிய சில விசேஷங்களிருப்பினும் அன்னவர் தக்ஷிணப் பூமியில் பிறந்திருப்பார் என்று நினைப்பதற்கு இடமுண்டும் ஏன் என்றால் அன்னவர் காவியத்தில் சாதாரணமாய் தக்ஷிணப்பூமியிலுள்ள ஜனங்கள் தங்கள் அநுபோகத்தில் பேசி வருகின்ற பாஷையே இந்நூலில் அடிக்கடி வருவதால் ஒருவாறு இன்னவர் தென்பதியில் பிறந்திருப்பார் என்று நினைப்பதற்கு இடமுண்டும்.

அப்படி இருக்க இப்பெரியார் எந்தக்காலத்தில் யாருடைய உதவியில், வைத்தியம், தீட்சை, ஞானம், பரிபூரணத்தின் தன்மை, சித்தானந்தம், பேரானந்தம், பக்தி வைராக்கியம் மூலிகையின் தன்மை, குணம், மணம் முதலியவற்றை எவ்வித உலகபாந்தர்க்கு தெரிய விளக்கினரென்று சொல்

லப்புகுமுன் :—கந்தப்புராணத்தில் சொல்லியவாறு ஒரு காலத்தில் தேவர்களின் யாகத்தை அசுரர்கள் அழித்து தேவர்களுக்குப் பலவிதத் துன்பங்களை விளைத்ததாகவும் அத்துன்பத்தைச் சகிக்க முடியாமல் தேவர்கள் உலகத்தை ரக்ஷித்துக் காக்கும் தாதாவாகிய முதற்முதல் கடவுளாகிய சிவப்பெருமானிடம் முறையிட சிவப்பெருமான் தேவர்களைப்பார்த்து தேவர்களே! துஷ்டர்களை சிஷ்டபரிபாலனஞ்செய்ய கைலங்கிரி என்று சொல்லப்படுகின்ற இமயமலைச்சாரதியில் உமயவளுக்கும் எனக்கும் திருமணம் நடைபெறும் அப்பொழுது ஆறுமுகக் கடவுள் என்று சொல்லப்படுகின்ற எனது புத்திரன் பிறந்து அந்த துஷ்டராகிய அசுரர் குலத்தையெல்லாம் வேரறுத்து தேவர்களாகிய உங்கள் கவலையை ஒழிக்கும் ஆற்றலுள்ளவன் அவனே என்று திருவாய் மலர்ந்தருளியவாறு உமயவளுக்கும் சிவப்பெருமானுக்கும் கலியாணம் நடந்தேறும்வண்ணம் தேவர்கள் ஒன்றுகூடி மன்மதனை ஏவி சிவப்பெருமான்பேரில் புஷ்பவனம் விடுத்து காயாக்கினியை யுண்டுபண்ணினதால் சிவப்பெருமானுக்கு கோபாக்கினியெழுந்து தனது நெற்றிக்கண்ணைத் திறக்க அதனின்று ஆறு பொறிகள் எழுந்து மன்மதனை எரித்து திரிலோகத்தையும் எரிக்கத்தலைப்பட்டபோது கங்கை அவைகளை அடித்துக்கொண்டுபோய் சரவணப் பொய்கையில் சேர்க்க அங்கே அந்த ஆறுபொறிகளும் ஆறு குழந்தையாகப் பிறந்து ஆறுமுகக் கடவுள் என்று விளங்கினர்; நிற்க சிவப்பெருமானுக்கும் உமையவளுக்கும் கைலங்கிரியில் கலியாண வைபவங்கள் நடக்கும் தருவில் பூமாதேவி பாரம் தாளமுடியாமல் உத்திரயாணம் கீழ் நோக்கி தழுவும் தருவில் சிவப்பெருமான் கலசத்தில் பிறந்தவரான கும்பமுனியை தக்ஷிணயணம் போயிருக்கும்

படி சொன்னதற்கு கும்பமுனியானவர் வணங்கி சாமி தங்கள் திருக்கலியாணத்தை அடியேன் காண்பதற்காகவே இவ்வளவு காலமாய் தவமிருந்தேன் அப்படியிருக்க என்னை மாத்திரம் அவ்விடம் போகும்படி சொல்கின்றீரே என்று பரிந்து கேட்க. சிவப்பெருமான் முனிவரைப் பார்த்து நீ அவ்விடம்போகவில்லை என்றால் பூமி சாய்ந்து தேவர்கள் நரர்கள் அழிந்துபோவார்கள் ஆகையால் நீ பொதிகைமாமலைக்குப்போய் இருப்பாயாக அவ்விடத்தில் இங்கும் நடக்கும் வைபவத்தை நீ அவ்விடத்தில் காண்பாய் என்றுரைக்க உடனே முனிவர் தென்பொதிகைக்குப் போய் தங்கி இருக்கும்போது ஆறுமுகக் கடவுளின் பிரசனம் அவ்விடத்தில் கிடைக்கப்பட்டு அந்த முருகப்பெருமான் மூலமாய் உபதேசம்பெற்று ஞான உதயமாகி பரிபூரணம் நிறைந்தவராய் வைத்தியம், ஞானம், நாடிமூலிகை முதலியவைகளை அறிந்து உலகமாந்தர்களின் பிணிகளை அகற்ற பலவிதக் காவியங்களைப் பாடி உலகத்தில் விடுத்துளார்; இவர் முதல் சங்கக் காலந் தொடங்கி மூன்றாவது சங்கம் வரை இருந்ததாகத் தெரிகிறது. இன்னவர், கும்பமுனி, குருமுனி, அகஸ்தியமுனி என்று பெயர்களோடு விளங்கும்.

இங்ஙனம்:

R. M. P. திருமலைசாமி பிள்ளை. பழனி.

மருந்தின் தலைப்பு அகராதி

பக்கம்.		மருந்தின் பெயர்.		பாட்டுதொடர்
25	...	அஷ்டகர்மப்பாவை	...	46
28	...	முப்பு	...	56
29	...	சவாகாரவைப்பு	...	58
30	...	முப்பூவின் பெயர்	...	60
31	...	சத்தியுப்பு வழலைபெயர்	...	63
32	...	பிண்டம் அண்டம்	...	66
34	...	வசியத்திற்கு விபூதி	...	69
35	...	வசியக்காப்பு	...	72
36	...	வசியமை	...	75
37	...	உருமாற்றமை	...	77
39	...	தூரத்து செய்தியறியுமை	...	80
40	...	பெண்ணுக்கும் ஆணுக்கும் மருந்து	...	83
41	...	சண்டமாருதம்	...	85
,,	...	திரிப்புகை	...	86
42	...	பூதமரணம்	...	87
43	...	சத்துருமரணம்	...	89
45	...	ஞானம்	...	94
49	...	சைவீர வைப்பு	...	102
87	...	தாளகப்பற்பம்	...	195
90	...	அகாரம் உகாரம்	...	202
91	...	சிலாசித்து பற்பம்	...	204
92	...	வெண்காரப் பற்பம்	...	206
93	...	வெள்வங்கப்பற்பம் நவமூலத்துக்கு	...	207
95	...	கன்ம வரலாறு	...	213
97	...	கண்மந்திர	...	218
98	...	வெண்குட்டந்திரச் சொர்னபற்பம்	...	221
101	...	வெள்ளிப் பற்பம்	...	226
102	...	நாகபற்பம்	...	229
104	...	இரசபற்பம்	...	234

பக்கம்.	மருந்தின் பெயர்:	பாட்டு-தொடர்
107	... குப்பிச்செந்தூரம் ...	243
112	... காந்த செந்தூரம் ...	256
116	... நாகசெந்தூரம் ...	265
117	... அறிவு ...	269
118	... தாம்பிரச் செந்தூரம் ...	272
121	... பெரும்பாடுதீர மிளகுலேகியம் ...	279
122	... தேற்றுங்கொட்டை லேகியம் ...	281
123	... திரிகடுகு லேகியம் ...	183
125	... கபாட லேகியம் ...	286
127	... தூதுவளை லேகியம் ...	291
128	... திப்பிலி ரசாயனம் ...	295
130	... சுக்குச் சூரணம் ...	298
,,	... திப்பிலி மிளகு சூரணம் ...	299
131	... திரிகடுகு சூரணம் ...	300
,,	... முப்பூவுக்கு விபரம் ...	301
132	... அனுப்பினுட்சுவை உப்பு ...	302
,,	... இரசவாதத்திற்கு வாலைரசச் செந்தூரம்	303
133	... வெடியுப்பு சுத்தி விபரமும் ...	304
134	... சைவீர வைப்பு ...	305
135	... வெள்ளைச் சூரணம் ...	309
136	... இஞ்சிச் சூரணம் ...	311
138	... திராட்ச சூரணம் ...	314
139	... மந்தவாய்வுக்குச் சூரணம் ...	317
,,	... வாந்திபேதிக்குச் சூரணம் ...	318
140	... பறங்கிப்பட்டைச் சூரணம் ...	320
141	... கருஞ்சூரைச் சூரணம் ...	321
,,	... காட்டுக்கரணைச் சூரணம் ...	322
142	... காட்டுக்கருணைச் சூரணம் ...	323
143	... சிந்திச் சூரணம் ...	324
144	... வாதசுராத்துக்கு கியாழம் ...	327

பக்கம்.		மருந்தின் பெயர்.		பாட்டு-தொடர்
145	...	பித்தசுரத்திற்கு கியாழம் கஞ்சி	...	329
,,	...	சேத்தும சுரத்துக்கு கியாழம் கஞ்சி	...	330
146	...	குளிர்சுரத்துக்குக் கியாழம்	...	331
147	...	சந்நிசூத வாய்வுக்கு	...	332
148	...	மூலக்கியாழம் இரசம்வேக்காட்டுக்குக் கியாழம்	...	334
149	...	நசியம்	...	338
150	...	பீநசத்துக்குத்திரி	...	341
151	...	சிரசுநோய் பீனசம் சிரச்சூலைக்குத் தயிலம்	...	342
152	...	கபாலசூலைக்கு சவுரித் தயிலம்	...	343
153	...	சிவயோகி கற்பம்	...	345
154	...	அகார உகாரதீட்சை பூரணமகிமை	...	347
155	...	கந்தகத் தயிலம்	...	351
156	...	மூதண்டக் கியாழம்	...	353
157	...	சன்னிக்குத் தயிலம்	...	354
158	...	காதுமந்தத்துக்குச் சிரசில்தேய்க்கத் தயிலம்	...	357
160	...	அறுகம்வேர்த் தயிலம்	...	360
161	...	விஷங்களுக்குக் குழம்பு	...	363
162	...	சந்நிக்குக் கலிக்கம்	...	365
,,	...	ஆக்கிராணகியம்	...	366
163	...	கண்வியாதிக்கு மருந்து	...	367
165	...	கர்ப்ப வியாதிக்கு எண்ணெய்	...	372
166	...	சகலமேக எண்ணெய்	...	375
167	...	பூரணநூல் மருத்துவஞானம்	...	377
169	...	மூலகிரி	...	383
170	...	போதகிரி	...	387
171	...	சிவராச யோகம்	...	389
174	...	நூல் கெடாதிருக்க	...	397

586

உ

கடவுள் துணை.

அகஸ்தியமுனிவர்

அருளிச்செய்த

பரிபூரணம் - 400

—(மூலமும்-உரையும்)—

காப்பு.

பூரணமாய் நிறைந்தபரி பூரணத்தைப் போற்றிப்
புகழ்பெரிய வயித்திய பூரணத்தைப்பாடக்
காரணமாய்க் கருவுருவா எங்குந்தானாய்க்
கண்மணியி னடுவான கருணைதன்னை
யாரணமாய் முக்கோண நடுவினின்ற
அம்பரத்தை யனுதினமு மறிவாற்போற்றி
வாரணமா முகத்தோனை யனுதினமும்போற்றி
மகத்தான வேதியனை வணங்கினேனே. 1

1-வது உரை

பூரணமாக தனக்குள்ளே நிறையப் பெற்று எங்கும் எவ்விடத்திலும் நிறைந்து உணர்வதற்கே அரிதான பரிபூரணமாய் விளக்கும் வஸ்துவை மனதின்கண் ஸ்தோத்திரஞ் செய்து யாவரும் மகிழ்ந்து புகழ்ந்து கொண்டாடத்தக்க பரிபூரணமென்னும் உண்மை நூலை நான் சொல்லுவதற்கு ஆதாரமாகிய மூலப்பொருளாய் சர்வ வியாபியாகவும், வேதமாகவும் திரிகோணமாகவும் எல்லா உயிர் களின் இருதய மென்ற மனக்கண்ணின் நடுவில் சின்மையமாக

விளங்கும் அழகிய அம்பலத்தை நல் அறிவால் வணங்கி பிரணவ மெய்யென்ற பொருளை உள்ளமதில் உணர்வதற்கு விளக்கிக் காட்டும் ஆனைமுகக் கடவுளின் அடியிணைப் போற்றி செய்து மஹா மஹத்துவம் பொருந்திய நான்கு வேதங்களுக்கும் தலைவனான பரிபூரணத்தை வணக்கி வேண்டினேன்.

2, 3-வது கவி

வணங்கி மிகநிற்கையிலே வேதியோனும்
வடமொழியைத்தான் கொடுத்தே யருளுமீய்ந்தார்
இணங்கிமிக பூரணத்தை யிருந்துபார்த்தேன்
ஏகாந்த பூரணத்தி னின்பங்கண்டு
குணங்கிமிகப் போகாம லறிவிற்கூடி
குருவான பூரணத்தைக் கூர்ந்துபாடி
வணங்கிமிக வேதியன்முன் வைத்துயானும்
வணக்கமாய் கைகூப்பிப் பணிந்திட்டேனே. 2

பணிந்திட்ட யிந்நூலை வேதியனும்
பக்குவமா யாதியந்தம் நன்றாய்ப்பார்த்து
கணிந்திட்ட கருவெல்லா மிதிலேதோன்றுங்
கைம்முறையுங் குருமுறையு மிதிலேதோன்றும்
அணிந்திட்ட விந்நூலை வைத்துக்கொண்டு
அனுதினமும் பூரணத்தைப் பண்பாய்க்கண்டு
துணிந்திட்ட வயித்தியமும் வாதஞ்செய்து
துரியமுள்ள யோகமுடன் ஞானம்பாரே. 3

2, 3-வது உரை

அந்தப் பரிபூரணத்தை கைகூப்பி வேதம் நீயே! இந்த பரிபூரணமென்னும் நூலை ஆதிமுதல் அந்தம் வரை பார்ப்பாயாக. இதில் கருவும் கைமுறையும் குருமுறையும் சொல்லும், வரிசைக் கிரமமாயுள்ள இந்நூலை வைத்துக்கொண்டு சதாகாலமும் கவனித்து இதன் கண் சொல்லிய வைத்திய முறையும் வாதமுஞ்செய்து பரி

சுத்தம் பொருந்திய யோகப்பியாசத்திலிருந்து உள்ளமாகிய ஞானேத் திரத்தால் பார்ப்பாயாக.

4, 7-வது கவி

பாரென்று சொன்னமொழி பெற்றுக்கொண்டு
பதிவான பொதிகையிலே யிருக்கும்போது
நேரென்ற வயித்தியபூ ரணத்தைப்பார்க்க
நிமிஷத்திற் றென்பொதியிற் சித்தர்வந்து
தேரென்ற தென்பொதியிற் கும்பமூர்த்தி
செகச்சோ தியானபூ ரணத்தைப்பார்க்க
மேரென்ற மேருகிரி தன்னில்வந்தோம்
மேன்மையுட னடிமைபடைத் தாளென்றாரே. 4

என்றதொரு சித்தர்களைப் பார்த்துயானு
மின்பமுடன் பூரணத்தை யவருக்கீந்தேன்
வம்பருக்கு முலகத்தி லுள்ளபேர்க்கும்
வாயாது வாய்த்தாலும் வழிதோன்றாது
என்றதொரு சிவயோகிக் கெய்துமாகி
விதினுள்ள கருத்தெல்லா மெய்துமெய்துங்
கண்டுமிவன் காணுமற்கலங் குஞ்சோதிக்
கருவிலேய மைந்தபூ ரணமென்பாரே. 5

பாரப்பா பூரணமா மிந்தநூலைப்
பாரிலுள் ளோர்க்கியாதே பதனஞ்சொன்னேன்
நேரப்பாபூரணமும் வயித்தியமுஞ் சொன்னேன்
நிலையாதகுருநாடி நிலைக்கச் சொன்னேன்
காரப்பா பற்பமொடு செந்தூரங்கள்
கட்டான மாத்திரைகள் சரக்குவைப்பு
பேரப்பா முப்பூவின் தீட்சைமார்க்கம்
பெருநூலில் மறைத்ததெல்லாம் பேசினேனே. 6

பேசினேன் தயிலங்கள் ரசாயனங்கள்
பிலமான லேகியமும் கியாழத்தோடு
வீசினேன் சகலவியா தியுமேதீர
விளம்பினேன் வசியமோடஞ் சனமாமுற்றந்
தூசியிலே திரிபுகையைந் துஞ்சொன்னேன்
துடியான மாரணமும் வைப்புஞ்சொன்னேன்
பாஷையிலே அஷ்டகர்மமெட்டுஞ் சொன்னேன்
பராபரத்தின் குறிசொன்னேன்பணிந்துபாரே. 7

4, 7-வது உரை

ஞானேந்திரத்தால் தெளிந்து பரிபூரணத்தால் நிறைந்து பொதிகைமலை என்று சொல்லப்படுகிற குகையிலே இருக்கும்போது இந்தப் பரிபூரண நூலைக் காணவேண்டி குகையினிடத்தின்கண் வந்து அகஸ்தியரை வணங்கி தூய்மைபொருந்திய தென்பொதியென்று சொல்லப்படுகின்ற குகையின்கண் வாழும் கும்பமூர்த்தியே! உலகெங்கும் புகழப்படுகின்ற காவியத்தைக் காண மஹாமகத்வம்பொருந்திய மேருகிரியென்ற இமயகிரியினின்று வந்துள்ளோம் என்று வணங்கி, நிற்கும் முனிவர்களை அகஸ்தியர் பார்த்து பரிபூரணக் காவியத்தைக் கொடுத்து இதில் பூரணமும் வைத்தியமும் நாடியின் விருத்தாந்தமும் பற்பங்கள் செந்தூரங்கள். மாத்திரைகள் சரக்கு வைப்பு முப்புவின் தீக்ஷை தைலங்கள் ரஸயானங்கள் லேகியங்கள் மாரண முதலிய அஷ்ட கன்மம் எட்டும் சொல்வதுமன்றி இதில் பெரிய விஷயங்களும் சொல்லி யிருக்கிறது உண்மை விவரமும் தோன்றுகின்றது. சிவயோகிகளுக்கெல்லாம் விளங்கி நடக்கும். ஆகையால் இதனை மற்றோர்க்குக் கொடுக்காமல் பத்திரமாய் உள்ளத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

நூல் விபரம்.

8, 10-வது கவி

கேளப்பா மூன்றுலட்சங் காப்புசொன்னேன்
கிருபையுள்ள வாதமது லட்சங்காப்புச்
சூளப்பாவயித்தியத்தி லிரண்டுலட்சஞ் சொன்னேன்
அவற்றைக்குறுக்கியிரு காண்டஞ்சொன்னேன்
பாரப்பாவதை குறுக்கிப் பாதியாக
பாடினேன் அறுநூறு நாலுஞ்சொன்னேன்
வேளப் பாதிராவகமெண் ணூறுஞ்சொன்னேன்
பேதைமுறையைந் நூற்றில் வெளியிட்டேன். 8

வெளியிட்ட வைம்பதிலே மூன்றுஞ்சொன்னேன்
விபரமாய் முன்னூற்றிற் செந்தூரஞ்சொன்னேன்
வழியாக வெண்பதில்முப் பூவுஞ்சொன்னேன்
வயித்தியந் தானுயிரத்தைந் நூறுஞ்சொன்னேன்
அழியாத முன்னூற்றிற் கர்மதர்மம்
அன்பாக சொன்னதைநீ யறிந்துபாரு
முழியாதே நானூற்றி லிரண்டுசொன்னேன்
மூடினதோர் நீற்றினமாம் நாலுநூறே. 9

நானூற்றில் வயித்தியமும் பூரணமுந்தோன்றும்
நாடியுடன் குருநாடி நன்றாய்த்தோன்றப்
பாலான முப்பாலு நன்றாய்த்தோன்றப்
பாடினேன் வயித்தியபூ ரணமாமிதப்பா
தேடினுற் கிடையாதிவ் வுலகத்துள்ளே
சிவயோகி வைத்திருப்பார் கொடுக்கமாட்டார்
நாளாக வவர்களிடந் தொண்டுசெய்து
நன்மையுடன் நூல்வாங்கி நாட்டம்பாரே. 10

8, 10-வது உரை

வெளிப்படை நூற்பதிப்பு பல பாகங்களாக சொல்லி வந்த மூன்று செய்யுளில் இந்த பரிபூரண மிக்க மகுத்துவமுடையது. அவைகளில் சொல்லிய விஷயம் யாவும் இதில் சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்லி யிருக்கிறது. இது ஒன்றே போதுமானது இந்த நூல் சிவயோகிகளுக்கே பெரும்பாலும் இரகசியந் தோன்றிப் பத்திரமாய் வைத்திருப்பார். பிறருக்கு அனுபோக விசாரணையின்றி கொடுக்க மாட்டார்கள். அவர்களிடம் நாளடைவில் தொண்டு செய்து பெற்றுத் தெளிவாயாக.

வைராக்கியம்:—

11-வது கவி

நாட்டமென்று பூரணத்தைக் காணவென்றால்
நன்மையுள்ள சற்குருவாற் காணவேண்டும்
ஒட்டமென்ற வோட்டமெல்லாம் வேட்டாதேநீ
ஒருமணதாய் சுழிமுனையி லுகந்துநில்லு
ஆட்டமென்ற திருநடன மங்கேயுண்டு
ஐம்பத்தோ ரெழுத்துமுத லெல்லாமுண்டு
பாட்டைமிகப் பிதத்தினு லென்னவுண்டு
பத்திமுத்தி வயிராக்ய மாகப்பாரே 11

11-வது உரை

பூரணத்தை அரியவேண்டுமானால் சற்குருவால் காண வேண்டும். மனத்தை பலவிடத்துஞ் செல்ல விடாது. ஒரு மன தாய் சுழிமுனையில் உறுதியாய் நின்று காணில் அங்கே ஆட்டமென்று சொல்லப்படுகின்ற சிவப்பெருமானின் பரிசுத்தம் பொருந்திய நடனம் காணப்படும். ஐம்பத்தொரு அக்ஷரமுதல் எல்லாமுண்டு பாட்டைமிகவும் ஊக்கமாய்ப் பாடிபாடி ஏட்டைப் புரட்டுவதினால் யாதொரு பயனும் அடையமாட்டாய் பக்தியில் அடையும் முத்தியை வைராக்கியத்தால் அடையவேண்டும்.

12, 13-வது கவி

பாரப்பா வுலகத்தில் ஞானமென்பார்
பராபரத்தி னிருப்பிடத்தைப் பாரார்பாரார்
சாரப்பா வுலகத்தில் யோகஞ்செய்வார்
சார்ந்திருக்கும் பரஞ்சோதி தன்னைக்காணார்
ஊரப்பா கிரியையென்றே யுழலுவார்கள்
உத்தமனே வுள்ளுயிரை யறியமாட்டார்
நேரப்பா சரிதையென்பார் தன்னுக்குள்ளே
நெருப்பா றாந்திருக்கோயில் கண்டிடாரே. 12

நெருப்பாறு மயிர்ப்பாலங் கடந்தப்பாலே
நிலையாத கங்கையடா நீந்தப்போகா
இருப்பார்க ளதுமயமா யாடியாடி
இன்பநலம் பற்றாகி யோடியோடி
குறிப்பாக கண்டவர்க்கே தெரியுமார்க்கம்
கோடிரவி சுடர்காந்தி கொண்டவட்டம்
வெறிப்பாக பூரணத்தை யறிவாற்பார்க்க
வெட்டவெளி யாகுமடா குருவைத்தேடே. 13

12, 13-வது உரை

உற்றுக் கேண்மின் உலகத்தில் ஞானி என்போர் பராபரத்தின் இருப்பிடத்தை பாராமல் உலகசாரமாகிய ஆசையில் கஷ்டப்பட்டவர்களாயிருந்தும் கடுமையான யோகங்களை செய்வார்கள். ஆனால் தனக்குள் சார்ந்திருக்கும் பரஞ்சோதியைக்காண முடியாமலிருப்பினும் சரியை கிரியை என்று உளருவார்களேயன்றி தன் உள்ளுரையாகிய ஜீவ ஆண்மாவை யறியச் சக்தியன்றி தன்னை வந்தடைந்தோர்க்கு கதையாகச் சொல்வார்கள். தனக்குள் உள்ள அக்கினிச் சுவாலை பொருந்திய அறுகோண வடிவமாயுள்ள பரிசுத்தக் கோயிலை அறியார்கள். மயிராச்சித்துக் கப்பாலே இருந்துவரும் அமுத கங்கையை கண்டறிந்தி கோடி சூரியப் பிரகாசமான வட்டகாரப் பூர

ணத்தை அறிவால் பார்க்க வெட்ட வெளியாகும். குருவைத்தேடி அறிந்துக்கொள்.

பெருநூற் காவியப் புகழ்ச்சி:—

14, 15-வது கவி

குருவான ஞானகாவி யத்திற்றனுங்
கூர்மையுள்ள பூரணத்தின் குறிப்பைச்சொன் [னேன்
பரிவான சௌமியமாஞ் சுருக்கமப்பா
பாடினேனை் நூற்றில் ஞானமெல்லாம்
கருவான பூரணமீராறு நூலிற்
கருதினேன் ஞானமொடுகற்ப மெல்லாஞ்
சரியான பெருநூல் காவியத்திற்றனுஞ்
சாற்றினேன் மும்மணியின் றன்மைதானே. 14

தன்மையுள்ள சௌமிய சாகரத்திற்றனுஞ்
சகலமுமே யாதியந்த மாகச்சொன்னேன்
முன்னமே குருநூலாம்பன்னி ரண்டுநூறில்
முத்தியுள்ள ஞானமொடு கற்பஞ்சொன்னேன்
வண்மையுள வயித்திய பூரணத்தை
வழுத்தினேன் வயித்தியத்தின் வழிதானன்றாய்
சொன்னமொழி எவ்வளவுந் தப்பேயில்லை
சோதியென்ற பூரணத்தாற் றலக்கினேனே. 15

14, 15-வது உரை

(வெளிப்படையான அர்த்தம்) பெரு நூற்றுக்காவியப் புகழ்ச்சியும், இந் நூற்றுப் புகழ்ச்சியும்.

16, 17-வது கவி

பூரணமா மாதாரந் தன்னினின்ற
புரியட்ட சவாய்வின் பேர்தான்கேளு

வாரணமாம் பிரணவனே டபானன்றனு
மகத்தான வுதானனுடன் சமானன்வியானன்
காரணமா நாகனொடு கூர்மன்றனுங்
கனமான கிருதரன்கூர் தேவதத்தன்
ஆரணமாந் தனஞ்செயனும் பத்துமாச்சு
அப்பனே யசைவைபி னியறைகிறேனே. 16

அறைகிறே னிடைகலையின் சுழிமுனையாகில்
அலம்புடையுங் காந்தாரி யத்தியோடு
இறையான சிகுவை சங்கினியோடெண்ண
இயல்புருடன் குருவென்பார் சோத்திரந்தான்
நிறையான நெடுங்தொக்கு சட்சுவோடு
நேர்மையுள்ள சிங்குவைபாக் கிராணமாகும்
முறையுடனே யிவையறிந்து நிதானங்கண்டு
முதன்மையுள்ள குருநாடியஞ் சுங்கேளே. 17

16, 17-வது உரை

தசவாய்வாவது பிராணன் அபானன் உதானன் சமானன் கவியானன், நாகன், கூர்மன், கிரிகரன் தேவதத்தன், தனஞ்சயன் எனப்பத்து அஜப்பிராணன் இடகலை, பிங்கலை, சுழிமுனை, அலம் புடை, காந்தாரி, அக்தி, சிகுவை, சங்குனி, புருடன், குரு, சோத்தி ரம், தொக்கு சட்சு, சிங்குவை, ஆக்ராணம் முதலிய தத்துவங்களை தெரிந்துக்கொண்டு குருநாடியை அறியவேண்டும்.

புருஷநாடி:—

18-வது கவி

அஞ்சாகிப் பத்தான தசநாடிக்குள்
அப்பனே ரவிமதியு நெருப்புமாகி
மிஞ்சாத வாதபித்தஞ் சிலேத்மமாகி
வீராமன் மூன்றினிலே வியாதிகாண

நெஞ்சாரக் காணுதற்கு வகையைக்கேளு
நேர்மையுள்ள தத்துவத்தை நினைவாய்பார்த்து
செஞ்சாரைப் போலப்பா நாடிதன்னை
திறமாகக் காணுதற்கு வகையைக்கேளே. 18

18-வது உரை

அஞ்சாகி பத்தாகி தசநாடிக்குள் ரவியென்ற வாதமும், மதியென்ற பித்தமும் கெருப்பு என்ற சிலேத்மமுமாகி கொடுமையான வியாதிகளை அறியக் கருவிகளாய் இருக்கப்படுகின்ற ஆதாரத்தைக் காணவேண்டுமானால் தத்துவத்தை அறிந்து போதிக்க தக்க குரு மூநாந்திரமாய் அறியவும்.

19-வது கவி

கேளப்பா புருடருக்கு வலதுகையைக்
கிருபையுடன் முன்பிடித்து நெட்டைவாங்கி
சூளப்பாபெரு விரலோரங்குலத் துக்கப்பாற்
சுகமாக மூவிரலா லழுத்திப்பாரு
வாளப்பா முதல்விரலே வாதநாடி
வண்மையுட னடுவிரலே பித்தநாடி
தேளப்பா கடைவிரலே சேத்மநாடி
திறமாக நின்னறிவாற் றெளிந்துகாணே. 19

19-வது உரை

புருடருக்கு வலது கையை நெட்டை வாங்கி பெருவிரல் ஓர் அங்குலத்துக் கப்பால் சமமாக மூன்று விரலில் அழுத்திப்பாரு முதல் விரலில் வாதநாடியும் நடுவிரலில் பித்தநாடியும், கடை விரலில் சிலேத்ம நாடியும் அறிவால் தெளிந்து காரணம் கண்டு அறிந்து ஔஷதம் கொடுக்கவேண்டும்.

புருடருக்கு நாடிகள் நடக்கும் விதம்:—

20-வது கவி

காணவே புருடருக்கு வாதநாடி
கானகத்து மயில்போலும் அன்னம்போலும்

தோணவே கோழிநடை நடக்குஞ் சொன்னேன்
துரியமென்ற பித்தத்தி னடிகேளு
ஏணவேயாமையுட னடையைப்போலும்
என்மகனே அட்டையைப்போ னடக்கும்பாரு
வேணவே சேத்துமந்தான் பாம்புபோலும்
வேணபடி தவளைக்குதி போலாம்பாரே. 20

20-வது உரை

புருஷருக்கு வாதநாடி அன்னத்தைப் போலவும் மயிலைப் போலவும், கோழியைப் போலவும் பித்தநாடியானது ஆமையைப் போலவும், அட்டையைப் போலவும் சிலேத்ம நாடியானது பாம்பு நடையைப் போலவும் தவளைக்குதியைப்போலவும் நடக்கும். அதைக் கண்டு தெரியவும்.

பெண்களுக்கு நாடிகள் நடக்கும் விதம்:—

21-வது கவி

பார்க்கவே பெண்டுகளுக் கிடதுபக்கம்
பதிவாகப் பார்த்திடவே பகரக்கேளு
கார்க்கவே வாதமது சர்ப்பம் போலாங்
கனமான பித்தமது தவளைபோலாஞ்
சேர்க்கவே யையயென்ற நாடிதானுஞ்
சிறுநடையா வன்னம்போற் செழிப்பாய்காணும்
ஆர்க்குமே தோன்றுமிந்நாடி மூன்றும்
அனுதினமு நல்லறிவா லறிந்துதேறே. 21

21-வது உரை

பெண்களுக்கு இடது கரத்தில் வாதநாடி சர்ப்பம்போலவும் பித்தநாடி தவளையைப் போலவும், சிலேத்மநாடி அன்னம்போலவும் நடக்கும். இதைக்கண்டு ஆண் பெண் வியாதியின் குணம் தெரியவும்.

நாடிகள் கிழுமேலு மீறியோடும் விதம்:—

22-வது கவி

தேரவே * சந்திரனும் வாதநாடி
திறமான சூரியனும் பித்தநாடி
மீறவே யக்கினியும் சேத்மநாடி
விளங்கவே வியாழமதி லங்கிமீறும்
கூறவே மந்தன்செவி யிரவிமூன்றுங்
குணமான சூரியனுங் குமுறியோடும்
ஏறவேதிங்கள் புதன்வெள்ளி தானு
மின்பமுள்ள சந்திரனு மோடுங்காணே. 22

22-வது உரை

சந்திரன் வாதநாடி, சூரியன் பித்தநாடி, அக்கினி சிலேத்ம நாடி, வியாழனில் அக்கினி அதிகமாகும் சனி, செவ்வாய், சூரியன், மூன்று நாளிலும் சூரியக்கலை திங்கள், புதன், வெள்ளி. சந்திரக்கலை.

வியாதிகளறிய:—

23-வது கவி

காணவே ஞாயிருலே வாதமோடில்
கனமான சனியிரும லிரைப்புண்டாமே

* ஆதிவாரம் விடியற் காலத்தில் சூரியகலை.

திங்கள்-விடியற்காலத்தில் சந்திரகலை செவ்வாய் - விடியற்காலத்தில் சூரியகலை புதன்-விடியற்காலத்தில் சந்திரகலை வளர்பிறை - வியாழம் - விடியற்காலத்தில் சந்திரகலை தேய்பிறை-வியாழம்-விடியற்காலத்தில் சூரியகலை வெள்ளி - விடியற்காலத்தில் சந்திரகலை சனி-விடியற்காலத்தில் சந்திரகலை இவ்வித கலைபிங்கலை சுழிமுனை மூன்றுமே வாதபித்த சேஷ்மங்களென்பவைகள் அவைதப்பினல் வருவனவற்றை உள்ளங்கையிற் கண்டுகொள்க.

நாணவே செவ்வாயில் வாதமோடில்
நன்மையிள்ள சுரமதுதானணுகுஞ் சொன்னேந்
தோனவேசனிதனிலே வாதமோடில்
துனிந்ததொரு சிதளமுஞ் சன்னியெய்தும்
வேணவே வியாழத்தில் வாதமோடில்
விலாவோடு தேகமெல்லாம் வலியுண்டாமே 23

23 வது உரை

ஞாயிறில் வாதமோடில், சளி, இருமல், இரைப்பு உண்டாகும். செவ்வாயில் வாதமோடினல் சுரம் உண்டாகும். சனியில் வாத மோடினல் சீதளம், சன்னி உண்டாகும் வியாழத்தில் வாதமோடி, னல் விலாநோய், தேகநோய் உண்டாகும். என்றறிக.

24-வது கவி

உண்டான திங்களிலே பித்தமீறில்
உத்தமனே சலதோஷமுடனே காணும்
பண்டான திங்களிலே பித்தமொடில்
பாரமுடனீ ரேற்றந்தலைக் குத்துண்டாம்
அண்டான வெள்ளியிலே பித்தமோடில்
அப்பனே கண்ணேயுங் காதுநோயாம்
கண்டான குருவினிலே பித்தமோடில்
தண்மையுறுங் தாபசுரந்தலை நோக்கடா 24

24-வது உரை

வளர்பிறை திங்களில் பித்தம் ஓடினல் ஜலதோஷமுண்டாகும் தேய்பிறை திங்களில் பித்தமோடில் தலைப்பாரம், நீரேற்றம், தலை குத்தல் உண்டாகும்; வெள்ளியில் பித்தமோடினல் கண் நோய் காது நோய் உண்டாகும். வியாழத்தில் பித்தமோடினல் தாவசுரம் தலைவலி உண்டாகும். என்றறிக.

25-வது கவி

நோக்காட்டை யறிந்துரைக்க வயித்தியற்கு
நுண்ணறிவாய்ச் சொல்லிவிட்டே னுணுக்கமெல்லாம்
பாற்காட்டாற் றெரியாதுபழக்கமாக
பார்த்தறிந்ததோர் தனையடுத்துப் பரிவாய்க்கேளு
கேட்டாக்காற் கிடையாதிவ் வுலகத்துள்ளே
கிருபையுடனே மனதுறுதி யாகநீயும்
வாய்காட்டாலிந் நூல்தான் வாய்க்கும்பாரு
வண்மையுள்ள குருநாடி வகையைப்பாரே 25

25-வது உரை

நோய்களை அறிவதற்கு வைத்தியர்க்கு சூக்ஷமெல்லாம் சொல்லியபடி பழக்கமாக அனுபவமான பெரியோர் மூலமாகக்கண்டு தெரிந்துகொள்ளாவிடில் விஷயம் தெரியாது ஆகையால் மேற் சொன்ன பெரியோர் மூலமாகத் தெரிந்துக் கொள்ளவும்.

குருநாடி இருக்கும்மிடம்:—

26-வது கவி

பாரப்பா குருநாடியைந் துக்குநடுவாய்
மாறிநிற்கும் வரலாறு தன்னைக்கேளும்
சீரப்பா பித்தத்தின் முன்னேநிற்கும்
* திசைநாடி பத்துக்குத்திற மாய்நிற்கும்
ஏரப்பா வாதமென்று சொல்வார்மூடர்
இருத்தியங்கே பாற்களவில் வேறாய்நிற்கும்
தாரப்பா கொண்டகுரு நாடிநேர்மை
தனையறிய வகையறிய் சாற்றுவனே 26

* தசநாடி—பத்தும் திசைநாடியென மருவியது.

26-வது உரை

குரு நாடியானது ஐந்து நாடிகளுக்கு நடுவில் மாறி நிற்கும் விவரத்தைச் சொல்லுகிறேன் :—பித்தத்தின் முன் நிற்கும் தசநாடி பத்துக்கும் ஆதாரமாய் நிற்கும் இதை வாதமென்றும் சொல்லுவார். இதை மூன்று விரலில் ஊன்றிப்பார்க்கும்போது வேராகத் தனித்து நிற்கும். அதைப்பற்றிய வகைகள் சொல்லுகிறேன்.

27-வது கவி

சாற்றுவேன் பெருவிரலிற் பூதநாடி
சங்கையில்லா ஆள் தூண்டி வாதமென்க
ஏற்றமுள்ள நடுவிரலேதான் பித்தமாகும்
இசைந்ததொரு பவுத்திரமே யையமாகுந்
தோற்றுகின்ற சிறுவிரல்தான் பூதநாடி
சுத்தமுள்ள குருநாடியைந் துடசேறு
மாற்றுமே குருநாடியைந்துட் சேர்ந்து
வளர்ந்துநிற்கும் பேர்பெரிய வண்மைதானே. 27

27-வது உரை

பெருவிரல் பூதநாடி ஆள்காட்டி விரல் வாதநாடி நடுவிரல் பித்தநாடி, மோதிரவிரல் சிலேத்மநாடி, சிறுவிரல் பூதநாடி சுத்தமான குருநாடி மூன்றிலும் சேர்ந்து நிற்கும்.

28-வது கவி

பேர்பெரிய குருநாடி குணமேதென்னிற்
பிரண்டுவரும் வாய்வுமுத்தி வெட்டைமேலே
சீறிய வாய்வுமிகுமிரு மற்றோன்றுந்
தினவுசொறி மிகவும்வருந் தேகம்வாடுஞ்
சூறிய பித்தத்தி லாமைபோலத்
தோன்றியே சுரமிக்குச் சுழத்துவாரீர்

கார்பெருகி வருவதுபோல் வியர்வுதோன்றுங்
கதித்திடில் நீர்கட்டுஞ் சிலேத்துமத்திற்போமே.

28-வது உரை

குருநாடியின் குணமென்ன வெனில் பிரண்டோடுங் கால் வாய்வு முத்தி மெட்டை மேலே அளவுக்கு மீறிவாய்வு இருப்பதாக தோன்றும் போது தினவு, சொரி தேகம் இளைத்து ஒடுக்கும். அப்போது பித்தநாடி ஆமைபோல் தோன்றினால் சுரம் அதிக மாகி வாய் நீர்சுரந்து வியர்வை உண்டாகும் தித்திடில் நீர்கட்டும் சிலேத் மத்தில் போகும்.

29-வது கவி

சேத்துமத்திற் குருநாடி சிங்கம்போலே
சிறிநிற்கி லதின்குணந்தான் சந்நிதோன்றும்
ஆற்பணத்தை யூடுருவத்த மருமாகில்
அசாத்யமாய் மரணகுறி தப்பாதப்பா
காற்றெனவே குருநாடி குன்றிப்போகில்
கழியும்வயிற் கடுப்பெடுக்குங் கைகால்வீங்கும்
ஏற்பனவு மில்லையில்லை திட்டஞ்சொன்னேன்
மிசைந்த குருநாடியது யிருத்திப்பாரே. 29

29-வது உரை

சிலேத்மத்தில் குருநாடி சிங்கம்போல் சீறி நின்றால் சன்னி யாகும், அது ஊடுருவி பார்த்தால் அசாத்திய மரணமாகும். குரு நாடி மெலிந்து நடக்கில் வயறு களிதல், கடுப்பு, கை, கால் வீக்கம் உண்டாகும்.

30-வது கவி

பாரப்பா குருநாடி பக்கம்பாற்கில்
பாரித்த சிலேத்துமந்தா னெதிரேமோதும்
கூரப்பா குருநாடி நேரேநிற்கில்
குற்றமில்லை வாதபித்த மிரண்டுசேரும்

தாரப்பா குருநாடி பின்னேவாங்கில்
தப்பாதே சாத்தியங்கள் தானுண்டாகும்
காரப்பா வுடலுக்கு ளுயிராய்நின்ற
கருவானகுரு நாடி யொன்றுகாணே. 30

30-வது உரை

குருநாடி பக்கமாக ஓடினால் சிலேத்மம் எதிரே மோதும். குருநாடி நேரே நிற்கும்போது பித்தம் இரண்டும் சேரும். குருநாடி பின் வாங்கி நிற்கில் தப்பாது அசாத்தியங்கள் உண்டாகும்.

31-வது கவி

ஒன்றுக்கு மெட்டாத நாடிநேர்மை
யூடுருவித் தானிருக்கு முண்மைகேளீர்
வண்டுகள்தான் மதுவருந்து நேர்மைபோல
வாதபித்த சிலேத்துமத்தின் மதுவையுண்ணும்
என்றைக்கும் வாதபித்த நடுவேநிற்கும்
ஏறுவதுங் குறைவதுவு மில்லையப்பா
கன்றுக்குப் பாலிறங்கும் பசுவைப்போல
காத்திருக்குங் குருநாடி காலைப்பாரே. 31

31-வது உரை

எதற்கும் எட்டாத குருநாடியானது சரீரமெல்லாம் ஊடுருவி மூலாதாரமாய் இருக்கும். உண்மையைச் சொல்லுகிறேன். வண்டுகள் தன் உயிருக்கு ஆதாரமாகிய மதுவை எவ்வாறு உண்பதற்காக மலரைப்பற்றிக் கொண்டிருக்கிறதோ அதுபோல் வாதம், பித்தம், சிலேத்ம மிரண்டும் குருநாடியின் இருபக்கமும் ஜீவனுக்கு ஆதாரமான சத்தைப்பற்றியே நிற்கும், அது குருநாடி ஏறுவதும் இறங்குவதும் இல்லாமல் ஒரே அளவாய் ஓடிக்கொண்டிருக்கும்.

32-வது கவி

குருநாடி நிலையறியாக் குருடரெல்லாங்
கூட்டமிட்டு சாத்திரத்துக் குவமைசொல்வார்

2

மருநாடி வாதபித்த சிலேத்மமூன்றின்
மத்தியமென் றிதையறியார் வார்த்தைசொல்வார்
கருநாடிகுருநாடி யாகக்காணும் கைமுறையால்
குருதொட்டுக் காட்டத் தோன்றும்
பெருநாடி சாத்திரத்தின் மயங்கிடாதே
புலத்தியா குருநாடி பின்னல்பாரே. 32

32-வது உரை

குரு நாடியானது வாதம்பித்தம் சிலேத்ம மத்தியில் மருவி யிருப்பதால் சாமானியமாகத் தோன்றுது. ஆகையால் குரு முகாந் திரமில்லாமல் அறிவதும் முடியாது. ஞானமென்ற நேத்திரமும் குருவு மில்லாதவர் குருடர்கூடி சத்திரத்தை கட்டுவதாக இரவில் சொல்லி பகலில் ஒருவர்போனவழி ஒருவருக்கும் தெரியாமலிருப் பதுபோல் ஆகும் குருநாடியே கருவிக் கர்த்தாவாய் உடலுக்கு ஆதார மாய் இருப்பதால் கைமுறையால் குருதொட்டு காட்டதோன்றும்.

33-வது கவி

சார்த்தப்பா வாதபித்த நடுவேபார்க்கில்
வாண்டதுபோன் மதுவுண்ணு மத்தியத்தில்
போற்றப்பா மூவிரலி முருவைத்தாண்டி
பூரணமா மூலமுத டுருவிப்பாய்ந்து
சாற்றப்பாவிசை நரம்பி னூடேசேர்ந்து
சந்திரமண்டலமே விச்சார்ந்து பின்னும்
நாற்றமுற்ற குருநாடி யெங்குஞ்சுற்றி
நடுவில்வரும் நேர்மைதனை நாடிப்பாரே. 33

33-வது உரை

வாதபித்த சிலேத்ம நடுவில் மது உண்ணும் வண்டுபோல் மூவிர லின் உருவைத்தாண்டி மூலமுதல் ஊடுருவி பாய்ந்து விசை நரம் புடன் சேர்ந்து சந்திரமண்டலமேறி பின்னும் எங்கும் பரவி நிற்கும்.

34-வது கவி

பம்பரம்போற் குருநாடி கிறுகிறென்று
பற்றிநிற்கும் வாதபித்த நடுவிலேதான்
அம்பரம்போற் குமுறியெழும் வாதபித்த
மையமென்ற நாடிமுத லாடியோடிக்
கம்பமுடன் மண்டலமுங் கண்மூன்றுஞ்சுற்றிக்
கத்திரிக்கோன் மாறலெனக்கட்டிச்சேர்த்து
தம்பமுடன் வாதபித்தநடுவிலேதான்
தாமதம்போலாடி நிற்குங் குருவிதாமே. 34

34-வது உரை

சுழன்று உலாவும் வாத-பித்த-நாடியில் கலந்து நிற்கின்ற குருநாடியானது. மூன்று நாடியிலும் ஒடிவாத பித்தத்தில் குமுரி ஓடியும் மும்மண்டலமும் சுற்றி கத்திரிக்கோல் போன்று மாறிமாறி வாதபித்த நடுவில் தப்பித்து நிற்கும்.

35-வது கவி

குருநாடி வாதமது நிற்கும்போது
கோழியுடன் அன்னமயில் குறியாமென்ன
வருநாடி பித்தத்தி னிற்கும்போது
கோழியுடன் அன்னமயில் குறியாமென்ன
குருநாடி பித்தத்தி னிற்கும்போது [காணும்
தெறித்துவிழும் விட்டிலைப்போற் றெளிந்து
பெருநாடி சாத்திரத்திலைய வேண்டாம்
பிராணகலை தனையறிந்து மாணம்பாரே. 35

35-வது உரை

குருநாடி வாதத்தில் கோழி - அன்னம்-மயில் நடைபோலவும் பித்தத்தில் நிற்கும் ஆமை-அட்டை நடையைப்போலவும் சிலேத்மத்

தில் விட்டில் பூச்சி துடிப்புபோலவும் நடக்கும் சூரிய சந்திரகலைகளை அறிந்து மரணத்தை தெரிந்துக் கொள்ளலாம்.

மரண நாடி :—

36-வது கவி

மரணமதை யறிந்ததற்கு குறியைக்கேளு
வழுவாதவிசை நரம்புகுளிர்ந்து காணும்
குரணமெனும் பொறிகளெல்லாம் தளர்ந்துமெத்த
விசைநரம்பு தான்றளர்ந்து விரைந்துவாங்கி
நறநறெனப் பற்கடித்து மணியும்கட்டு
நாவுலாந்து மூச்சயர்ந்து நடுக்கமுண்டாய்த்
துரணமெனும் வாதபித்த சிலேத்மமெல்லாஞ்
சேர்த்திமப்பாற் விட்டிலைப்போற் றுடிக்கிற்சாவா. 36

36-வது உரை

விஷ நரம்பு குளிர்ந்தும் பொறிகளெல்லாம் தளர்ந்தும் விஷ நாடி வரண்டும் பற்கடித்தும் நாக்குவரண்டும் மூர்ச்சை அயர்ந்தும் நடுக்கமுற்று வாத-பித்த-சிலேத்ம மூன்று நாடியும் சேர்ந்து விட்டிலைப்போல் துடித்தால் மரணமுண்டாகும்.

37-வது கவி

துடிகொண்ட சேத்துமந்தான் வெள்ளம்போலே
சுருசுருக்காய் மடமடென வோடுமாகில்
அடிகண்டு மற்றுநாள் மரணமாகும்
அப்பனே பித்தமது சிதறியோடில்
முடிகொண்ட மூன்றுநாள் சாவார்சொன்னேன்
முழுமையுமே வாதமது சிதறியோடில்
இடிகண்ட எட்டாநாள் மரணமாவா
ரின்பமாய்க் கண்டறிந்து யிடைந்துநில்லே. 37

37-வது உரை

சிலேத்மம் வெள்ளம்போல் விறைவாக துடித்தோடினல் 8-நாள் மரணமுண்டாகும் இவ்விதக் குறிகள் ஏற்பட்டால் வைத்தியம் செய்ய விலகிக் கொள்ளவும்.

38-வது கவி

நில்லப்பா வாதபித்த மிரண்டுங்கூடி
நிலைதப்பிச் சிதறியது வோடுமானல்
கொல்லுமப்பா பதினைந்து நாளிற்றனுங்
குணமாக விதனுடனே ஐயங்கூடில்
வெல்லுமப்பா மண்டலத்தில் யாக்கைபாழாம்
விதமாக மூன்றுமே ஒன்றாய்கூடி
அல்லப்பா அரணைவால் துடியேகாணில்
அப்பனே யவர்பிழையா ரறிந்துபாரே. 38

38-வது உரை

வாதம் பித்தம் இரண்டும் கூடி சிதறி ஓடினல் 15-நாளிலும் வாதபித்தத்துடன் சிலேத்மம் சேர்ந்தால் 40-நாளிலும் மரணமுண்டாகும். மூன்று நாடியும் கூடி அரணைபோல் துடித்தால் அவன் பிழைக்கமாட்டான்.

39-வது கவி

பிழையாத வாதபித்த சிலேத்மங்கூடி
பிரண்டுவருந் தேள்கொடுக்குப் போலேயோடி
உளையாகவோடம் போலோடு மானல்
உத்தமனே திங்களிலே மரணமாவார்
குளையாதநாடி யின்மெய்க் குறியைக்காணர்
கூட்டமிட்டுக் குருவெனவே பிரசங்கிப்பார்
விழியானகண் ரண்டுமற்றக் கண்ணும்
விதியறிந்தார் சந்தியுமே விலகும்பாரே. 39

39-வது உரை

வாதம் பித்தம் இரண்டும் சேர்ந்து தேள்கொடுக்குப்போலவும் ஓடம்போலவும் ஓடுமாகில் 1-மாதத்தில் மரணமுண்டாகும். நாடிகளின் உண்மையான குறிகளைக் கண்டறிந்தவர்கட்கு சந்நியும் பயந்து விலகும்.

40-வது கவி

சந்நியெழு போதிலிந்த நாடிமூன்றும்
சாதகமாய் சுழல்வண்டு தண்ணீர்மீதில்
உன்னியது பரபரத்தேயோடு கிறுப்போல்
ஓடியெங்கும் வாதபித்த சிலேத்மமெல்லாம்
தண்ணியது சாதகமாய் வருமேயாகில்
கதிப்பாகும் வாதபித்தம் பம்பரம்போல்
பின்னியது விட்டிலைப்போற் றெரிந்துவீழிற்
பேச்சில்லை மரணமென்றே பிரித்துச்சொல்லே 40

40-வது உரை

வாதம் பித்தம் சிலேத்மம் மூன்றும் தண்ணீரில் சுழல்வண்டு சுற்றுவதுபோல் ஓடி எங்கும் வருமானாலும் விட்டில்போல் தெரித்து வீழ்ந்தாலும் மரணமுண்டாகு மென்றறிக.

41-வது கவி

சொல்லப்பா வாய்வுக்கு மந்தத்துக்குந்
துணையாக அமர்ந்துமெத்தத் தளர்வாபோடும்
அல்லப்பா பசிதனக்குத் தூங்கியோடும்
அப்பனே சன்னிதான் புழுப்போலோடும்
நில்லப்பா வயிற்றுவலி கண்டபேற்கு
நேராக வுள்ளுறவாய் வாங்கியோடும்
கல்லப்பா கிரந்தியென்ற நோய்தனக்குங்
கறையுடைந்த வருவியைப்போற் காணுங்காணே. 41

41-வது உரை

வாதம் பித்தம் சிலேத்மம் நாடியானது வாய்வுக்கும் மந்தத்திற்கும் தளர்ந்து ஓடும். பசியினால் தாங்கி ஓடும். சந்நீக்கு புழுப்போல் ஓடும் வயிற்றுவலிக்கு நேராக உள்ளுவைப்போல் ஓடும் கிரந்திக்கு கரையுடைந்து ஓடும் நதிபோலோடும்

42-வது கவி

காணிதத்தில் வாதமென்றோர் சேத்பவாதம்
காணுமடா சூலையென்றாற் சேத்மபித்தம்
விரணமுடன் புன்புறைக்கு வாதபித்தம்
விதியறியாப் பீனசந்தான் பித்தசேத்மம்
தூரணமுட னீற்பாடு கர்ப்பப்பாடு
சொல்லுகின்ற நாடியெல்லாஞ் சுழன்றுகாணும்
கிரணமென்ற பாம்புவிஷந் தாதுவெல்லாங்
கெதிகெட்டுக் காணாது கெற்பமாமே. 42

42-வது உரை

வாதத்திற்குச் சிலேத்ம வாதமும், சூலைக்குச் சிலேத்ம பித்தமும், புண்புரைக்கு வாத பித்தமும் பீனிசத்திற்கு பித்த சிலேத்மமும் நீர்பாடுக்கு நாடிகள் சுழன்றும் ஓடும். கிரணம் பாம்பு விஷம் இவைகளுக்குத் தாது கெதிகெட்டு வோடும்.

வாய்வுக்கும் மந்தத்துக்கும் கெர்ப்பிணிக்கும் வியாதி நாடி :—

43, 45-வது கவி

கெர்ப்பிணிக்கு வாதபித்தங் கலங்கிக்காணுங்
கிராணியதி சாரமென்றாற் றளர்ந்துகாணும்
உற்பவித்த பீலிகாசரோகம் உற்றிடிலோ
சிலேத்து மந்தான் மீறிக்காணும்

பிற்பிடித்த விஷநீருஞ்சோகை பாண்டும்
பிலமானால் வீணைபோல் மீட்டும்பாரு
பற்பிடித்த மேகமென்றால் பித்தமீறும்
பாலகனே கங்கைகொண்டு நீராம்பாரே- 43

நீர்மேக மானவர்க்கு நாடிதானும்
நிர்ணயமாய் நாடியெல்லாம் பிலமேகெட்டுக்
கார்மேகம் போலேவந்த எரியின்மேலே
கண்டுவிழும் புழுப்போலே புரட்டிக்காணும்
சிர்மேக மானவர்க்கு நாடிதானுஞ்
சிறிநிற்குங் குருநாடி திறமாய்த்தானும்
பேர்மேகங் கடுத்திடுகில் வாதபித்தம்
பின்னியது துடித்துவரும் உற்றுப்பாரே. 44

உற்றதொரு கெர்ப்பிணிக்கு சேத்மபித்தம்
உறுதியெனும் விக்கலுக்குச் சேத்மவாதம்
மற்றதொரு சுரந்தனக்கும் வாதபித்தம்
வகையான கணக்காய்ச்சல் பித்தவாதம்
குற்றமில்லை யிதின்குணங்கள் மருந்தாற்றீரும்
குருவான பூரணத்தின் குறிதான்பாரே. 45

43, 45-வது உரை

கெற்பிணிகளுக்கு வாதம் பித்தம் கலந்து ஓடும் கிராணி தளர்ந்து ஓடும் யீளை காசரோகங்களுக்கு சிலேத்மம் மீறியோடும். விஷநீர் கோகை பாண்டுக்கு வீணைபோல் ஓடும் மேகத்திற்குப் பித்தம்மீறியோடும். மேகநீருக்கு நாடிகள் வலுவற்று நெருப்புமேல் விழுந்த புழுப்போல் துடித்தோடும் மேகத்திற்குக் குருநாடி சிறியோடும் மேகக் கடுப்பால் வாதம் பித்தம் பின்னேர்ந்து துடித்தோடும். கெர்ப்பப் பிணிக்குச் சேத்மபித்தம் விக்கலுக்கு சேத்மம். சுரத்துக்கு வாத பித்தம் அளவுக்கு மீறிச் சுரமிருந்தால் பித்தம் வாதமும் ஓடும்.

அஷ்ட கர்மப்பாவை :—

46, 55-வது கவி

பாரப்பா பூரணகாவியத்திற் றானும்
பாடினேன் அஷ்டகர்மப் பாவைதன்னை
நேரப்பா அப்பாவை தன்னைநீயும்
நினைவாக மனதிலே நிறுத்திக்கொண்டு
சாரப்பா வுனதறிவை மேலுக்கேற்றிச்
சந்திரனைச் சூரியனிற் சாரப்பண்ணி
கூரப்பா அக்கினியிற் கூர்ந்துநின்று
குணமான பார்வைதனைக் குருவாய்போற்றே. 46

போற்றியே நடுமனையி னின்றுக்கொண்டு
பூரணமாய் நயமயந வென்றேயோதி
பார்த்திபனே கருப்பூர தீபம்பார்த்து
பாங்காக விபூதியைநீ கையில்வாங்கி
நேர்த்தியா யனுதினமும் பூசிப்பூசி
நீயிருக்க வதினுடைய நேர்மைகேளு
பார்த்தபேர் சகலருந்தம் பனமேயாவார்
பாலகனே பராபரத்தைப் பணிந்துபோற்றே. 47

பணிந்துநின்ற பொற்பாவை தன்னைநீயும்
பாலகனே சுழிமுனையான் மேருக்கேற்றி
அணிந்துநின்று யவசிவய வென்றுநீயும்
அப்பனே கர்ப்பூர தீபம்பார்த்து
துணிந்து நின்றவிபூதிதனைக் கையில்வாங்கிச்
சுத்தமுடன் * லலாடமதிற் பூசிவிட்டால்
அணிந்துநின்ற சத்துருக்கள் வசியமாவார்
அனைவோருந்தான் வணங்கி நிற்பார்பாரே. 48

கேளப்பா பொற்பாவை தன்னைநீயுங்
கெடியாகக் கேசரத்தில் நிறுத்திக்கொண்டு
வாளப்பா பூரணத்தின் மனதையூன்றி
மயநயமவென்று நீமனதிற்கொண்டு
வேளப்பா கர்ப்பூர தீபம்பார்த்து
விபூதிதனை யுத்தளமாகப் பூசிக்கொண்டால்
கேளப்பா யொன்றுமில்லை யெல்லாமோகங்
குணமான பூரணத்தின் கிருபையாலே 49

கிருபையென்ற பூரணத்தார் பாவைதன்னைக்
கர்ச்சிதமா நடுமனைவினுட் டிக்கொண்டு
வருமமுடன் சிவயவசிவென்று நீயும்
மார்க்கமுடன் கர்ப்பூரதீபம் பார்த்துப்
பெருமையுடன் விபூதியுத் தளமாய்பூசில்
பேரான சத்துருக்கள் மரணமாவார்
அருபமென்ன பூரணத்தி னுண்மையாலே
யசையாத நோயெல்லா மகன்றுபோமே. 50

போமப்பா பூரணத்தார் பாவைதன்னைப்
புத்தியுடன் சுழிமுனையாற் கண்டுக்கொண்டு
காமப்பா வசியசிவ வென்றுநீயுங்
கனமான கர்ப்பூர் தீபம்பார்த்தே
ஓமப்பா வருதினமும் பூக்கொண்டால்
உன்னுடைய சத்துருக்க ளோடிப்போவார்
காமப்பால் கொண்டுநிதங் கருவினின்று
கண்மணியாற் சின்மணியைக் கண்டுபோற்றே. 51

போற்றப்பா பொற்பாவை தன்னைநீயும்
புத்தியுள்ள வறிவினிடம் பொருந்தவைத்து
பார்த்தப்பா நயமயா வென்றுநீயும்
பத்தியுடன் கர்ப்பூரதீபம் பார்த்துச்

சாற்றப்பா விபூதியைநீ லலாடமீதிற்சகலருமே
யாகிருஷ்ண மாந்தன்னைச் சேர்வார்
காத்தப்பா பூரணத்தைப் பார்க்கப்பார்க்கக்
கனமாய் கைதான் தீர்ந்து சோதியாமே. 52

சோதியென்ற பரஞ்சோதிப் பாவைதன்னைச்
சுத்தமுட னுச்சியென்ற மேருக்கேற்றி
நீதியுடன் வயசியவ வென்றுநீயும்
நினைத்துக் காப்பூர தீபம்பார்த்தே
ஆதியென்ற விபூதியைநீ கையில்வாங்கி
அணிந்துகொண்டால் துவேஷணமா மறிவார்பாரு
பாதிமதி யணிந்தபரன் கிருபையாலே
பராபரத்தின் குறிகண்டே யறிவாய்நில்லே. 53

நில்லென்ற நிலைதனிலே நின்றுக்கொண்டு
நிலையாத பொற்பாவை நினைவிற்சேர்த்து
சொல்லுகின்ற மந்திரந்தான் சியவயசியென்று
சொல்லுமே கர்ப்பூர தீபங்கொண்டே
அல்லுமே விபூதியையுத் தளமாய்ப்பூச
அனைவோரு முனைக்கண்டோர் பேதலிப்பார்
வெல்லுமே யட்டகர்ம மெட்டுமாடும்
விதமாகக் கண்டறிந்து மேலேபாரே. 54

மேலான கும்பத்தை யுற்றுப்பாரு
மேன்மையுள்ள மூன்றெழுத்து மொன்றாய்க் [காணும்
காலான வாசியிட வெழுத்துமங்கே
கனமான பிரமாவின் கருணையங்கே
மாலான மாலினிட பதியுமங்கே
மந்திரங்கண் மூன்றெழுத்தாம் மறைந்தங்கே
சேலான செயலறிந்தா லெல்லாமுண்டு
செயலறிய சற்குருவைத் தேடிப்பாரே. 55

46, 55-வது உரை

பூரணக் காவியத்தில் சொல்லியிருக்கும் மஞ்சட் * பாவையை அர்ச்சித்துப் பூசித்து ரவிமதி இரண்டையும் ஒருமிக்கச் செய்து சுழிமுனையில் நின்று அப்பாவையைக் குருவாகப் பாவித்து "நயமய" எனச் ஜெபித்துக் கர்ப்பூரத் தீபத்து விபூதியெடுத்து அணிந்து கொண்டால் சகலரும் தம்பனமாவார். "யவசிவய" வென்று ஜெபித்து விபூதியை நெற்றியில் லணிந்துகொண்டால் ஸ்திரீ வசிய மாகும் "மய்நயம" வென்று ஜெபித்து அணிந்துகொண்டால்மோகனமாகும். "சிவயவசி" யென்று ஜெபித்து விபூதியை யணிந்துகொண்டால் மரணமாகும் வியாதிகள் விலகும் "வசிசிவ" வென்று ஜெபித்து விபூதியை யணிந்துகொண்டால் பகைவிலகும் "நயமயந" வென்று ஜெபித்து விபூதியை நெற்றியில் அணிந்துகொண்டால்,ஆக்ரோஷண அழைப்பு)யாகும் "வயசியவ" வென்று ஜெபித்து விபூதியை யணிந்துகொண்டால் வித்துவேஷணமாகும். "சிய்வசிய" என்று ஜெபித்து விபூதியை அணிந்துகொண்டால் பேதமையாகும் மற்ற விபரங்கள் குருமூலமாய் தெரிந்துகொள்ள வேண்டும்.

மூப்பு, மூன்றுவித உப்பு :—

56, 57-வது கவி

பாரப்பா வின்னமொரு செய்திகேளு
　　பதிவான முப்பூவை யறியவென்றால்
வேரப்பா சொல்லுகிறே னன்றாகக்கேளு
　　பெருமையுள்ள பிறப்பிறப்பு மகற்றுமுலி
வேரப்பா வடிமுடி நடுவுமாகி
　　வேதாந்த சித்தாந்த நாதாந்தமாகி
சாரப்பா வாலையுடன் புவனையாகி
　　கருணையுள்ள திரிபுரையின்கண் மூன்றுமே. 56

* பாவை—சத்தி.

மூன்றான பூநீற்றைச் சலத்திற்கொட்டி
முத்துபோற் றெளிவிருத் தைந்துவிதையாச்சு
நன்றான வெடியுப்புப் பலந்தானாலு
நாட்டத்திலே சினமோடிந் திரண்டே
ஒன்றான சத்தியெட்டுச் சோடசந்தா
னுத்தமனே கல்வத்தி லிட்டுக்கொண்டு
சென்றுட்ட வெண்கருவி லெருக்கம்பால்வார்
சிறந்தபழச் சாறாட்டி யரைத்துப்போடே. 57

56, 57-வது உரை

பூநீற்றை ஜலத்திற் கொட்டி முத்துப்போல் தெளியவைத்து இருத்து 5-தடவை முன்போல்செய்து எடுத்துக்கொண்டு வெடியுப்பு பலம்-4. படிகாரம் 2-பலம் இந்துப்பு 2-பலம் சத்தி 8-ம் கல்வத்திலிட்டு கோழிமுட்டை வெண்கருவாலும் வெள்ளெருக்கன் பாலாலும் எலுமிச்சம் பழச்சாற்றாலும் அரைக்கவும்.

சவர்க்கார வைப்பு :—

58, 59-வது கவி

போட்டரைக்கச் சூடனொரு காசுபோடு
புகழான சரக்கெல்லாஞ் சேரவொன்றாய்
நீட்டரைக்கச் சாமம்ரண்டுக் கதிகம்வேண்டாம்
நிலையான வில்லைசெய்து நினைவாய்க்கேளு
காட்டையா ரவிதனிலே காய
கனமான சுண்ணம்புக் குள்ளேவைத்தே
ஆட்டமுட னடுப்பேற்றி எரிப்பாய்சாமம்
அத்தோடே வாங்கிமெல்லப் புடத்தைப்போடே.
புடமெடுத்தே யாறவைத்துப் பூரணத்தைநோக்கிப்
புத்தியுடன் றனெடுத்து வெளுத்துநீரும்

குடமெடுத்த கெங்கைமின்னாள் மாலின்றேவி
குதிகொள்வா ளுன்முகத்தில் குறைவொன்றில்லை
கறுவிட்டுமெலித்த சவர்க்கார குருவிதாச்சு
வெள்ளாட்டிற் கெதிர்ப்பட்ட வேங்கையாச்சே.

58, 59-வது உரை

அரைக்கும்போது கற்பூரம் 1-காசெடை போட்டு 2-சாமம் அரைத்து வில்லைசெய்து வெய்யிலில் காயவைத்து சுண்ணாம்புக்குள் வைத்து அடுப்பேற்றி 1-ஜாமம் எரித்து எடுத்துப் புடமிட்டு எடுத்துப் பார்க்க வெளுத்து நீற்றிருக்கும்.

முப்பூவின் பெயர் :—

60-வது கவி

வேங்கையென்ற முப்பூவின் பேர்தான்கேளு
வெறித்தசிங்கம் பேரண்டம் வெள்ளாச்சாரை
தாங்கையென்று சிறுநாகம பட்சிராசன்
சாக்கான செந்துவிற்குக் காலன்காலன்
பாங்கையெல்லாங் கண்டவனே வாதஞானி
பதிவான வண்டமடா ஆதியுப்பு
ஓங்கியென்ற சத்தியுப்பு வழலையுப்பாம்
எண்மையுள்ள நாதவுப்பை வுகந்துகேளே. 60

60-வது உரை

முப்புவின் பெயர் சிங்கம் பேரண்டம் - வெள்ளைச்சாரை-தாங்கை சிறுநாகம்பட்டிராசன்-காலன் அண்டம் ஆதியுப்பு - சத்தியுப்பு, வாலையுப்பு.

நாதவுப்பின் பெயர் :—

61, 62-வது கவி

உகந்துநின்ற வாதமடா வாலைவாலை
ஓங்கார றீங்கார ஒருமைப்பிள்ளை

செகந்தனிலே திருவென்றுஞ் செந்தீயென்றுந்
திட்டான தீட்டென்றுஞ் செல்வியென்றும்
அகந்தனிலே யமிர்தமென்றுஞ் செந்தேனென்றும்
அன்பான விஷமென்றும் பேச்சியென்றும்
முகந்தனிலே சிந்தூர திலர்தமென்று
மோனமுள்ள வாலையடா சத்திகேளே. 61

சத்தியென்ற வுப்பினுட பேரேதென்றாற்
றயங்காத துரிசையென்றுங் காரமென்றுஞ்
சித்தான கெந்தமென்று மண்தானென்றுஞ்
சிவசிதா வன்மையத்த னமமென்றும்
உத்தியென்ற பராசத்தி பெருமைக்காரி
யொடுங்காத வாசமுள்ள வியோமசித்தி
கற்றறு மனம்பதருங் கைகாவ்கூசும்
கருணையுள்ள சத்தியைநீ கண்டாற்றனே. 62

61, 62-வது உரை

நாத உப்புவின் பெயராவது வாலை ஒங்காரம்-றீங்காரம் ஒரு மைப் பிள்ளை - திரு - செந்தீ - தீட்டு-செல்வி அமிர்தம்-செந்தேன்-விஷம்-பேச்சி சிந்தூரம் திலர்தம் உப்பின் பெயர் துருசு காரம் கெந்தம் மண்-உன்மயம் பராசத்தி-பெருமைக்காரி.

சத்தியுப்பு வழலை பெயர் :—

63, 65-வது கவி

தானன வழலையிடி பேர்தான்கேளு
கருவானவண்ட கேசரிதா னென்று
கோனனகொடி முடியாம் பொதியிலென்றுங்
குருவான பீடமென்றுங் குருக்களென்றுங்
தேனன சோதியென்றுங் தீபமென்றுங்
தெவிட்டாத வமிர்தரச வாக்யமென்றுங்

காணாத பூரணமாம் வழலையென் றாங்
கண்டுபார் முப்பூவின் கருவிதாமே. 63
ஆமப்பா முப்பூவு மொன்றாய்க்கூடி
யாதியிலே மும்மூர்த்தி யானார்பாரு
காமப்பால் கானற்பாற் சோமப்பாலுங்
கலந்துநின்ற ரவிமதியு மக்கினியுமாகி
ஓமப்பா மூலமுத லாறுமாகி
உடன்சேர்ந்த பொருளதனை உற்றுப்பாரு
தாமப்பா முப்பொருளென் றிதற்குப்பேரு
தன்மையுள்ள மூலமுதன் முடிவுவரையுமெண்ணே.
எண்ணவே யின்னம்வெகு பேர்களுண்டோ
வென்மகனே புத்தியினா லறிந்துகொண்டு
சொன்னதொரு கருமானமே தென்றாலே
சொல்லறிந்து சொல்லுகிறேன் பிண்டம்பிண்டம்
மன்னவனே பிண்டமென்றால் மலைக்கவேண்டாம்
மந்திரகலை வழலைமலர் பூக்குங்காலம்
முன்னமே யக்காலமறிந்து மைந்தா
முத்திகொண்ட நாதமதில் விந்துமாச்சே. 65

63, 65-வது உரை

அண்ட கேசரி-கொடிமுடி பொதி, குருபீடம் குருக்கள் ஜோதி-தீபம் அமிர்த ரசவாக்கியம்-பூரணம்-வழலை-மும்மூர்த்தி-காமப்பால்-ரவி-மதி அக்கினி முப்பொருள் ஒன்று பெயர் அவைகளே உயிர்களுக்கு மூலாதாரம்.

பிண்டம் அண்டம் :—

66, 68-வது கவி

விந்துநிலையறிந்து விந்துபாயுங் காலம்
வேதாந்த நாதமதுக் குயிருண்டாகி

வசாந்ததுடனே யிரண்டு மணியுமாகிச்
சோதிமதி யானறுவும் பிறையுமாகி
வந்தமதிப் பிறையதுவும் வட்டமாகி
வட்டம்திரண் டுருவாய் மண்ணுமாகி
அந்தமுள்ள மண்ணுதறி உப்பாய்நின்றே
யாதியென்ற பொருளான பிண்டமாச்சே. 66

பிண்டமென்ற சவுக்கார வித்தைதன்னை
பேருலகிலா ரறியப்போரு ரப்பா
கண்டவர்கள் கோடியிலே யொருவருண்டு
கைம்முறையா யவர்காட்டிற் குருவுந்தோன்றும்
பண்பாக நின்றபூரணத்தைக் கண்டாற்
பாலகனே முப்பூவு நன்றாய்த்தோன்றும்
விண்டதில்லை கண்டவர்கள் சொல்லார்சொல்லார்
வீணுகச் சட்டலைந்து விதியென்பாரே. 67

விதியான விதியறிந்தோன் வாதங்காண்பான்
விதியறியான் பதியறியான் வீணன்வீணன்
சதியாக முன்சொன்ன முப்பூவாலே
சகலதொழில் கைம்முறையாய் செய்யலாகும்
பதியான பதியறிந்தே யமிர்தமுண்டு
பாலகனே லலாடமதிற் பற்றிக்கொண்டு
கெதியான மோட்சமென் னின்றுயானல்
கேசரத்திற் கேசரியாள் கிருபையாமே. 68

66, 68-வது உரை

விந்துவின் நிலையறிந்து விந்து பாய்ந்து வேதாந்தமாகிய நாதாந்தத்துக்குள் உயிருண்டாகி (ரவி-மதியாகிய பிறை) சூரிய - சந்தரனுகிய வடிவமாகி வட்டம் திறண்டு பிண்டமாகிய மண்ணுகி, அந்தரமாகிய உலகில் தோன்றி உப்பாய் நின்று ஆதியென்ற பொருளாகிய பிண்ட ரூபமான இதை குருமுகாந்தரமாகக் கைமுறையாகத்

தெரிந்துகொள்ள வேண்டும். இப் பூரணத்தை யறிந்தவனே வாதத்தைக் காண்பான் செய்தும் முடிப்பான்.

வசியத்திற்கு விபூதி :—

69, 71-வது கவி

கிருபையுள்ள * புலத்தியனே வசியமொன்று
கெணிதமுடன் சொல்லுகிறேனன் றுய்க்கேளு
துருவமுள்ள வுருத்திர பூமியிலேசென்று
சுகமாகவெந்த அஸ்தி எடுத்துமைந்தா
அருவமுள்ள அஸ்தியுடன் விஷ்ணுமூலி
ஆதிசத்தி தன்னுடைய வேருங்கூட்டிக்
கருவையினிச் சொல்லுகிறேன் கலசப்பாலார்
கருணையுடன் றனரைத்தே யுண்டைசெய்யே. 69

செய்யடா வுண்டைதனை யுலரவைத்து
செம்மையுட னெருவடுக்கிப் புடத்தைப்போடு
மெய்யடா சொல்லுகிறே நீறிப்போகும்
வேதாந்த மானதொரு நீற்றைவாங்கி
வையடா சவாதுடனே புனுகுசேர்த்து
மார்க்கமுடன் அங்கெனவே லட்சமோதி
மையமென்ற நெற்றியிலே விபூதிபூசி
மார்க்கமுடன் அரசரிடஞ் சென்றுபாரே. 70

சென்றமிக நின்றுடனே யிராசமோகம்
சிவசிவா செகமோகம் ஸ்ரீவசியமாகும்
அண்டர் பிரானருள்பெருகி வசியமுண்டாம்
அப்பனே ஓம்கிலியும் றீயுமென்று

* புலத்தியன்-சிஷியன், மலைவாசி. அல்லது புலத்திய ரிஷி.

பண்டுபோலி லட்சமுருவேற்றிப் பின்னர்
பாலகனே லலாடமிசைப் பூசிக்சென்றால்
தொண்டரென்றே சத்துருக்கள் வணங்குவார்கள்
துஷ்டனென்ற மிருகமெல்லாம் வசியமாமே. 71

69, 71-வது உரை

சுடுகாட்டிற்குச் சென்று வெந்த எலும்புகளை எடுத்து அத்துடன் விஷ்ணுக்கரந்தைமூலம் சத்திமூலம் இவைகளை முலைப் பாலால் அரைத்து உருண்டை செய்துகொண்டு புடம்போட்டு ஆரிய பின் அதையெடுத்து அதில் சவ்வாது புனுகுசேர்த்து 'அங்' என்று லக்ஷ உரு ஜெபித்து நெற்றியிலணிந்துகொள்ள இராச மோகம் செகமோகம் வசியம் உண்டாகும் ஓம் கிலியும் றீயும் என்று லக்ஷ உருவு ஜெபித்து நெற்றியிலணிந்து கொண்டால் சத்துரு வசியமாகும்.

வசியக்காப்பு :—

72, 74-வது கவி

ஆமென்ற வசியமொன்று சொல்லக்கேளு
ஆதிமுதலான கொடியருகு வாங்கி
ஓமென்று கண்டித்து மதிலிற்போட்டே
ஒருமையுடன் மண்டலஞ் சென்றெடுத்துப்பாரு
நாமென்ற நீரதுவே நன்றாய்வற்றி
நடுவான கொடியதுவும் பதமாய்நிற்கும்
தாமென்று தன்மயமா மந்தமூலந்
தருவான மூலமதின் றன்மைகேளே. 72

தன்மையென்ன வெள்ளியுடன் செம்புசேர்ந்து
தருவான தங்கம்மூன்று மொன்றும்
உண்மையுடன் தானுருக்கித் தகடுதட்டி
உறுதியுள்ள மூலமதைவைத் துருட்டிச்

செம்மையுடன் ரவிவளையம் போலேசெய்து
தெரியாமற் பொதிந்ததின்வாய் சேர்த்துக்கொண்டு
நன்மைபெறச் சற்குருவைத் தியானம்பண்ணி
ஞாயிறிலேசத்தி முன்புவைத்துப் போற்றி. 73

வைத்தெடுத்தார விவயளம் விளக்கித்தன்னை
வலதுகையிற் றூன்பூட்டி யிருப்பாயானல்
மைத்திகழும் விழியாரும் மன்னர்கூட்டம்
மகத்தான மிருகமுதல் வசியமாகும்
மெய்த்ததோளிம் முறைதான் அதிகவித்தை
வேதாந்த பூரணத்தில் விண்டமார்க்கம்
உற்றதொரு சேதிதன்னை யுலகத்தோர்க்கே
யுரையாதே யுரைத்ததினு லுறுதிப்போமே. 74

72, 74-வது உரை

கொடியருகுவேரை ஓம் என்று சொல்லி துண்டித்து மதிலிற் அல்லது குப்பியில்போட்டு இரவில் காற்றுப்படும்படி வெளியில் ஒரு மண்டலம் வைத்து எடுத்துப் பார்க்க நீர்சுண்டியிருக்கும். அதை வெள்ளி செம்பு தங்கம் மூன்றும் ஒன்றாக்கி தகடுதட்டி தகட்டில் வைத்து உருட்டி வளையம்செய்து வாய்மூடி ஆதிவாரத்தில் சத்தி பூசையில் வைத்து பூஜித்து குருத்தியானம்செய்து யெடுத்து வலது கையில் அணிந்துகொண்டால் ராஜாக்கள் ஸ்திரீகள் மிருகம் முதலிய வசியமாகும்.

வசியமை :—

75, 76-வது கவி

போக்கான இன்னமொரு வசியங்கேளு
புகழ்பெரிய ஆவின்கோரோசனம் கற்பூரம்
வாக்கான * கண்ணணிட மூலிவேரும்
மகத்தான சந்தனமும் புனுகுங்கூட்டி

---

* கண்ணணிட மூலி - விஷ்ணுக்கரந்தை.

தாக்ஷான மந்திரம் ஓம்றீங்வசி
சர்வமோகினி வசியமென் றேயோது
தேக்கான தில்லைநட மாடும்போலே
செந்துவெல்லாந் தேடிநின்று கதறும்பாரே. 75

பாரப்பா கிராம்பொன்று கூடச்சேரிற்
பரைவசியம் ஜெகவசிய மிரண்டுமாடும்
நேரப்பா உள்ளங்கை உள்ளங்காலில்
நின்றழுக்குஞ் சவ்வாது சேர்ந்துதானல்
தேரப்பாமந் திரத்தையென்ன சொல்வேன்
திரிலோக மூன்றுமே வசியமாகும்
காரப்பா மந்திரத்தை லட்சமோதில்
கருவியெல்லாம் வசியமடா கண்டுபாரே. 76

75, 76-வது உரை

பசுவின் கோரோஜனை பச்சைக் கற்பூரம் விஷ்ணு காந்தை வேர் சந்தனம் புனுகு கூட்டி "ஓம் றீங் சர்வமோகினி வசிய" மென்று ஜெபிக்க, சர்வ வசியமாகும். (கிராம்பு) லவுங்கம் சேர்த்தால் தெய்வ வசியம் உலக வசியமாகும். உள்ளங்கை உள்ளங்காலிலுள்ள அழுக்கும் சவ்வாதும் சேர்த்தால் மூன்று லோகமும் வசியமாகும் ஒரு லக்ஷ உருவு ஜெபித்தால் கருவிகளெல்லாம் வசியமாகும்.

உருமாற்றமை :—

77, 79-வது கவி

வசியமென்ற மாற்றமொன்று சொல்லக்கேளு
வால்நீண்டு இருக்கின்ற கரிச்சான்பிச்சு
வசியமென்ற பச்சோந்தி பச்சைப்பாம்பு
வண்மையுள்ள பாம்பாணை பிச்சுங்கூட்டி
வசியமென்ற கரும்பூனை கருங்குரங்கு
மார்க்கமுள்ள கண்ணிரண்டு பிச்சுங்கூட்டி

வசியமென்ற யானைகண் கட்டித்தூரில்
மார்க்கமுடன் றான்கருக்கி கல்வத்தாட்டே. 77

ஆட்டுவாய் புனுகுடனே சவ்வாதுகூட்டி
அப்பனே சூதகமாநாதம் விந்துவிட்டே
ஆட்டியே யானையிட தந்தச்செப்பில்
அப்பனே வழித்துப்வைத்துப் பதனம்பண்ணி
ஆட்டென்ற தாம்பரத்திற் சிலைசுற்றி
அப்பனே வையாட்டான் மைகாணாது
ஆட்டினதோர் மையதனிற் பணம்போல்நெற்றில்
அணிந்திடவே நின்னுருவ மாருங்காணார். 78

காணாதே போகுமடா மையின்சூட்சங்
கருவாக உலகத்தோ ரறிந்தாரானால்
வீணாகப்போகாது கொலைகள் செய்வார்
விருதுபெற்ற சித்தருன்னை வைவாரப்பா
தோணாத மையிதனை வைத்துக்கொண்டு
துருவமென்ற ஆயிரத்தெட்டடி. தழிநின்றால்
காணாதுகருவி தொண்ணூற்றாறு முன்னைக்
கைலாயத் திருநடனங் காணுவாயே. 79

77, 79-வது உரை

கரிசான் குருவி பிச்சு - பச்சோந்தி பச்சைப்பாம்பு பாம்பரனை இதுகள் பிச்சு - கரும்பூனை கருங்குரங்கு இதுகள் கண்ணும் பிச்சும் யானைக்கண் அல்லது யானைவிரட்டிச் செடியை கருக்கிக் கலவத்திலிட்டு ஜவ்வாது நாதம் அல்லது பனிதர் விந்து கூட்டி அரைத்து தந்தப் பரணையில் பத்திரப்படுத்திவைத்துக்கொண்டு பணவெடை நெற்றியிலிட உருமாறும் ஒருவர் கண்ணுக்கும் உருவந் தெரியாது. இது மூலமாய் அநேகமான பாவங்கள் சம்பவிக்குமாகையால் வெளிப்படுத்த வேண்டாம்.

தாரத்து செய்தியறியுமை :—

80, 82-வது கவி

காணுதற்கே யின்னமொரு கருவைக்கேளு
காசினியில் வேரெல்லாங் காய்க்கும்பூங்குந்
தோணுதற்குச் சொன்னபலா வேரேமைந்தா
சுத்தமுடன் றாணுலர்த்தி நறுக்கிக்கொண்டு
பூணுதற்கு மால்தேவி நருந்திக்கொஞ்சம்
புத்தியுடன் பாம்பரணை பிச்சுங்கூட்டி [டே
ஆணுவத்தான் மூன்றுமொன்றாய் பொடித்துக்கொண்
வப்பனே அயக்கரண்டி தன்னிற்போடே. 80

தன்னிலே பசுநெய்யால் வறுத்துக்கொண்டு
சாதகமாய் காகிதத்திற் றழாவிவைத்தே
உன்னிதமாய் பசுநெய்யா லறைத்துமைந்தா
உருதியுள்ள தந்தமென்ற செப்பில்வைத்துத்
தன்னிலையை தானறிந்து தியானஞ்செய்து
தன்மையுள்ள வெற்றிலையிற் றடவிப்பாரு
உன்னிமாய வெகுதூர முள்ளசெய்தி
உறுதியுடன் தோணுமடா வுற்றுப்பாரே. 81

தோணுமப்யா வெளியுள்ள வஸ்துவெல்லாஞ்
சூட்சுமயா யிம்மைக்குச் சாபமில்லை
காணுமப்பா பாலர்முதல் கிழவர்மட்டுங்
கருணையுள்ள பூரணத்தின் கடாட்சத்தாலே
ஆணுவமா யிம்மையை வெளியிடாதே
ஆதிசத்தி யஞ்சனாதேவி பூசை
பூணுமப்பா மெய்சுருக்கந் தன்னிற்சொன்ன
புத்தியுடன் அனுதினமும் பூசைபண்ணே. 82

80, 82-வது உரை

பலாவேர் மால்தேவி அல்லது கேந்தி பாம்பரனைப் பிச்சு இவைகளை பொடித்துக்கொண்டு இரும்புக் கரண்டியில் நெய்விட்டு வறுத்துக்கொண்டு காகிதத்திலிட்டு ஆரவைத்து பசு நெய்யா லரைத்து (தந்தச் செம்பில்) வைத்துக்கொண்டு தன்னைத் தானறிந்து, குருதியானஞ்செய்து வெற்றிலையில் தடவிப்பார் தூரத்திலுள்ள செய்திகள் எல்லாம் தெரியும். மெய்சுருக்கத்தில் சொன்னபடி சத்தி பூசை ஆஞ்சனுதேவி பூசை செய்யவும்.

பெண்ணுக்கும் ஆணுக்கும் மருந்து :—

83, 85-வது கவி

பண்ணப்பா வின்னமொரு கருவைக்கேளு
பச்சோந்தி பிச்சுடனே யாடையொட்டி
நின்னப்பா சிணுங்கியொடு சிறியநங்கை
நிலையாத வீசுரயா மூலிவேரும்
கண்ணப்பா பொன்னூமத் திலையுங்கூட்டிக்
கருவாக குமரியிடநா தத்தாலே
நண்ணப்பா மைபோலே யரைத்துநீயும்
நலமானமிள கதுபோல்குளிகை செய்யே. 83

இடு மருந்து :—

குளிகைதனைச் சிமிழ்தனி லடைத்துக்கொண்டு
குருவான மனோன்மணியைக் குருவாய்போற்றி
குளிகைதனை தம்பனத்தான் மோகனமோதிக்
குணமாக விந்துதனின் மத்தித்தேதான்
குளிகைதனை யறுசுவையிலிட் டாயானல்
கும்மிட்டு மதிமயங்கி மோகமாவார்
குளிகைதனைக் கொடுத்துவிட்டு மோகியாதே
குணமாக பொருள்பரித்து யருளைத்தேடே. 84

சண்ட மாருதம் :—

அருளான பெண்களுட புருஷர்தானும்
அயலாரை போகித்தே யகல்வாராஞல்
வெருளாதே யவணுதந்தன்னிற் சேர்த்து
வேணபடி யறுசுவையில் தாக்கச்சொல்லு
இருளான வெளியாசை யொழிந்து தல்ல
இல்லிடமே வணங்கிமிக இணக்கமாவான்
பொருளான பொருளப்பா வெளியிடாதே
பூரணத்தார் காரணத்தைப் புகன்றிடானே. 85

83, 85-வது உரை

பச்சோந்திப் பிச்சு ஆடையொட்டி அல்லது ஓட்டுச்செடி (தரையில் படர்ந்திருக்கும்) நின்ருச்சு சிணுங்கி சிறியாணங்கை (கஞ்சாவேர்) அல்லது ஈசுரமூலிவேர் - பொன்னுமத்தன் இலேயும் சோத்துக் கத்தளே சாற்ருல் மைபோல் அறைத்து மிளகுப் பிர மாணம் குளிகைசெய்து சிமிலில் பதனஞ்செய்துக்கொண்டு விந்தில் கலந்து கொடுக்க பெண்கள் வசியமாவார்கள் குளிகையைக் கொடு த்து விட்டு மோகியாதே உண்மையை அறிந்து அருளே நாடு தன்மனே விபிரரால் நாடிஞல் ஷை குளிகையை நாதத்தில் மத்தித்துக் கொடுத் தால் பிரர் நாட்டத்தைவிட்டு தன்வசப்படுவாள்.

திரி புகை :—

86, 88-வது கவி

புகன்றிட்டே னின்னமொரு வித்தைகேளு
புகையான திரிபுகைதான் புனிதமாக
அகன்றிட்ட கருங்கமுதைச் சடைதாஞென்று
அப்பனே யதின்கஷ்டம் நாயின்கஷ்டம்
புகன்றிட்ட தாம்பரத்தின் சிலேயோடு
பூநீறுஞ் சவர்க்காரன் சாரங்கெந்தி

இகழ்ந்திட்ட வெடியுப்புங் கழஞ்சுவீதம்
என்மகனே பொடிசெய்து திரியுலூட்டே. 86

பூதமாரணம் :—

ஊட்டியே கருங்கழுதை நெய்யின்மைந்தா
உத்தமனே திரிநனைத்துத் தீபமேற்றி
காட்டியே தானவித்துப் புகைக்கும்போது
கனமான பேய்ப்பூதங் காணுதோடும்
நாட்டியே துஷ்ட தேவதைக ளெல்லாம்
நாடாமற் கோயில்விட்டுக் காட்டிற்குபோகும்
தாட்டிகமாய் பச்சைமரம் பட்டுப்போகும்
தன்மையுட னிப்புகையை வெளியிடாதே. 87

வெளியிட்டால் உலகத்தில் துஷ்டருண்டு
வேடிக்கை போலவருஞ் செய்துபார்ப்பார்
விழிகெட்ட குருடரைப்போற் றெய்வமெல்லாம்
வீடுவிட்டுக் காடுறையும் விதியோவென்று
பழிவிட்டும் போகாது நின்னையுற்றுப்
பத்திரமாயிந் நூலைப்பதனம் பண்ணு
வேளிதொட்டே யொளிகொண்ட ஞானியானல்
விஸ்தாரமாக விதைச்செய்யார் பாரே. 88

86, 88-வது உரை

கருங்கழுதை ரோமம்-1 அதன் எலும்பு நாயின் எலும்பு மனோ சிலை-பூநீறு வெடியுப்பு அல்லது சகாரம் கெந்தகம் வெடியுப்பு இவைகளைப் பொடிசெய்து திரியிலேற்றி கருங்கழுதை நெய்யில் திரியை நனைத்து தீபமேற்றி எரியும்போது அவித்துப் புகைத்தால் அதன் வாசனையால் பேய்பூதம் துஷ்ட தேவதைகள் விலகும்.

சத்துருமாரணம் :—

89, 90-வது கவி

பாரப்பா பூதமாரணத்தைச் சொன்னேன்
பதியான புலத்தியனே பகைவரெல்லாம்
வீரப்பா தானடங்கி மரணமாக
விதமான கருவொன்று விளம்பக்கேளு
நேரப்பா செங்கோட்டை சூதநாபி
நெறியான கௌரிவெள்ளை ரத்தபாஷாணம்
ஆரப்பா கார்முகிலு மெலிப்பகையுங்கூட
வப்பனே சங்தொன்றிச் சுனையுங்கூட்டே. 89

சுனையுடனே குருவண்டுங் கழுதைவண்டுஞ்
சொற்பெரிய வாசம்விரை பன்னிரண்டு
இணையாக மஞ்சாடிவீதங் கூட்டி
என்மகனே ராகுவின்றிவிஷத் தாலாட்டிக்
கனமான குழம்புபோல் எண்ணிக்கொண்டு
கருணையில்லாச் சத்துருக்கள் காலிற்றூக்கி
தினவாறு லெடுக்குமடா குழம் பின்வேகந்
தீராத சொரியுடனே குஷ்டமாகும். 90

89, 90-வது உரை

சேராங்கொட்டை சூதம்-நாபி கௌரி - வெள்ளைப் பாஷாணம் ரத்தப்பாஷாணம் கார்முகில் பாஷாணம் எலிபாஷாணம் - காங்தொன்றிச்சுனை கருவண்டு கழுதை வண்டு வாசம் விரைமஞ்சாடி வீதம் விஷத்தாலரைத்துக் குழம்பாக்கி சத்துருக்கள் காலில் தடவச் சத்துருவுக்குச் சொறி குஷ்டம் உண்டாகும்.

அதற்கு முறிவு :—

91, 93-வது கவி

குஷ்டமொடு குழிவிழுந்து கரைந்துசாவான்
குடிகெடுக்கும் பாவிகளுக்கிதுவே வேண்டும்

கஷ்டமுற்றுப் பாவிகள்தான் திரும்பவைத்து
காலிலேபணிந் திட்டால் கருதக்கேளு
மட்டமென்ற வருத்துவேர் பிடித்தான்மைந்தா
மார்க்கமுள்ள வெண்குன்றி யிலைபலையவ்வீதஞ்
சட்டமா யரைத்ததனை மேலும்பூசிற்
றண்மையுடன் றான்குடிக்கச் சாந்தமாமே. 91

சாந்தமென்றே யிக்குழம்பை யுலகத்துள்ள
சகலருக்குஞ் சொல்லாதே சபிப்பார்சித்தர்
காந்தளென்ற காந்தறனை விடுத்தோருண்டு
கருவான எளியோர்கள் பெரியோருண்டு
வேந்தென்ற வேந்தருண்டு சிசுக்களுண்டு
வித்தைசொன்ன குருவுண்டு பெண்களுண்டு
பாந்தமுட னிவர்களுமே குற்றஞ்செய்தார்
பதறுதே பதறினதார் பாவமாமே. 92

பாவமென்ற பாவமது செய்ய நன்றோ
பலபேத சாத்திரத்தை பார்க்கநன்றோ
தாமென்ற தராசுக்கு தோமமாக
தன்மையில்லாக் கோபாத்தாற்ற பசுபாழாம்
சோபமென்ற பெண்கள்மேல் மோகம்வேண்டாஞ்
சொந்தமனைவி யிருந்ததனற் றோஷமில்லை
கோயிலென் றுங் குளங்களென் றுந் தேடவேண்டாம்
குணமாக வுன்னிடத்திற் குறிதான்காணே. 93

91, 93-வது உரை

மேற்சொன்ன மரணத்திற்கு மாற்றுவது வருத்துவேர் குண்டு மணி வேர் இவை இரண்டும் சமனெடையாய் பசும்பாலில் அரைத்து மேலுக்குத் தடவி உள்ளுக்குச் சாப்பிட சாந்தியாகும் ஆனல் அவ் வாறு பிறருக்குத் துன்பஞ் செய்யக்கூடாது.

ஞானம் :—

94, 101-வது கவி

காணுதற்கே யின்னமொரு கருவைக்கேளு
கருணையுள்ள புலத்தியனே கனிதவானே
பூணுதற்கு நவ்வெழுத்தின் மேலேமைந்தா
புத்தியுடன் மவ்வெழுத்தார் கிரகந்தோன்றும்
பேணுதற்கு நவ்வெழுத்தின் மேலேசென்றால்
பிலமாகமவ் வெழுத்தின் கீழதாகத்
தோணுதற்குச் சிவாலய முந்தியுண்டு
சுத்தமுட னவ்விடத்தே கண்டுதேறே. 94

கண்டுமனந் தேர்ந்தந் நதியின் மூழ்கிக்
கமலமலர் சிவாலயத்தைப் பூசைபண்ணுச்
சண்டமென்ற பூரணத்தின் கீழதாகச்
சபையான சிவாலயங்கள் நதிகளுண்டு
கொண்டுநின்ற அநேகதமாமயிர் பாலத்திற்
கொள்ளாநின்ற சிவாலயங்க னதிகளுண்டு
வண்டெனவே வாசிமலரதனை யெடுத்து
மகத்தான சிவாலயத்தை பூசைபண்ணே. 95

பூசையது செய்வதற்கு பலத்தைக்கேளு
புனிதமுட னட்டாங்கஞ் சித்தியாகும்
நேசமுள்ள வட்டாங்கஞ் சித்தியானல்
நிலையாக சிவயோகநினைவிற் றோன்றும்
பாசமில்லா சிவயோக நினைத்தபோதே
பரமகுரு தேசிகனும் பதியாய்வந்தே
ராஜனென்ன சிவராசயோகங் காட்டி
நடுமனையின் வீசைவகை நல்குவாரே. 96

வகையான பரமகுரு வருவதேது
    மார்க்கமுள்ள சரிதைவழி மார்க்கத்தாலே
திகையாமற் சரிதைவழி நடந்தாயானாற்
    சிவசிவாகிரியை யதின்வழியே தோன்றும்
பகையாவற் கிரியைவழி நன்றாய்ப்பார்த்தாற்
    பாலகனே யோகவழி பரிவாய்த்தோன்றும்
நகையாமல் யோகவழி நன்றாய்ப்பார்த்தால்
    நன்மையுள்ள ஞானவழி நாடும்பாரே. 97

பாரப்பா புலத்தியனே பிரமக்கியானி
    பரிவான ஞானமதை பகரக்கேளு
காரப்பா ஆதாரமூலந் தன்னிற்
    கனிவான அக்கினிதன் னுவிதன்னைச்
சேரப்பா முக்கோண சுடரிநின்று
    திருவாசி யானதொரு செங்கண்மேவிச்
சாரப்பா வந்தமனே சொந்தமென்று
    சங்கையுடன் றானிருந்து தன்னைக்காணே. 98

காணப்பா மேல்வழியைக் கண்டுகூடிக்
    கருணையுட னவ்வழியைக் கலந்துமேவிப்
பேணப்பா நிராதாரஞ் சித்தமாகிப்
    பீமரணாய் நின்றவீரணம தாகித்
தோணப்பா சிவனயன்மால் வீசைசெய்து
    தொடங்கிநின்ற தீவினைக ளிரண்டுமற்றும்
பேணப்பா பிரபஞ்சத் தாசையற்றுப்
    பேரண்டச் சோதியிலே புகுந்துவாழே. 99

புகுந்துமிக வாழ்ந்ததனல் பலத்தைக்கேளு
    புனிதமுடன் பிறப்பிறப்பு மற்றுநல்ல

ஜெகச்சோதி யாகமதிற்சேர்ந்து வாழ்வாய்
திருவான வீரணத்தின் கிருபையாலே
இகழ்ந்து நீமனமொத்துப் பாராவிட்டால்
எண்ணவொண்ணாப் பூரணத்தின் மெய்த்துச் [சொன்னேன்
தகுந்ததொரு ஞானத்தின் றன்மைகண்டால்
சாயுச்சிய பதவியிலே சாரலாமே. 100

சாராமற் காயசித்தி செய்துநீயுஞ்
சமர்த்தமாக வுலகத்தில் சஞ்சரித்தால்
வீரான ஆணுவத்தை விட்டுமைந்தா
விருதுபெற்ற சித்தனென்றே விளக்கமாகத்
தாராளமாக நீசரக்கு வைப்புந்
தன்மையுள்ள வைத்தியமுந் தானேசெய்து
பேராதனாப் பூவாலைவா தங்கண்டு
பேரின்ப நிலைகாணப் பெருமைகேளே. 101

94, 101-வது உரை

அன்பும் அரிவும் பக்தியும் பொருந்திய புலத்திய மகாரிஷியே உன்னிடத்திலுள்ள மெய்ப்பொருளாகிய பரிபூரணத்தைக்காண வேண்டுமானால் உருதியான நவ்வெழுத்தென்று சொல்லப்படுகின்ற கருவிக் கர்த்தாவாகிய சரியை என்ற ஆதாரத்தை உற்று நோக்கினால் அந்தக் கிரியையில் நவக்கிரகங்கள் தோன்றும் அதைக்கண்டு சுத்திசெய்து பூசித்துவந்தால் அதற்கின்கீழ் பெலமாகிய கிரியையென்ற மவ்வெழுத்தின் கீழாகப் பார்த்தால் ஓர் சிவாலயமும் நதிகளும் இருப்பதுபோல் தெரியும் பரிபூரண நல்லெண்ணத்தோடும் நம்பிக்கையோடும் மென்மேலும் அரிவால் உணர்ந்துபார்த்தால் அவ்விடத்தில் நதியுண்டும் அந்த நதியில் மூழ்கிக் கமலமலர் என்று சொல்லப்படுகின்ற தாமரைப்பூவின் இதனை நிகர்த்த மெல்லி கமலமாகிய சிவாலயத்தை நாடிப்பூசித்து வந்தால் சடலமென்ற சரீரத்

தில் பூரணமாய் நிறைந்துலாவும் துங்கத்தின்கீழ் நடனசபையும் நதிகளும் சிவாலயமும் உண்டும் அந்த ஆலயத்துக்குக் காவலாக அநேகமாய் நிறைந்த மயிர் பாலத்துக் கிடையே சிவகணங்கள் சூழ்ந்திருக்கும் அதை வாசியென்ற மலரையெடுத்து மகுத்துவம்பொருந்திய சிவாலயத்தைப் பூசைசெய்து வந்தால் புனிதமுடன் நாட்டங்களும் சித்தியுமாகும் நீ நாடிய நாட்டம் உருதியாஞல் என்றமழியாத சிவயோகம் நினைவில் தெரியும். பந்தபாசமில்லாச் சிவயோகத்தை நினைத்தபோதே பரிபூரணமாகிய தேசிகனும் வந்து ராஜசின்னச் சிவபோகங்காட்டி நடுமனை வீசை வகை சொல்லுவார் சரியை கிரியை யோகமென்ற மும்மலத்தினுலே திகையாமல் அவ்வழியே நாடினுல் சிவசிவ கிரியை அதன் வழியே தோன்றும் பகையவர் கிரியை வழியே நன்ருய் பார்த்தால் முனிவனே! யோகமாகிய மெய்வழி உணர்வால் தோற்றும் அப்பொழுது பற்பல நினைவுகளின்றி ஒரே உருதியாய் பரிபூரண ஞானவழியைக் கண்டு பிரம அக்கினியான ஞானவழியில் தேரி திரிகோணமாய் நின்றுலாவும் திருவை ஞானநேத்திரத்தால் கண்டு வாசியான செங்கண் மேவிச் சேர்ந்து அந்தமனை சொந்தமனையென்று அறிவால் தேர்ந்து பார்ப்பாயாக. அப்பொழுது மேல் வழியை சந்தோஷத்துடன் பார்த்து பரமானந்தமடைந்து அவ்வழியே சென்று நிறந்தர சித்தானந்தமாகிய பரிபூரண சொரூபியாய் நிறைந்திருக்கப்படுகின்ற ஆன்மாவோடு சம்மந்தப்பட்டு இரப்புப் பிறப்பாகிய இரண்டு தீவினைகலாற்று பந்தபாசங்களையும் விட்டுப்பிரணப சொரூபியாய் நிறைந்த பரிபூரணத்தோடு சம்மந்தப்படுவோயாஞல், அதனுல் எற்படும் பலனைக் கேள்பாயாக. பிறப்பற்று நல்ல பரிபூரண ஜோதியோடு ஒத்து வாழ்வதுமன்றி பரிசுத்தமான க்ருபையாலே மனம் மகிழ்ந்து பார்ப்பாய். அப்பொழுது என வொண்ணுத பரிபூரணத்தின் ஞானத்தைப் பெற்று சாயுட்ஷியப் பதவிபெற காயாசித்திசெய்து மாயமாகிய உலகத்தில் சஞ்சலத்தால் வீரமாகிய அணுவத்தை விட்டு சித்திபெற முத்தியை நாடித் தாராளமாக நீசரக் குவைப்பு வைத்து வைத்தியம் செய்து அரிதான தனுப்பூ, வாலை, வாதங்கண்டு பொன்னம்பல நிலையையே நாடி நிற்பாயாக.

சைவீர வைப்பு :—

102, 111-வது கவி

கேளப்பா பச்சையென்றுஞ் சரக்குவைப்பு
கெடியான சைவீர வைப்புக்கேளு
நாளப்பா கெந்தகந்தான் பலமிரண்டு
நன்மையுள்ள புத்தோண்டி லுருக்கிக்கொண்டு
வேளப்பா சக்கதிற் பலந்தானெட்டு
விட்டதிலே கிண்டையிலே யனல்படாதே
கூழப்பா போலவுமே அயத்தாற்கிண்டு
குணமான ரசமதுவு மடிந்துபோமே. 102

போமப்பா கரிபோலே சூதந்தானும்
புத்தியுடன் பொடிசெய்து தோண்டிக்கேற்றி
நாமப்பா மறுதோண்டி கவித்துமூடி
நன்மையுட னுழுந்தரைத்து சிலைசெய்து
தாமப்பா வதின்மேல் மண்சிலையைந்து
தளமாகச் செய்ததையுங் காயவைத்து
ஓமப்பா கணபதிக்குப் பூசைசெய்து
உத்தமனே யடுப்பேற்றி மூன்றுசாமம். 103

சாமமடா தீபம்போ லெரித்துநீயுந்
தன்மையுடன் றனிறக்கிப் படுக்கப்போடு
நேமமுட னாறினபின் னவிழ்த்துநீயும
நினைவாக மேற்றோண்டி யெடுத்துப்பாரு
தாமமுடன் மாப்போலே யிருக்குஞ்சூதந்
தனையெடுத் தரைக்கவுமே குறையாதப்பா
வாகமுடன் சூதமென்ற மாவுதானும்
மைந்தனே பலவெட்டு வைத்துக்கொண்டே. 104

கொண்டதொரு வெடியுப்பு துருசுசினம்
குணமான வகைக்கிரண்டு பலந்தான்கூட்டிக்
கண்டதொரு நவாச்சாரம் பலமுநாலு
கனமான பூபதிபலம தொன்றே
டுண்டதோ ரன்னத்தின் பேதிதானும்
உத்தமனே பலமூன்று கல்லுப்புத்தான
பண்டையிலே சேர்ந்தாப்போற் பலமிரண்டு
பாலகனே கல்லுப்புந் துருசுகேளே. 105

கேளப்பா வெளுக்கவே வறுத்துக்கூட்டுக்
கிருபையாஇவை எழுசரக்கு நன்றாயாட்டி
மாளப்பா வாச்சூதஞ் சேர்த்துநீயும்
மார்க்கமுடன் றானரைத்துக் காயவைத்து
கேளப்பா காசியென்ற குப்பிக்குத்தான்
குணமாக வைத்துமண் சீலைசெய்து
தாளப்பா வாராமற் காயவைத்துத்
தன்மையுள்ள குப்பியதில் மருந்தையேற்றே. 106

ஏற்றியே நாற்சதுர மாடம்போலே
இதமான அடுப்புமே கிழக்கதாகப்
பார்த்திபனே நீயிருக்கவடக் குத்தானம
பாங்கான அடுப்புமட்டுந் திண்ணைபோட்டுப்
யேற்றியே புகைபோகமேற் குத்தானும்
பூமிமட்டுந் தரையேரடே பொதிந்தவைத்துச்
சாத்தியே சந்தாலே நன்றாய்த்தீத்திச்
சமர்தான கணபதிக்குப் பூசைபண்ணே. 107

பண்ணப்பா வாலுகையில் தாலியொன்று
பாங்காக அடிகனத்த பாண்டமேற்றி
நண்ணப்பா பொடிமணல்நாம் விரண்மட்டிட்டு
நாதாந்த மனோன்மணியைத் தோத்திரஞ்செய்து

கண்ணப்பா மேல்நோக்கி நீடுப்பார்த்துக்
கருணையுள்ள குப்பிதனை யதன்மேல்வைத்து
மண்ணப்பா கழுத்தளவு மணல்தானிட்டு
மார்க்கமுடன் கமலம்போ லெரித்திடாயே. 108

எரித்திடவே பன்னிரண்டு சாமந்தானும்
என்மகனே எரிக்குப்விதம் சொல்லக்கேளு
பொருந்திடவே பகலைக்கே யெரித்துநீயும்
பக்தியுட னிராத்திரிக்கவ் வடுப்போடேவை
மறுதினமும் சகலகலைகண்டெரித்து நீயும்
மாற்றிவைக்கும் மூன்றுநா ளெரிக்கும்போது
முரித்திட்டவே யனல்வீச வெரித்திடாதே
முன்போல நீயெரித்து சிலாகைபோடே. 109

சிலாகையிட்டு நீகிண்டிப் பார்த்தாயானால்
தர்க்கமுடன் வெண்மையர்க் குப்பிவாயில்
நிலாவதுபோல் வெண்மையாய் மூடிக்காணும்
நிலவரமா யடியிலே கறுகறுத்து
கலகைமகு சிலாகையிலே காணுமானால்
கனமான பதமிதென கண்டுக்கொண்டு
பலதகையி லிருக்காமல் அனலையாற்று
பாகமடா அவ்வேளை பரிந்துபாரே. 110

பாரடா குப்பிதனை எடுத்துநீயும்
பக்தியுடன் குளிர்ந்தபின்பு வுடைத்துப்பாரு
நேரடாவீர மதையென்ன சொல்வேன்
நிசமான பூரணச்சந்தி ரனைப்போலே
பேரடா பெற்றதொரு வீரமாச்சுப்
பெலமாகமுன் மருந்திற்பாதி சேர்த்துக்
காரடா முன்போலே மூலிகை செய்திட்டால்
கனமான கொச்சியென்ற வீரமாமே. 111

102, 111-வது உரை

கெந்தகம் 2-பலம் சுக்கு 2-பலம் இவை இரண்டையும் புதுத் தோண்டி அல்லது மண்பாத்திரத்திலிட்டு உருகி வரும்போது அபக் கரண்டி அல்லது இரும்புக் கரண்டியில் கூழ்பாகமாக வரும்போது ரசத்தைச் சேர்க்க ரசம் வடிந்துபோகும் அப்போது சூதம் பொடி செய்து அதிற்போட்டு வேறு பாத்திரத்தில் மேலே மூடி உளுந் தரைத்துச் சீலைசெய்து அடுப்பேற்றி 3-சாமம் எரித்து இறக்கி ஆரியபின் எடுத்து சீலையைக் களைந்து சூதத்தை எடுத்து அரைத் துக்கொண்டு வெடியுப்பு, துருசு, சீனம் வகைக்குப் பலம் 3-வீரம் நவச்சாரம் பலம்-4 பூபதி பலம்-1 அன்னபேதி பலம்-3 கல்லுப்பு பலம்-2 கல்லுப்பும் துருசும் வேராக வறுத்து 7-சரக்கையும் ஒன்றாய் சேர்த்து அதில் 8-பலம் மேற்சொன்ன சூதம் சேர்த்தரைத்து செம் புக் குப்பியில் வைத்துச் சீலைமண் செய்து நாற்சதுரம்போல் அடுப்பு அமைத்து அது வடக்குமுகமாக இருக்கும்படிசெய்து மேற்குமுக மாய் புகைபோக வழிவிட்டு, சந்தில் குப்பியை வைத்து தெரித்துக் கணபதியை நினைத்து பூசைசெய்து வாலுகையில் தாளிசெய்து வாலுகையில் 4-விரல்மணலிட்டு *மனோன்மணியைநினைத்து அதன் மேல் குப்பியை வைத்து கழுத்தளவு மணலில் வைத்து கமலம் போல் 12-சாமம் எரிக்கவும் எரியும்போது சிலாகைமிட்டுக் கிளரிப் பார்த்துப் பதமாக இருக்கும்போது எடுத்து ஆறியபின் உடைத்துப் பார்க்கச் சந்திரனைப்போல் வீரம் பிரகாசிக்கும்.

இர்ாசகர்ப்பூர வைப்பு :—

112, 117-வது கவி

வீரமென்ற வீரவைப்புகைமுறையாய்ச் சொன்னேன்
விருதான பூரணவைப்பை விளம்பக்கேளு
நேரமில்லை முன்செய்த சூதமாவில்
நிறுத்தெடுத்து நாலுபங்கு குப்பிக்கேற்றி

* மனோன்மணி - சத்தி.

பாரமில்லா வாலுகையிற் காலம்போலே
பதமாக எரிக்கையிலே யுருகும்பாரு
வோரமில்லை யுருகுபதந் தன்னைக்காண
உறுதியுட னிருசாம மெரித்துமேலே. 112

மேலாகச் சிலாக்கையிட்டு கிண்டிப்பாரு
மேன்மையுடன் றானுருகிக்குழம்பு போலாம்
காலான சினமறை பலத்தைத்தானுங்
கணக்காகப் பொடித்ததிலே போட்டுக்கிண்டி
நாலான சாமமட்டு மெரித்துநீயும்
நன்மையுடன் சிலாகையிட்டு பார்த்தாயானல்
கோலான அடியின் மருந்தில்லாவிட்டால்
குருவான பதமென்று குணமாயாற்றே. 113

ஆற்றியே குப்பிதனை யுடைத்துப்பாரு
அப்பனே வெள்ளையாயிருக்குஞ் சொன்னேன்
போற்றியே பூரமதைப் பதனம்பண்ணு
புண்ணியனே யின்னமொரு வித்தைக்கேளு
சாற்றுகிறேன் ஆரலத்திப் பூரவைப்பை
தன்மையுடன் றானுரைக்கத் தயவாய்க்கேளு
மேற்றோலைப் போக்கினதோர் * முத்தக்காசு
விளங்கிய லவங்கமிடை வராகன்பத்தே. 114

பத்தான சினமலைதிரண்டு பத்துப்
பாங்கான வெடியுப்பு நூறுங்கூட்டி
சித்தான கலவத்திற் பொடித்துக்கொண்டு
சிவந்த கருவாப்பட்டைத் தைலம்வாங்கி
முத்தான மிச்சாம மரைத்துமைந்தா
முறையுடனே பிட்டுபோ லுதிர்த்துநான்கு

* முத்தக்காசு - கோரைக்கிழங்கு.

வற்றாத கங்காலக்குப்பி தன்னில்
மார்க்கமுட னரைவாசி யடைத்துக்கேளே. 115

கேளப்பா மரக்கல்லா லரைத்துநீயுங்
கிருபையுட னெழுசிலைமண் ணுஞ்செய்து
நாளப்பா நன்றாகக் காயவைத்து
நாதாந்த வாலைபதநாடி நின்று
வாளப்பா வாலுகையிற் பாண்டம்வைத்து
விதமாக ஆறுவிதமணல் தானிட்டு
வாளப்பா குப்பிதனை மேலேயிட்டு
வண்மையுடன் பானேரம்ப மணலால்மூடே. 116

மூடியே யடுப்பேற்றிக் கமலம்போலே
மூர்க்கமுட னெருநாழியெரித் துப்பாரு
நாடியே மணற்சூடு நிரம்பவானல்
நன்மையுடன் பாண்டமதை யிறக்கிவைத்துக்
கூடியே குளிரநன்றா யாரவிட்டுக்
குருவான குப்பிதனை யுடைத்துப்பாரு
தேடியே யலைந்தாலு மிந்தப்பூரம்
தேசத்தில் விபரீதமென் பார்காணே. 117

112, 117-வது உரை

முன்சொன்ன சூதமாவை 4-பாகம் நிருத்தெடுத்து வாலுகையி விட்டு எரிக்க. உறகும்போது 2-சாமம் எரித்து சிலாகையில் கிளரி குழம்புப் பதமாகும்போது சீனம் அவரப்பலம் பொடித்துப்போட்டு 1-சாமம் எரித்து சிலாகையிட்டுப் பார்த்தால் அடியில் மருந்தில்லா விட்டால் எடுத்து ஆற்றி உடைத்தப்பார்க்க வெண்மையாக இருக் கும் எடுத்து வைத்துக்கொள்ளவும், மேல் தோலை நீக்கிப் கோரைக் கிழங்கு, கிராம்பு விராகனிடை-10 சீனம் விராகனிடை-20 வெடி யுப்பு 100 விராகனிடை கூட்டிக் கல்வத்திலிட்டுப் பொடித்துக் கொண்டு சிவப்புக் கறுவாப்பட்டை அல்லது உதியன்பட்டை தைலத்

தில் 48-சாமம் அரைத்துப் பிட்டுபோல் உலர்த்திக் குப்பியில் அரைப் பாகம் நிறைப்பி 7-சீலை மண் செய்து காயவைத்து வாலேயைத் தியானித்து முன்போல் வாலுகையில் மணலிட்டு குப்பிவைத்து மேலே மணல்மூடி எரித்து மணல் சூடானதும் இறக்கிப் பார்க்க உயர்ந்த பூரமாக இருக்கும்.

பச்சை கற்பூர வைப்பு :—

118, 121-வது கவி

காணப்பா யின்னமொரு வைப்புக்கேளு
கருவான பூரமடா பச்சைபூயம்
பூணப்பா சூடனொரு பலமும்வாங்கிப்
புனிதமுள்ள வெடியுப்புக் காற்பலந்தான
தோணப்பா வுவருப்புப் பலமரைதான்கூட்டி
துரிதமுள்ள புனுகுடனே ஏலந்தானும்
வேணப்பா கஸ்தூரி வகைக்குத்தானும்
விளங்கவே யரைக்கழஞ்சி வேண்டுவாயே. 118

வேண்டியே கல்வத்துலரைத்து நன்றாய்
விதமான சந்தனத்தின் தயிலத்தாலே
சோண்டியே பிட்டுபோற் கொண்டுபிசரி
சுத்தமுள்ள குப்பியரை யிட்டுமைந்தா
தூண்டியே மாக்கல்லால் வாயைமூடி
துரிதமுட னெழுசீலை மண்ணுஞ்செய்து
தாண்டியே தாளிநிரைய மணல்தானிட்டுத்
தன்மையுள்ள குப்பிவைத்து மேலுமூடே. 119

மூடியே மணற்செம்பி யோடுமூடி
மூர்க்கமுடன் சீலைமண் வலுவாய்ச்செய்து
நாடியே ரவிதனிலே காயவைத்து
நன்மையுள்ள கணபதியை நாடிக்கொண்டு

தேடியேவாலு கையிலேற்றி மைந்தா
திறமாக வொருசாமந் தீபம்போலே
கூடியே யெரித்துமெள்ள ஆறவைத்துக்
குருபதத்தை தான்வணங்கி யெடுத்துப்பாரே. 120

எடுத்துமிகப் பார்க்கையிலே யென்னசொல்வேன்
இன்பமுள்ள சிறுபொடியாங் தகடுபோலத்
தொடுத்துநின்ற தாமரைப்பூ வாசம்வீசுந்
துரைத்தனத்தார்க் கேற்றபச்சைப் பூரமாச்சு
அடுத்துநின்ற பேர்களுக்கு மிந்தவாசம்
அதிகமுடன் செங்கழுநீர் பூப்போல்வீசும்
கடுத்துநின்ற நீர்கடுப்பு கல்லடைப்பு
கனமான பித்தமெல்லாங் காணுதோடும். 121

118, 121-வது உரை

சூடம் 1-பலம் வெடியுப்புக்கால் பலம்-1 ஒவுருப்பு அரைப்பலம் புனுகு ஏலம் கஸ்தூரி வகைக்கு அரைக்கழஞ்சு எடை கூட்டிக் கல்வத்திலிட்டு அரைத்து சர்தனத் தைலத்தால் பிட்டுப்போல் பிசரிக் குப்பியில் பாதி அடைத்து மாவுக்கல்லால் வாயைமூடி 7-சீலே மண் செய்து மண் பாத்திரத்தில் அல்லது தாளியில் மணலிட்டு மருந்து வைத்து சூரிய வெப்பத்தில் வைத்தெடுத்து அடும்பு அல்லது வாலுகையில் வைத்து 1-சாமம் தீபம்போல் எரித்து எடுத்து ஆரவைத்துப் பார்க்கத் தாமரப்பூவாசத்துடன் விளங்கும்.

வாலேரச வைப்பு :—

122, 124-வது கவி

காணாத காட்சியெல்லா மிந்தநூலிற்
கருதினே னின்னமொரு கருவைக்கேளு
தோணாத வாலேரசம் வைக்குமார்க்கஞ்
சொந்தமுடன் சொல்லுகிறேன் சூட்சமாக

வேணதொரு சாதிலிங்கந் தன்னைநீயும்
விதமாகத் தான்பொடித்துத் தோண்டிக்கேற்றி
நாணுக நன்னரிவேர் தான்கொஞ்சம்
நன்மையுடன் பொடிசெய்து கூடப்போடே. 122

போட்டுமே மறுதான்றி தன்னைநீயும்
புனிதமுடன் முன்மூடி பொருந்தவைத்து
நாட்டியே சீலமண் ணேழுஞ்செய்து
நலமாக வுலர்ந்தபின்பு நன்மையாக
ஆட்டுமே கணபதிக்கு பூசைசெய்து
வப்பனே வாலுகையி லேற்றிமைந்தா
காட்டுமே காடாக்கினி யாகத்தானுங்
கனமாகவொரு ஜாமமெரித் திடாயே. 123

எரித்தந்த அனலணைத்தே யிறக்கிமைந்தா
இன்பமுடன் ஆறவிட்டே யவிழ்த்துநீயும்
தரித்ததொரு மேற்றோண்டி தன்னைமைந்தா
தண்மையுள்ள * வராகமுடி தன்னுலேதான்
தெரித்துமிகப் போகாமற் றுடைத்துநீயுந்
திறமாகப் பார்க்கையிலே சூதம்போலே
பொருந்திமிக இருந்ததொரு வாலைதன்னைப்
புத்தியுடன் குடுக்கைதனி லெடுத்துவையே. 124

122, 124-வது உரை

ஜாதிலிங்கம் பொடிசெய்து மண் கும்பியிலிட்டு அல்லது தோண்டியிலிட்டு நன்னாரி வேரிடித்து கூடப்போட்டு வாய்மூடி 7-சீலை மண்செய்து காயவைத்து கணபதி பூஜைசெய்து வாலுகை அல்லது அடுப்பிலேற்றி 1-சாமம் எரித்து இறக்கி ஆறப்போட்டு

---

* வராகமுடி என்பது பன்றிமயிர்க்கற்றை.

பன்றி மயிர்க் கற்றையால் சிதராமல் துடைத்தெடுத்துப் பார்க்கச் சுகப்பிரகாசமாக இருக்கும்.

வாலேரசத்திற்குத் தீரும்வியாதி :—

125, 126-வது கவி

வைத்ததொரு வாலேதனைப் பணிவிடைக்கால்மைந்தா
மார்க்கமுடன் விடைத்தலே வேர்சந்தனத்தில்
மெய்த்திட்ட மாகநீபத்து நாள்தான்
மேன்மையுட னந்திசந்தி யீய்ந்தாயானால்
கைத்ததொரு வகையுடனே புளியுந்தள்ளிக்
கனமாக இருபதுநாள் கழிந்தபின்பு
செய்திட்டந் தவருமல் வோமங்தேய்த்துச்
சிவசிவாதலே குனிந்தால் புளியைக்கூட்டே. 125

கூட்டமே தீருகிற வியாதிகேளு
கூறுகெட்ட சொறிசிரங்கு கிரந்திநோயும்
நாட்டவே புண்புரைகள் வயிற்றிரைச்சல்
நலமான பேதியுடன் காய்ச்சல்தீரும்
பூட்டவே தேகமதிற் காந்தமீறி
புனிதமுடன் றாதுவிர்த்திப் பெலமுண்டாகும்
வாட்டமா மின்னமொரு அநுபானங்கேள்
மைந்தனே வாலேரசம் விராகன்ரண்டே. 126

125, 126-வது உரை

மேற்சொன்ன மருந்தை விடக் தலேவேர் அல்லது சந்தனத்தில் பணவிடை 10-நாள் சாப்பிட்டுப் புளி நீக்கவும் 20-நாள் கழிந்த பிறகு ஓமந்தேய்த்து தலேமுழுகிப் புளிகூட்டவும் இதனுல் தீரும் வியாதிகள், சொறி, சிரங்கு, கிரந்தி, புண், புரை, வயிற்றிரைச்சல், பேதி, சுரம் முதலியவை தாதுவிர்த்தி பலம் உண்டாகும்.

வாலைரசத்திற்கு அநுபானம் திருநோய்கள் :—

127, 129-வது கவி

விராகனிடை யிரண்டப்பா பரங்கிப்பட்டை
வீரான திப்பிலியில் வங்கம்ரண்டு
விராகனிடை நாலப்பா கரும்புவெல்லம்
விசையடங்கத் தானரைத்தே யுண்மைகேளு
விராகனிடை முக்காலா யுருட்டிமைந்தா
வீறுகெட்ட மானிடருக் கேழுநாள்தான்
விராகனிடை முக்காலா யந்திசந்தி
விவரமுடன் றான்கொடுத்து மேலுங்கேளே. 127

கேளப்பா பத்தியந்தான் வுப்பாகாது
கிருபையுடன் பசுவின்பால் கூட்டிங்கொள்ளு
நாளப்பா பதினைந்தா நாளிலேதான்
நன்மையுடன் தலைமுழுக்கு முழுகவாறு
கேளப்பா வொன்றுமிலை கோழிச்சாறு
கூட்டியே பத்தியத்தை முறித்துப்போடு
வேளப்பா வாயெல்லாம் வெந்துகாணும்
விதமாகத் தான்றானே யாறுந்தானே. 128

தாந்தானே யாறுகையிற் றிருநோய்கள்
தன்மையில்லா மேகவெள்ளைத் தடிப்புப்புண்கள்
தேர்ந்ததொரு அழிகிரந்தி குழிக்கிரந்தி
தீராத அரையாப்பு மேகசூலை
போந்தானே கால்முடக்கு கைம்முடக்கும்
பொல்லாத நோய்களெல்லாம் போகுஞ்சொன் [னேன்
நாந்தானே வாலையிட கருணையாலே
நன்மையில்லா வியாதியெல்லா நலமதாமே. 129

127, 129-வது உரை

வாலைரசத்தோடு பரங்கிப்பட்டை திப்பிலி வங்கம் வகைக்கு விராகனிடை-2 கரும்பு வெல்லம் விராகனிடை-4 இவைகளை அரைத்து முக்கால் விராகனிடை அளவாய் உருட்டி காலை மாலை 7-நாள் சாப்பிட மேகவெள்ளை, தடிப்பு, புண், அழிகிரந்தி, குழிகிரந்தி அரையாப்பு மேகச்சூலை கால்மூடகும் நைடகுமும் தீரும். பத்தியம் உப்பு நீக்கவும் 15-நாள் கழித்து கோழிச்சாற்றில் பத்தியம் முறிக்கவும் அதன்பின் உப்புச் சேர்க்கவும்.

தாது புஷ்டிக்குளிகை :—

130, 135-வது உரை

நலமான யின்னமொரு குளிகைகேளு
நன்மையுள்ள வாலைரசங் கழஞ்சிமூன்று
குலமான சாதிலிங்கம் கழஞ்சியொன்று
கூறுகிறேம் வெண்காரம் கிராம்புகஞ்சா
தலமான முருங்கைவித்து சாதிக்காயுந்
தண்மையுள்ள சாதிபத்திரி முத்தக்காசு
பிலயான அபின்பூனைக் காவிவித்தும்
புண்ணியனே சாரத்தின் பருப்புங்கூட்டே 130

கூட்டுவாய் பூமிசக்கரைக் கிழங்கு
குணமாக வகைகக்ரைப் பலந்தான்கூட்டே
நாட்டுவாய் பொடிசெய்து தேங்காய்க்குள்ளே
நன்மையுடன் றுனடைத்துச் சாணமேற்றிப்
போட்டுவிடு பத்தெருவிற் புடந்தானப்பா
புண்ணியனே * சிரட்டையது வேகும்போது
ஆட்டுவா யாறினபின் சிரட்டைநீக்கி
யப்பனே முருங்கைப் பூச்சாற்றினலே 131

* சிரட்டை - கொட்டாங்கச்சி, தேங்காய் ஓடு.

முருங்கைப் பூச்சாற்றிருலே மூன்றுசாமம்
முக்யமுடன் ருனரைத்துக் கழற்சிக்காய்போல்
நெருங்கவே நீயுருட்டி யுலர்த்திக்கொண்டு நீ
மகனே யாறுநடை நினைவாய்கேளு
நருங்கவே பொடிசெய்து சர்க்கரை யிலுண்ண
நன்மையுள்ள புளிதள்ளிச்சாதமுண்ணு
குருங்கை யென்றபசு வின்பாற் சக்கரையுங்கூட்டி
குணமாகத் தானருந்திக் கூடுவாயே 132

கூடுவாய் பெண்களுடன் போகஞ்செய்யில்
குணமாக விந்துதம்ப னமேயாகி
நடுவாயிடுப் புவிடமாட்டா தப்பா
நாரியர்கள் சோபமாய் நடுங்குவார்கள்
தேடுவா யிடுப்பு விடமாட்டாயாகில்
திலமான குளிகை யிடதிறத் திருலே
ஓடாமே யுனதுவிந்து விழுந்திடாது
உத்தமனே பெண்களெல்லாம் முறவாவாரே 133

உறவான குளிகைதனை யுலகத்தோர்க்கே
யுண்மையுடன் ருன்கொடுக்க வுறுதிகொண்டு
திருவான பொருளப்பா வேணதீவார்
திறமாக வாங்கியதைத் தருமஞ்செய்தால்
பரமான பரமரிடபாதங் காட்டும்
பரமகுரு தான்வருவார் பணிந்தாயானல்
நிறமான நிராமயத்தின் ஸ்வரூபங்காட்டி
நினைவான யொளிகாட்டி வெளிசொல்வாரே. 134

வெளிசொல்வார் பொருளாசை மின்மையாலே
வேதாந்த குருசொல்லி வெளியாய்க்காணும்
வளிவளி யாவளிதோன்று மிராஜவீதி
மற்றயற்ற யோகமெல்லாங் குருட்டுவீதி

ஒளிசொல்வேனென்று சொல்லியுலகக் குருவெல்லாம்
உன்னிடத்திற் பொருள்பரித்தே யுடலெழுத்
[தைச் சொல்லி
விழியதனை மூடிப்பா ரென்றேபோவார்
விழிமூடி லொளியங்கே விளம்புவாயே. 135

130, 135-வது உரை

வாலைரசம் கழஞ்சி-3 சாதிலிங்கம் கழஞ்சி-1 வெண்காரம் கிராம்பு, கஞ்சா முருங்கை வித்து சாதிக்காய், சாதிப்பத்திரி கோரக் கிழங்கு அபினி பூனைக்காலி வித்து சாரப்பருப்பு பூமிசக்கரக்கிழங்கு வகைக்குப் பலம் அரைகூட்டி தூள்செய்து தேங்காயுக்குள் அடைத்து சாணத்தால் கவசமிட்டு பத்து வரட்டியில் புடமிடவும் தேங்காயின் ஓடு வேகும்போது இறக்கி ஆறவைத்து மேல் சிரட்டையை நீக்கிச் சரக்குகளை முருங்கைப்பூச்சாற்றில் 3-சாமம் அரைத்து கெச்சைக்காய் பிரமாணம் மாத்திரை உருட்டி நிழலில் உலர்த்திவைத்துக்கொண்டு சர்க்கரையில் பொடித்துச் சாப்பிட்டு புளியில்லாமல் புசிக்கவும் பசும்பாலில் சர்க்கரையிட்டுக் காச்சியருந்தவும், விந்து விழாது பெண்களெல்லாம் வசியமாவார்கள் இதை உலகத்தோருக்கீய்ந்தால் அதிகமாகப் பொருள் கொடுப்பார் அதைப்பெற்று தருமஞ்செய்தால் அழியாத நிலைபாகிய பேரின்பத்தை யடைந்து சுக வாழ்வு வாழ்வாய்.

காமகேசரி குளிகை :—

136, 139-வது கவி

விளம்புவே னின்னமொரு குளிகைகேளு
வீரியமா மதனப்பூ அபின்கிராம்பு
தளும்பாமல் சாதிக்காய் மராட்டிமொக்கு
தங்கபஸ்பம் சாம்பிராணி பதக்கங்கூட
அலம்பாமல் முரும்கையுடன் ஆலரசுஅத்தி
அதின்வித்தும் மதுரமுடன் சமனாய்க்கூட்டிக்

குளம்பாக முருங்கைப்பூச் சாற்றாலாட்டிக்
குணமாகத் தான்வழித்தே யுண்டைபண்ணே.

உண்டையது சிறுசுண்டைக்காய் வீதந்தான்
உத்தமனே யனுபானஞ் சொல்லக்கேளு
உண்டையது பசுவின்பாற் றன்னிற்கொள்ளு
உத்தமனே முருங்கைப்பூ போட்டுக்காய்ச்சி
உண்டையது மண்டலந்தா னந்திசந்தி
உண்டவனே ஏழானைப் பலனுண்டாகும்
உண்டதினாற் றாதுவிர்த்தி யதிகமுண்டாம்
உத்தமனே யோகிமயன்றால் யோகியானே. 137

போகமது செய்ததினால் விந்தறாது
பூதலத்திற் பெண்களெல்லாம் நடுங்குவார்கள்
சோகமது மெத்தவுண்டாம் பெண்கள்மோகஞ்
சோர்ந்துமே முகந்தளர்ந்து வாடுவார்கள்
வேகமது தீருதற்கு வேறேவேறே
விடியமட்டுஞ் செய்தாலும் விந்தறாது
பாகமாய் கிருஷ்ணவ தாரந்தன்னில்
பன்னிரண் டாயிரமென்னும் பாவைமாரே. 138

பாவையரைப் புணர்ந்திந்தக் குளிகையாலே
பாலகனே காமகேசரி யிதப்பா
தேவையில்லை யென்றாலும் மனங்கேளாது
தெரிவையரைந் நூறுபேர்தினம் போதாது
கோலமின்றி மன்மதனார் வளைத்தவில்லுக்
குமரிகடன் பார்வையம்புக் கொள்ளும்வேகம்
பாவையர்க ளெல்லோரும் வசியமாவார்
பட்சமா மன்மதன்போ லீலைசெய்யே. 139

136, 139-வது உரை

மதனகாமப்பூ, அபின், கிராம்பு, சாதிக்காய் மராட்டி மொக்கு தங்கப்பஸ்பம், சாம்பராணிப் பதக்கம், முருங்கைவித்து, ஆலவித்து, அரசன்வித்து, அதிமதுரம் இவைகளை சரியெடையாகக் கொண்டு முருங்கைப்பூ சாற்றில் அரைத்து சிறுசுண்டைக்காய் அளவு உருட்டி நிழலிலுலர்த்தி பசும்பாலில் முருங்கைப்பூ போட்டுக் காச்சி காலைமாலை 1-மண்டலம் சாப்பிட 7-ஆணைப் பெலமுண்டாகும் போகத்தில் விந்துவிழாது இது ஸ்ரீகண்ணன் பன்னிரண்டாயிரம் பெண்களைக் கூடியது இக்குளிகையின் மகிமையாலேதான் இதுவே "காமகேசரிக் குளிகை."

சர்வரச குளிகை :—

140, 145-வது கவி

செய்யவே யிம்மருந்தை யுலகத்தோர்க்குச்
 செப்பாதே யரசருக்குச் செய்துநீயும்
ஐயனே புலத்தியனே யறிவுள்ளானே
 அரசரெலா முனைப்பணிவா ரருமையாகி
மெய்யாக யின்னமொரு குளிகைகேளு
 மேன்மையில்லாச் சுரங்களது போவதற்குத்
துய்யதாய் கௌரியொரு பலந்தானப்பா
 தூக்கியதை முலைப்பாலி லூறப்போடே. 140

போட்டப்பா மூன்றுநா ளூறப்போட்டுப்
 புனிதமுடன் றானெடுத்தே யோட்டில்வைத்து
நாட்டப்பா முலைப்பாலாற் சுருக்குத்தாக்கு
 நன்மையினுற் சாமமயந்து நீயும்
தேட்டப்பா கௌரியது சுத்தியாகுந்
 திறமையுமோ தாளரை பலந்தான் வாங்கி
கூட்டப்பா சுண்ணம்புக் குள்ளேவைத்துக்
 குணமாகச் சுத்தஜலந் தன்னிலூற்றே. 141

ஊற்றியே நீறியபின்னெடுத்து நீயும்
உத்தமனே யேழுவிசை நீற்றசுத்தி
தோற்றியே யிரண்டுமொன்றாய் கல்வத்திட்டுத்
துரிதமுடன் றானரைக்கும் போதிலேதான்
தேற்றியே முலைப்பாலால் நாலுசாமந்
திறமாகத் தானரைத்து வுளுந்துபோலே
பார்த்திபனே யுருட்டியதை நிழலிலுலர்த்திப்
பக்குவமா யுலர்த்தியமைப் பதனம்பண்ணே. 142

பண்ணப்பா சுரம்வந்தோர் தனக்குத்தானும்
பாங்கான மாத்திரைதா னென்றுகேளு
உண்ணப்பா முலைப்பாலின் மூன்றுநாளும்
உறுதியுட னிருவேளை யுண்மையாக
தண்ணப்பா தான்கொடுத்த மூன்றுநாள்தான்
தயவான பித்தமெல்லாந் தானேகக்குந்
கண்ணப்பா பித்தமெல்லாங் கக்கும்போது
கனமான சுரங்களெல்லாங் காணுதென்னே. 143

காணுது நாலாநாள் வரைக்குமைந்தா
கருநாகப் புளியைப் தள்ளச்சொல்லு
தோணுத துவரையுடன் கத்திரிப்பிஞ்சி
சுகமாகத்தான் கூட்டியுண் ணச்சொல்லு
ஆணுன அரோசியங்கள் வந்திட்டாலும்
அப்பனே பத்தியங்கள் தவறிட்டாலும்
வீணுன மிளகதனை கியாழம்பண்ணி
வீரியமாய்த் தான்கொடுக்க மீளும்பாரே. 144

மீளுமே மிளகத்துசுகு முறிவுமாச்சு
மிஞ்சாத வாதசுரம் விட்டுப்போச்சுத்
தாளுமேபித்த சுரங்குழ றுங்கூடத்
தயவாஷ அய்யசுர மாறல்கூடக்

கோளுமே கள்ளசுர மூன்றுமாறல்
குடிகெடுத்த காச்சலிட குடிலந்தீரும்
நாளுமே சுரமுதலாய்த் தீருமப்பா
நாட்டோர்க்குச் செய்திடவே நன்மையாமே. 145

140, 145-வது உரை

கௌரிபாஷாணம் 1-பலம் எடுத்து 3-நாள் முலைப்பாலில் ஊற வைத்து எடுத்து ஒட்டில்வைத்து முலைப்பாலால் 4-சாமம் சுருக்குக் கொடுக்கச் சுத்தியாகும் தாளகம் அரைபலத்தை சுண்ணும்புக்குள் வைத்து தண்ணீர் ஊற்றி நீற்றியபின் எடுத்து அதுபோல் 7-முறை நீற்றபின் சுத்தியாகும் சுத்தியான இரண்டு சரக்கையும் கல்வத்தி விட்டு முலைப்பாலால் 4 சாமம் அரைத்து உழுந்துப் பிரமாணம் உண்டைசெய்து நிழலிலுலர்த்தி, சுரம்வாதத்துக்கு 3-நாளில் காலை மாலை முலைப்பாலில் கொடுக்கத்தீரும். துவரை, கத்திரிப்பிஞ்சு சேர்த்தல் புளிக்கவும் இகனல் வாதசுரம், பித்தசுரம், சீதளச் சுரம் மூன்று முறைச்சுரம் முதலியவைகள் நீரும் பத்தியம் தவரிவிட்டால் மிளகுக் கிபாழம் சாப்பிடவும்.

சுரத்துக்குப் பாஷாண குளிகை :—

146, 747-வது கவி

நன்மையா மின்னமொரு குளிகைகேளு
நாடாத பாஷாணக் கட்டிவாங்கி
வெண்மையா மெருக்கம்பால் நாலுசாமம்
மீருமற் சுருக்கிடவே சுத்தியாகும்
வண்மையுள்ள யிலிங்கமதை முலைப்பால்தன்னில்
மார்க்கமுட னுற்சாமம் ஊறச்சுத்தி
தண்மையுள்ள வெண்மிளகுமூன்று மொன்றுய்த்
தான்சேர்த்துக் கல்வத்திலரைத் திட்டாயே. 146

அரைத்திடுவாய் சம்பழத்தின் சாற்றினாலே
அப்பனே நாற்சாம மரைத்துநீயுந்
திறத்துடனே வுளுந்துபோற் றிட்டிமைந்தா
திறமாக நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு
பரப்புடனே குளிர்காய்ச்சல் சகலத்துக்கும்
பண்பாக குளிர்ந்தநீர் தன்னிற்றக்கு
உரைத்துமே மூன்றுநா ளாறுவேளை
உத்தமனே தான்கொடுக்க வொழிந்துபோமே. 147

146, 147-வது உரை

பாஷாணக் கட்டியை எருக்கன் பாலில் 4-ஜாமம் சுருக்குக் கொடுக்க சுத்தியாகும் லிங்கத்தை முலைப்பாலில் 4-ஜாமம் ஊறவைத்தால் சுத்தியாகும். வெள்ளை மிளகு 3-ம் ஒரிடைபாக எலுமிச்சைன் பழச்சாற்றால் 4-ஜாமம் அரைத்து உளுந்துப் பிரமாணம். உருண்டை செய்து நிழலில் உலரவைத்து குளிர் சுரம் இவைகளுக்கு குளிர்ந்த ஜலத்தில் 3-நாள் காலை மாலை 6-வேளை கொடுக்கத்தீரும்.

148, 149-வது கவி

போமப்பா புளியுப்புமற் றென்றுக்கால்
புலத்தியனே வழுதுணையுந் துவரையாகும்
நாமப்பா ஏழாநாளொன்று கேளு
நன்மையுள்ள மிளகினிட கிபாழுமீந்து
வேமப்பா எட்டாநாளோ மந்தேய்த்து
வெந்நீரான் முழுக்காடிச் சுட்டபுளிகூட்டித்
தாமப்பா குளிர்சுரங்கள் தானேதீர்ந்து
தன்மையுடன் றனிருப்பார் தயவாய்க்கேளே. 148

கேளப்பா வாந்தியுடன் பித்தமீறில்
கிருபையுடன் மிளகுநீர் குடிக்கத்தீரும்

வேளப்பா பாஷாணந் தின்றபேர்க்கு
விதமாக மிளகொரு சேர்தன்னைவாங்கி
நாளப்பா தானரைத்தே வுள்ளுக்கிய
நன்மையுள்ள பாஷாணம் வீறுகெட்டுத்
தாளப்ப மலத்துடனே மலமாய்ப்போகுந்
தயவான மாற்றறிந்து தனதாய்நில்லே. 149

148, 149-வது உரை

மேற்குறித்த குளிகையைச் சாப்பிடும்போது புளி உப்பு தள்ளவும், வழுதிணை அல்லது துவரைப்பருப்பு சேர்க்கவும் 7-ம் நாள் மிளகுரச கிபாழப் கொடுக்கவும் 8-ம் நாள் ஓமம் தேய்த்து வெண்ணீரால் தலைமுழுகி புளியை கட்டும் உப்பை வருத்தும் சேர்க்கவும், இவ்வாறு செய்தால் குளிர்சுரங்கள் தீரும் பித்தம் மீரி வாந்தி அதிகரித்தால் மிளகு நீர்குடிக்கத்தீரும். பாஷாணச் சம்மந்தப்பட்ட வஸ்துக்களேயும் பாஷாணத்தையும் சாப்பிட்ட பேர்களுக்கு மிளகு 1-சேர் எடுத்தரைத்துக் கொடுக்க விஷம் மலத்தோடு வந்துவிடும் ஒன்றும் செய்யாது.

சுரத்துக்கு அபிமன்னன் குளிகை :—

150, 153-வது கவி

நில்லப்பா யின்னமொரு குளிகைகேளு
நிலையாத சுரங்களது நிவர்த்தியாக
அல்லப்பா வபினியது விராகனிடையாறு
அன்பான சுக்குமதுவிராக னிடையேழு
நல்லம்பர் விராகனிடை திப்பிலியுமிட்டு
நன்மையுள்ள சீரகமுமொன்ப திடைகூட்டு
சொல்லப்பா மிளகுபத்து விராகனிடையாகச்
சுகமாக வைத்துமொன்றாய்க் கல்வத்திட்டே. 150

கல்வத்தி லரைத்திடுவாய் விஷ்ணுகாந்தி
கனமான கியாழமதாய் நாலுசாமம்
வலுமைபெறத் தானரைத்துக் குன்றிப்போலே
மைந்தனே தானுருட்டி நிழலிலுலர்த்தி
அலைவுபெற்ற சுரங்களுக்கு மூன்றுநாள்தா
னப்பனே தான் கொடுக்க வனுபானங்கேள்
சுரநலுவைத்த வில்லையொடு விஷ்ணுகாந்தி
நன்மையுள்ள சிரகம்வெற்றிலை யின்காம்பே. 151

காம்புடனே நாலுமொன்றாய்க் கியாழஞ்செய்து
கனமான வொருகுளிகை யாறுவேளை
காம்புடனே தான்கொடுக்க சுரங்கள்தீரும்
சருவான கழிச்சலொடு தாபசுரந்தீரும்
நாம்பான பெரியோர்க்குஞ் சிறியோர்க்குமாகும்
நன்மையுள்ள பத்தியந்தான் புளியைமாற்று
வேம்பான புளிகூட்டில் வேறொன்றில்லை
விதமான காய்ச்சலது விட்டிடாதே. 152

விட்டிடாச் சுரங்களுக்கு மூன்றுவகைக்குளிகை
விதமாகச் சொன்னதைநீ செய்துமைந்தா
இட்டிடுவாய்ப் பெட்டியிலே பணங்கள்போலே
இருத்திவைத்த குளிகைகட்டு முயிருண்டாகும்
பட்டிடவே நாட்சென்றால் குளிகைவேகம்
பார்க்குமுன்னே சுரங்களெல்லாம் பதறியோடும்
விட்டிகள்போல் துடிதுடிக்கச் செய்யவென்றால்
சுகமாக குளிகையொன்று சொல்லுவேனே. 153

150, 153-வது உரை

அயன் விராகனிடை-6 சுக்கு விராகனிடை-7 அம்பர் விராகனிடை-9 மிளகு விராகனிடை-10 இவைகளைக் கல்வத்திலிட்டு

விஷ்ணுகாந்திச் சியாழத்தில் 4-சாமம் அரைத்து குன்றிமணிப் பிரமாணம். உண்டைசெய்து நிழலிலுலர்த்தி காலை மாலை ஒரு மாத்திரை வீதம் 3-நாள் கொடுக்க தபாசுரம் வயிற்றப்போக்கு சகலவிதமான சுரக்கள் தீரும் பத்தியம் புளியாகாது இந்தக் குளிகை நாள்பட அதிகவேகம்.

சுரத்துக்கு வெண்காரக்குளிகை :—

154, 157-வது கவி

சொல்லுவேன் லிங்கமொன்று நாபியொன்று
சுகமாக வேண்காரம் திப்பிலியுமிளகும்
வெல்லுவே னேர்வாளமாறு விதமாகச்
சுத்திசெய்து மேசமனுகக் கூட்டிக்
கொல்லுவேன் பழச்சாற்றால் நன்றாயாட்டி
கிருபையுடன் குன்றிபோல் நிழலிலுலர்த்தி
நல்குவேன் பதனமதா வைத்துக்கொண்டு
நன்மையுள்ள வாதசுரந் தனக்குக்கேளே. 154

கேளப்பா மூன்றுநா ளாறுபோது
கிருபையுள்ள சர்க்கரையி லுண்ணத்தீரும்
நாளப்பா பித்தசுரந் தனுக்குத்தானும்
நற்சிரகத்தி னிடநீரிற் றூக்கு
வாளப்பா சேத்மசுரம் யிஞ்சியிலேதீரும்
வண்மையுள்ள மூன்றுநாள் கொடுக்கும்போது
தாளப்பா சுரமெல்லாந் தவறுண்டேபோம்
தன்மையில்லா பத்தியந்தான் புளியாகாதே. 155

புளியாகுந் தின்னதினுற் சுரந்தீராது
பூதலத்திற் பேதிக்கோ கொடுக்கவென்றால்
வளியான மாத்திரை தானிரண்டுதந்து
வண்பையுள்ள மிளகதனை யொன்றுதப்பி

வெளியான மாத்திரையைத் தின்னசொல்லி
விவரமுடன் துன்மலங்கள் வெளியாயப்போகும்
ஒளியான துன்மலங்க ளொழிந்துதானல்
உத்தமனே மிளகுநீர் சாதமுண்ணே. 156

சாதமுண்டு சாயங்காலஞ் சுக்குநீர்கேள்
சமர்த்தான பேதியதுநிரம் பவானல்
நீதமொன்று நீமயங்கிப் பொய்விடாதே
நிலவாவாய்த்து வரையின் பருப்போடொக்க
பாதமென்ற அரிசியிட்டுக் கிச்சடிபோற்பொங்கிப்
பதமாகநெய் யூற்றித்தின்ன நிற்கும்
பேதமொன்று மில்லைபடா வசம்புதன்னைப்
பிரியமுடன் கருக்கிடவே பேதமாமே. 157

154, 157-வது உரை

லிங்கம், நாபி, வெண்காரம், திப்பிலி, மிளகு, நேர்வளம் இவை 6-சுத்திசெய்து சரியெடை யெடுத்துக் கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து குன்றிமணி பிரமாணம் உண்டைசெய்து வாத சுரத்துக்கு 3-நாள் 6-வேளை சர்க்கரையிலும், பித்தசுரத்திற்கு, நற் சீரகக் கியாழத்திலும் 3-நாள் சிலேத்ம சுரத்திற்கு இஞ்சிக் கியாழத் திலும் கொடுக்கத்தீரும் புளியாகாது மிளகுக் கியாழத்தில் இரண்டு மாத்திரை கொடுக்க பேதியாகும். பழையமலங்கள் வெளியானதும் மிளகு ரசத்தோடு சாதம் சாப்பிடவும் மாலை சுக்குக் கியாழம் சாப்பிட வும் பேதி அதிகமானல் துவரைப்பருப்பும் அரிசியும் சேர்த்துக் கிச்சடிசெயுது நெய்விட்டு சாப்பிட நிற்கும். வசம்பு கருக்கிக் கியாழ மிட்டுச் சாப்பிட்டால் பேதி நிற்கும்.

வாலைசஞ்சீவி குளிகை :—

158, 159-வது கவி

பேதமா யின்னமொரு குளிகைகேளு
பிரியமுடன் திரிகடுகுமிலிங் கமோபம்

பேதமாம் வெண்காரங் கிராம்புகூட்டிப்
பிலமாக எழுமொன்றாய்க் கல்வத்திலிட்டுப்
பேதமாம் பழச்சாற்றால் நன்றாயாட்டி
பெருமையுள்ள வுளுந்ததுபொற் குளிகைகட்டிப்
பேதமர நிழலிலே யுலர்த்திக்கொண்டு
பெருமையுள்ள சுரங்களுக்குப் புகலக்கேளே. 158

கேளப்பா துளசிச்சாற தனிற்றாக்குக்
கிருபையுள்ள நாய்த்துளசிச் சாறுமாகுங்
கேளப்பா முலைப்பாலிற் றாக்கினுக்கால்
குணமாகுஞ் சந்நிசுரம் பாலகர்க்கு
நாளப்பா மூன்றுநாள் கொடுக்கச்சொல்லு
நன்மையுள்ள சலதோஷ நாடிற்றானல்
வாளப்பா வெற்றிலையில் மென்றுதின்ன
வளமான நீர்தோஷமா றிப்போமே. 159

158, 159-வது உரை

சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், வெண்காரம், கிராம்பு அல்லது லவுங்கம் இந்த 7-சரக்கையும் எலுமிச்சம் பழச்சாற்றில் நன்றாக அரைத்து உளுந்துப் பிரமாணம் உண்டைசெய்து நிழலிலுலர்த்தி, சுரங்களுக்கு துளசிச் சாற்றாலும் நாய் துளசிச் சாற்றாலும் கொடு சந்நிசுரங்களுக்கு முலைப்பாலாலும் ஜலதோஷத்திற்கு வெற்றிலைச் சாற்றாலும் 3-நாள் 6-வேளை கொடுக்கவும்.

வாலைபேதிக் குளிகை :—

160, 161-வது கவி

மாறிப்போம் மின்னமொரு வாலைபேதி
மகத்தான குளிகையொன்று வகையாய்ச்சொல்

தேரிப்போ மிளகிடையோ ரைந்துங்கூட்டித் [வேன்
திறமானசுக்கு திப்பிலியும் ஓமம்
கூறிப்போம் ரோகணியுங் கூர்மத்தோடு
கோஷ்டமுட னெல்லாமோ ரிடையாய்க்கூட்டி
ஆறிப்போஞ் சுத்திசெய்த வாளமைந்து
அப்பனே பழச்சாற்று லடைத்திடாரே. 160

அரைத்துமே மிளகளவா யுருட்டிக்கொண்டே
அய்யனே நிழலுலர்த்தி முலைப்பாலிற்றன்
உரைத்தீயக் குழந்தைகட்குப் பேதியாகும்
உத்தமனே சந்நிசுரஞ் சீதசுரங்கூட
இரைத்திடுமே யிடுப்புவலியுள்ள தெல்லாம்
இன்பமுடன் றன்தீரும் வேணநோய்கள்
கரைத்துமே வெந்நீருஞ் சாதமுண்ண
கனமான பேதிநிற்கும் கண்டுபாரே. 161

160, 161-வது உரை

மிளகு 5-விராகனிடை சுக்குத் திப்பிலி ஓமம் கடுகுரோகிணி ஆமையோடு கோஷ்டம் எல்லாம் சமனெடை எடுத்து சுத்திசெய்து நேர்வாளம் 5-விராகனிடை கூட்டி எலுமிச்சம் பழச்சாற்றிலரைத்து மிளகுப் பிரமாணம் உண்டைசெய்து நிழலிலுலர்த்திக் குழந்தைகளுக்கு முலைப்பாலில் கொடுக்க பேதியாகும். சந்நிசுரம் சீதசுரம் இடுப்புவலி தீரும் சாதத்தை வெந்நீரில் கரைத்துண்ண பேதி நிற்கும்.

பேதி மாத்திரை :—

162, 164-வது கவி

பாரப்பா வின்னமொரு குளிகைகேளு
பாங்கான சாதிக்காயோ மங்கிராம்பு

காரப்பா கரியசிரக முஞ்சுக்கு
கனமான திப்பிலியுங் கஸ்தூரிமஞ்சள்
சாரப்பா வசம்புடனே காயமொக்கச்
சரியிடையா யொன்பதுக்குச் சமன்தான்கேளு
மேரப்பா வெள்ளைக்காக் கணத்தின்பட்டை
விதமாகத் தான்கூட்டி வெந்நீராலே. 162

வெந்நீராற் றனரைத்துச் சுண்டைக்காய்போல்
விதமாகத் தானுலர்த்தி வைத்துக்கொண்டு
வெந்நீராற் குழந்தைகட் கேழுநாள்தான்
விதமாகத் தான்கொடுக்க வுப்பாகாது
வெந்நீராற் சாதமிட்டே யுண்டாரானல்
வேண்டியதோர் நோய்தீரும் விளம்பக்கேளு
வெந்நீராஞ்சளி யிருமல்கக் கல்காய்ச்சல்
மீறிவரும் சுழிகணங்கள் விச்சுழியும்போமே 163

போமப்பா அள்ளுடனே ஜன்னிதோஷம்
பொல்லாத வலிப்புடனே விஷசுரங்கள்
போமப்பா மந்தமுடன் வயிறுநோயும் [னேன்
பொறுமலுட னிரைச்சலுமே போகுஞ்சொன்
போமப்பா வசம்பதனைச் சுட்டுகூடு
போக்கடா பச்சையென்றால் பேதிரொம்ப
போமப்பா சுட்டதினல் மட்டாம்பேதி
போகுமடா மற்றநோய் புனிதமாமே. 164

162, 164-வது உரை

சாதிக்காய், ஓமம் (கிராம்பு) லவுங்கம், கருஞ்சீரகம் சுக்கு, கஸ்தூரி மஞ்சள் வசம்பு பெருங்காயம் இந்த ஒன்பது சரக்கும் சமனிடை கூட்டி அதற்குச் சரியெடை வெள்ளைக் கக்கணம்பட்டை வெண்ணீரால் அரைத்து சுண்டக்காய் பருமணம் உண்டைசெய்து உலர்த்தி

வைத்துக்கொண்டு குழந்தைகளுக்கு 7-நாள் வெண்ணீரில் கொடுக்கவும் பத்தியம் உப்பு நீக்கவும், வெண்ணீர் சாதம் கொடுக்கவும் தீரும் வியாதி ; சளி இருமல் கக்கல் சுரம் சிழிகணங்கள், அல்லுமாந்தம் சந்நிதோஷம் வலிப்பு விஷசுரம் வயிறுநோய் பொருமல் இரைச்சல் வசம்பைச் சுட்டுச் சேர்க்கவும் பச்சைசேர்த்தால் அதிகபேதியாகும்.

ஜன்னிக்குத்தாம்பர குளிகை :—

165, 169-வது கவி

புனிதமுடன் தாம்பரத்தை தூளதாக்கி
புண்ணியனே சட்டியிட்டு வறுக்கும்போது
கனிதமுள்ள புளியாரைசிறு கீரைதானும்
கடுகளவாகத் தான்போட்டு நாலுசாமம்
இனிதமுடன் வறுக்கையிலே மாண்டுபோகும்
என்மகனே யிதில்கழஞ்சி யாறுதூக்கி
வனிதமுடன் வாலைரசங் கழஞ்சியாறு
வண்மையுள்ள கெந்தியது களஞ்சியாறே. 165

ஆறுகு மருந்தெலாங் கல்வத்திட்டே
அப்பனே செருப்படைச் சார்விட்டேயாட்டிக்
கூறுன மிளகதுபோ லுருட்டிக்கொண்டு
குணமாகத் தானுலர்த்திக் குப்பிக்கேற்றி
மீறுமல் வாய்மூடி மண்ணுஞ்செய்து
விளங்கவே காயவைத்துத் தாளிக்குள்ளே
பாறுமல் அங்குலனல் மணல்தானிட்டுப்
பண்பாக்க குப்பில்வைத்து மேலேமூடே 166

மூடியே மணலிட்டுச் சட்டிமூடி
மூர்க்கமுடன் மண்சிலை மூணுஞ்செய்து

தேடியே கணபதிக்குப் பூசைபண்ணித்
திரமாக வாலுகையி லிரண்டுசாமம்
நாடியே கமலம்போ லெரித்துநீயு
நலமாகத் தானிறக்கி யாறவைத்துக்
கூடியே குப்பியுள்ளே மருந்தைத்தானுங்
குணமாகத் தானெடுத்துக் கல்வத்திலிட்டே 167

இட்டுநன்று யரைத்திடுவா யிஞ்சிச்சாற்றி
லென்மகனே பருத்திவிரைப் பிரமாணந்தான்
பட்டுநன்றாய்த் தானுருட்டிக் காயவைத்துப்
பாங்கான பரணியிலே பதனம்பண்ணிப்
பிட்டுநன்றாய்த் துளசிச்சார் தன்னிலேதான்
பிலமான திரிகடுகு தூளுஞ்சேர்த்து
அட்டிபண்ண திருபோது மூன்றுநாளு
மடவாகத் தான்குடிக்க வகலுநோய்கேள். 168

கேளப்பா பதின்மூன்று சந்நிதீருங்
கிருபையுள்ள தோஷமெல்லாங் கெதிகேட்டோடு
வாளப்பா வசாத்தியமாஞ் சந்நிகூட [ம்
மைந்தனே தீருமடா மருவிப்பாரு
நாளப்பா வுப்பில்லாப் பத்தியம்வைத்து
நன்மையுள்ள பொரியரிசிக் கஞ்சிகொள்ள
தாழ்வப்பா யொருநாளு மில்லையில்லை
தன்மையுள்ள சந்நியெல்லாந் தணிந்துபோமே 169

165, 169-வது உரை

தாம்தம்பிரப் பொடியைச் சட்டியிலிட்டு வறுக்கும்போது புளி யாரைக்கீரை சிறுகீரை இவை இரண்டையும்சிறுகச் சிறுகப்போட்டு 4-சாமம் வறுத்துப் பொடிசெய்து அந்தப் பொடியில் 6-கழஞ்சு எடை வாலேரசம் கழஞ்சு எடை-6 கெந்தகம் கழஞ்சி 6 இவைகளைக்

கல்வத்தி லிட்டு சிறு செருப்படை சாருவிட்டு மிளகுப் பிரமாணம் உருட்டி நிழலிலுலர்த்திக்கொண்டு குப்பியிலிட்டு சீலைமண்செய்து மண்பாத்திரம் அல்லது தாளியில்வைத்து வாலுகையிலெரித்து கணபதிக்குபூசைசெய்து இறக்கி மருந்து எடுத்து இஞ்சிச் சாற்றிலரைத்து பருத்திவிரைப் பிரமாணம் உண்டைசெய்து வைத்துக்கொண்டு துளசிரசத்தில் சுக்கு மிளகு திப்பிலி தூள்போட்டு 1-குளிகை வீதம் காலையாலை 3-நாள் கொடுக்க சந்நி அசாத்திய சந்நிதீரும் பத்தியம் உப்பாகாது பொரியரிசிக் கஞ்சி சாப்பிடவும.

சாம்பிராணி பதக்கம் :—

170, 174-வது கவி

போமப்பா வின்னமொரு குளிகைகேளு
புண்ணியனே சாம்பிராணிமுதற் றாமாய்த்தானு
நாமப்பா பளிங்காக நாலுபலம்வாங்கி
நன்றாகப் பொடிசெய்து சட்டியிட்டு
ஓமப்பா மேற்சட்டிக் குள்ளேநீயு
முத்தமனே காகிதத்தை யுருப்போலொட்டி
நாமப்பா மேன்மூடிச் சீலைசெய்து
நன்மையுள்ள வடுப்பேற்றித் தீபம்வையே. 170

வைத்தக்கால் பசுநெய்யாற் றீபமேற்றி
மைந்தனே யடிச்சட்டி தூரிற்சூடு
வைத்தக்கால் நாற்சாமம் சென்றபின்பு
வண்மையுடன் றனிறக்கிப் படுக்கப்போட்டு
செய்ததொரு சீலைமண் ணவிழ்த்துமெள்ளத்
திறமான மேற்சட்டி காகிதத்து
நனைத்ததொரு வப்பிரகப் பற்பம்போலே
நன்மையுள்ள வாசமதாய் மணக்கும்பாரே. 171

பாரப்பா வப்பூவையெடுத்து நீயும்
பாங்கான வெற்றிலைப் பாக்குண்ணும்போது
நேரப்பா மிளகதுவுந் தின்றுவந்தால்
நேர்மையுள்ள தாதுவிர்த்தி நிலைக்கும்பாரு
காரப்பா வப்பூவுங் கழஞ்சிரண்டு
கனமான கிராம்புபோற் கழஞ்சிமூன்று
கூரப்பா கோரோசனை கழஞ்சியொன்று
கூட்டியரை வெற்றிலையின் சாற்றினாலே. 172

சாற்றினா லிருநாழியரைத்து மைந்தா
தன்மையுள்ள குன்றிபோற் குளிகைகட்டி
ஆற்றிநன்றாய் நிழலினிலே பதனம்பண்ணு
அப்பனே தேனிலொரு குளிகையீந்தார்
போற்றியே மூன்றுநாளாறு போதிற்
பொல்லாத சூதத்தின் சுரங்கடீரும்
பார்த்திபனே நெய்மிளகி லீய்ந்தாயானாற்
பறந்துபோம் சூதகத்தின் சயங்கடானே. 473

சயமான சர்க்கரையி லேழுநாள்தான்
தன்மையுடன் றான்கொடுக்க தயவாய்க்கேளு
மயமான சூதகத்தின் வாய்வினோடு
மைந்தனே வுதிரத்தின் கட்டுதீரும்
நயமான வெற்றிலையில் மென்றுதின்ன
நன்மையில்லா சகசந்நி நாடாதோடும்
பயமென்ன பத்தியத்தின் பயமேயில்லை
பரமான பூரணத்தின் பதிவுதானே 174

170, 174-வது உரை

முதல்தரமான பளிங்கு சாம்பராணி 4-பலம் பொடிசெய்து ஒரு சட்டிகளும் மேல்சட்டியில் காகிதத்தை உருட்டி ஒட்டிமேல் சட்டியை மூடி சீலைமண்செய்து அடுப்பில்வைத்து பசுநெய்யினால்

விளக்கேற்றி வைத்தால் அடிச்சட்டிக்குச் சூடுபெற்றிக் கொள்ளும் 4-சாயம் எரித்தபிறகு எடுத்து ஆறவைத்து சீலைமண்ணை அவிழ்த்துப் பார் மேல்சட்டியில் ஒட்டிய காகிதத்திலிருக்கும் பதக்கம் பரிமளத்தோடு இருக்கும் அதை எடுத்து மிளகுப் பிரமாணம் வெற்றிலையில் சாப்பிட்டு வந்தால் தாதுவிர்த்தியுண்டாகும் சாம்பிராணி பதக்கம் கழஞ்சு-2 கிராம்பு கழஞ்சு-3 கோரோஷனை கழஞ்சு-1 இவைகளை வெற்றிலைச்சாற்றால் 2-நாழிகை யரைத்து குன்றிமணிப் பிரமாணம் உண்டைசெய்து வைத்துக்கொண்டு தேனில் 3-நாளைக்கு காலைமாலை ஒரு குளிகை வீதம் கொடுக்க சூதசுரம் தீரும் நெய் மிளகு இவைகளில் கொடுக்கச் சூதகசயம் தீரும் சர்க்கரையில் கொடுக்க சூதக வாய்வு உதிரக்கட்டு தீரும் வெற்றிலையில் கொடுக்க சூதக சந்நிதீரும் இதற்குப பத்தியம் ஒன்றும் கிடையாது-

கட்டுவாதி மாத்திரை :—

175, 177-வது கவி

தானென்ற யின்னமொரு குளிகைகேளு
 தண்மையுடன் சாதிக்காய் சாதிபத்திரி
மானென்ற மாசிக்காய் கிராம்புகோஷ்ட
 மதுரமுட னதிவிடையம் லவங்கப்பட்டை
தேனென்ற வில்வுடனே விளாம்பிசினுமொன்றாய்ச்
 சேர்த்தரைத்து மாதுளங்காய்க் குள்ளே வைத்து
கோனென்ற வெண்சிலை பொதிந்துசுற்றிக்
 குணமாக வதன்மேலே சாணமப்பே. 175

அப்பியே காட்டெருவிற் புடத்தைப்போடு
 அண்டையிலே பார்த்திருநீ வாயவேகாமற்
றப்பியே சாணமது வெந்துபற்றிற்
 றுன்காயில் வேகையிலே தள்ளிக்கொண்டு
ஒப்பியே கவசமொடு சிலைநீக்கி
 உத்தமனே கல்வத்திலரைக் கும்போது
செப்பினேன் கஞ்சாவின் சாற்றாலாட்டி
 சிறுசுண்டக் காய்ப்போல வுருட்டுவாயே. 176

உருட்டியே நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
வுண்மையுடன் வடிதயிரி லீந்தாயானாற்
றிரட்டையைப் போலிரத்தமுடன் கடுப்புஞ்சீதந்
தீராத மூலரத்தந்தீருஞ் சொன்னேன்
மிரட்டியே தேனிலிட வதிசாரபேதி
மீளுமடா பத்தியமோ புளியுமாகுஞ்
சுருட்டிமிக மிளகாயைக் கூட்டிடாதே
துடிமெத்த விரத்தமடா துணிந்துபாரே. 177

175, 177-வது உரை

சாதிக்காய் சாதிப்பத்திரி மாசிக்காய், கிராம்பு கோஷ்டம் அதிமதுரம் அதிவிடயம் லவுங்கப்பட்டை வில்வம், விலாம்பிசினு இவைகளைச் சேர்த்தரைத்து மாதுளங்காய்க்குள்ளே வைத்து வெள்ளைத் துணி சுற்றி அதன்மேலே சாணம்பூசி கட்டெருவிற் புடத்தைப் போட்டு பார்த்துக்கொண்டிருக்க சாணம் வெந்து காய்வேகும்போது எடுத்து மேல் கவசம நீக்கி கஞ்சாச் சாற்றில் அரைத்து சிறுசுண்டக்காய் வீதம் உண்டைசெய்து வைத்துக்கொண்டு ரத்தம் சீதம் கடுப்பு மூலரத்தம் இவைகளுக்குத் தயிரிலும் அதிகாரப் பேதிக்கு தேனிலும் கொடுக்கத்தீரும் பத்தியம் புளியாகும் மிளகாய் சேர்க்கக்கூடாது.

இரசகற்பூரக் குளிகை :—

178, 181-வது கவி

பாரப்பா வின்னமொரு குளிகைகேளு
பதிவான முலைப்பாலில் மூன்றுநாள்தான்
நேரப்பா வூறினதோர் ரசகற்பூர
நினைவாக விராகனிடை யஞ்சுங்கூட்டி
காரப்பா முளைநீக்கி வெள்ளைப்பூண்டு
கணக்காக விராகனிடை யிருபதுமேகூட்டி
சாரப்பா மிளகதுதான் விராகனிடைதானுந்
தண்மையுடன் முப்பதுமேதய வாய்க்கூட்டே. 178

கூட்டுவாய் வெற்றிலையி னிடைதான்கேளு
குணமாக நாற்பதிடை கூட்டிக்கொண்டு
நாட்டுவாய் பூரமதைநன்று யாட்டி
நன்மையுள்ள சரக்கெல்லா மொன்றாய்கூட்டி
ஆட்டிடுவாய் வெற்றிலையின் சாற்றினாலே
அப்பனே வறுசாம நன்றாயாட்டி
போட்டிடுவாய் சுண்டைக்காய்ப் போலுருட்டி
புனிதமுட னிழறனிலே வுலாத்திக்கொள்ளே. 179

கேளப்பா வந்திசந்தி யேழுநாளுங்
கிருபையுடன் றன்விழுங்கிப் பத்தியமேகாக்க
பாரப்பா உப்புடனே புளிப்பாகாது
பாங்கான வொருவேளை பசும்பால்விட்டு
நாளப்பா வேழுநாள் சென்றபின்பு
நன்மையுடன் வறுத்தவுப்பது வரைகூட்டு
கேளப்பா பதினைந்துநா ளிற்றானுங்
குணமாகத் தலைமுழுகி புளியைக்கூட்டே. 180

புளிகூட்டி ஓமநீர் விட்டபின்பு
புண்ணியனே யெண்ணெயிட்டு முழுகும்போது
வளியிட்ட வளிக்கிரந்தி லிங்கப்புற்று
வகையான சொரிகிரந்தி யோனிபுற்று
குழிபட்ட ரிணமாறுங் குழிக்கிரந்தி
கூறியதோர் கிரந்தியெல்லாங் குணமதாகும்
பழிவிட்டுச் சொன்னதொரு பூரணத்தைப்
பார்தனிலே விள்ளாதே யின்னங்கேளே. 181

178, 181-வது உரை

முலைபாலில் 3-நாள் ஊறின ரசகற்பூரம் 5-விராகனிடை முனை நீக்கிய வெள்ளைப்பூண்டு 20-விராகனிடை மிளகு 30-விராகனிடை

வெற்றிலை 40-விராகனிடையைக் கொண்டு ரசகற்பூரத்தை நன்று யரைத்துக்கொண்டு மற்ற சரக்குகள் எல்லாம் கூட்டி வெற்றிலைச் சாற்றால் 6-சாமம் அரைத்துச் சுண்டைக்காய் பிரமாணம் உண்டை செய்து உலர்த்தி வைத்துக்கொண்டு காலை மாலை 7-நாள் சப்பிட வளிகிறந்தி, லிங்கப்புற்று, சொரிகிறந்தி, யோனிப்புற்று குழிரெணம் குழிகிறந்தி முதலிய நோய்கள் தீரும் பத்தியம் உப்புப் புளி நீக்கவும் ஒருவேளை பசும்பால் விட்டு சாப்பிடவும் 7-நாளைக்குப்பின் வருத்த உப்பு துவரைப்பருப்புச் சேர்க்கவும் 15-நாள் தலை முழுகியபிறகு புளி கூட்டிக்கொள்ளவும்.

இலிங்கக்கட்டு:—

182, 185-வது கவி

கேளேநீ புலத்தியமகா ரிஷியேயையா
கிருபையுள்ள லிங்கமொரு கட்டியாகத்
தாளேநீ மூலைப்பாலி லூறப்போட்டுத்
தன்மையுடன் பத்தானாள் கழுவிப்பின்பு
வேளேநீ வெயிலிலுலர்த்தி வைத்துக்கொண்டு
விதமான விடைக்கிடைதான் கர்ப்பூரம்வாங்கு
வாளேநீ சாம்பிராணி பளிங்குபோலே
வாங்கிடுவாய் முன்போலே வளமாய்த்தானே. 182

வளமான சாம்பிராணி சூடன்கொண்டும்
வண்மையுடன் கல்வத்தின் மாளஆட்டி
மெழுகானலென்ன சொல்வேன் தீப்பறக்க ஆட்டிமேன் [மை
யுடன்வழித் ததைப்பத்து பங்காய்
வழுவாம லொருபங்கைச் சூலையோட்டி
வண்மையுட லிங்கமதைவைத் துருட்டி
நழுவாமல் விளக்கிலே கொளுத்திப்போடு
நன்மையுட னறினபின்னெடுத் துக்கொள்ளே. 183

எடுத்ததன்மேற் கரியைச்சுரண் டிப்போட்டு
இன்னமொரு பங்கதனை சிலையூட்டி
அடுத்துமதி லிங்கமதையுருட்டி முன்போல்
அப்பனே விளக்கினிலே கொளுத்தும்போது
பிடித்துமது தானெரித்து ஆறிப்போகும்
பின்பதைதான் முன்போலப் பத்துவிசைசெய்து
தொடுத்துநின்ற கரியெல்லாஞ் சுரண்டிபோட்டு
சுத்தமுடன் றேனிலிட வாய்வும்போமே. 184

போமப்பா திரிகடுகு சந்நிதோஷம்
பொல்லாத நெஞ்சடைப்பு வாய்வுமூர்ச்சை
தாமப்பா பேதிவயிற் றெரிச்சல்
றனியிஞ்சிச் சாற்றிலே தாக்கத்தீரும்
வேமப்பா சிலையொடு பித்தபாண்டு
வடபாகம் வயிற்றுவலி குன்மஞ்சோகை
பாமப்பா கொடுவேலி கியாழத்திய
பறக்குமடா வெகுரோகம றிந்துபாரே. 185

182, 185-வது உரை

லிங்கம் ஒரே கட்டியாகக் கொண்டு வந்து 10-நாள் முலைப் பாலில் ஊறப்போட்டு கடுவெய்யலில் உலர்த்தி அதன் எடைக்கு சரி எடை கர்ப்பூரம் சாம்பிராணி இரண்டும் கல்வத்திலிட்டு அரைத்து மெழுகு பதத்தில் வழித்து எடுத்துக்கொண்டு 10-பாகஞ்செய்து ஒரு பாகத்தை சீலையிலூட்டி அச்சீலையில் விளக்கத்தை வைத்துச் சுற்றி விளக்கில் கொழுத்திப்போட்டு ஆரினபிறகு எடுத்து அதன் மேலுள்ள கரியை சுரண்டி எடுத்து விடு இதுபோல் 10-முறையும் செய்து வந்தால் சுத்தியாகும் தேனில் கொடுக்க வாய்வு தீரும் சுக்கு மிளகு திப்பிலிக் கியாழத்திலிட சந்நிதோஷம் தீரும் இன்னும் வாய்வு நெஞ்சடைப்பு மூர்ச்சை வயிற்றெரிவு பேதி இவைகளுக்கு இஞ்சிச் சாற்றில் கொடுக்க சுகமாகும். பித்தப் பாண்டு வயிற்றுவலி

குன்மம் பக்கவலி சோகை இவைகளுக்குக் கொடுவேலி கியாழத்தில் கொடுக்கத் தீரும்.

இரசகர்ப்பூரக்கட்டு :—

186, 189-வது கவி

பரிந்துமே யின்னமொரு கட்டுசொல்வேன்
பாலகனே ரசகற்பூரம் பலந்தானென்று
தெரிந்துமே ஒருகட்டியாக வாங்கி
விதமாகமுலைப் பாலிற்பத்து நாளும்
தெரிந்தும் நீஊறினபின் னுலர்த்திக்கொண்டு
திறமாக வெள்ளுள்ளி தயிலம்வாங்கி
இருந்துநீ முச்சாமஞ் சுருக்குத்தாக்கு
எடுத்துநீ சுரண்டியதை பின்னுங்கேளே. 186

பின்னுமோ ரோட்டிலே வெடியுப்புத்தானும்
பிரியமுட னஞ்சுபலம் பரப்பிமேலே
முன்னமே சொன்னதொரு பூரம்வைத்து
மூர்க்கமுடன் மேலுபவ் வீதமூடி
என்னமோ வென்றுநீ எண்ணிடாதே
என்மகனே கோழிமுட்டை யுடைத்துமேலே
சொன்னவே அஞ்சுமுட்டை யூற்றிமைந்தா
சுருக்காக வாசலடைப் பிட்டுக்கேளே. 187

கேளப்பா கால்நாழி கமலம்போலே
கிருபையுன் றுனெரிக்கவும் புப்போக்கி
வாளப்பா உருகியது நெருப்புப்பற்றும்
மைந்தனே அண்டத்தின் மகிமையாலே
கேளப்பா மாளுஉப்பு புகைந்திடாது
குழம்பு போலுருகியது கெட்டியாகும்
தாளப்பா விறக்கிவைத்துக் குளிர்ந்தபின்பு
தயவாக வுடைத்துமெள்ள வெடுத்துக்கொள்ளே 188

எடுத்து நீரினுள்ள வுப்புநீக்கி
என்மனே சந்நிசுரம் நாவரட்சி
தொடுத்துநின்ற மாளாதசந்நிக் கெல்லாம்
சுத்தமுடன் அனுபான மறிந்துசேர்த்தே
விடுத்துநின்ற லிங்கமுடன் கரைத்துத்தாக்க
விபரமுடன் வாதனேப் விட்டுப்போகும்
தடுத்துநின்ற கைபாகம் நன்றாய்ச்சொன்னேம்
தயவான பூரணத்தின் றன்மையாலே 189

186, 189-வது உரை

10-நாள் மூலைபாலில் ரசகற்பூரத்தை ஊரவைத்து ஒரே கட்டியாக எடுத்துக்கொண்டு வெள்ளைப் பூண்டுத் தைலத்தில் 3-சாமம் சுருக்குக் கொடுத்து எடுத்து ஒரு ஒட்டில் 5-பலம் வெடியுப்புப் பரப்பி அதன்மேல் ரசகற்பூரத்தை வைத்து மேலே வெடியுப்புப்போட்டு ஓடுமூடி அதன்மேல் 5-கோழி முட்டையை உடைத்து ஊற்றி (அடுப்பு) வாசலடுப்பிலிட்டு கால் நாழிகை கமலம்போல் எரிக்க உப்பு பொங்கி உறுகி நெருப்புப் பிடிக்கும் அப்போது ரசகர்ப்பூரம் உறுகிக் கட்டியாகும் உப்புப் புகையாது அதை எடுத்து ஆறியபின் உடைத்து மருந்தை எடுத்துவைத்துக்கொண்டு சுரம் சந்நி நவரட்சி இவைகளுக்குக் அனுபானத்துடன் கொடுக்கத்தீரும் வதமும்தீரும்.

190, 194-வது கவி

தன்மையென்ற யின்னமொரு வித்தைகேளு
தயவான தாளகத்தை ரேக்குப்போல
வன்மையுடன் லேசாகக்கிழித் துக்கொண்டு
மைந்தனே யரைப்பலந் தானிறுத்துக்கொண்டு
உண்மையுள்ள கிளிஞ்சியிலே அப்பிரகம்வைத்து
உறிதியுள்ள தாளகத்தை யிட்டுமேலே
கண்மையென்ற களிப்புறட்டை கீறைச்சாற்றைக்
கனமாகத்தான் பிழிந்துமேலே கேளே 190

கேளப்பா அப்பிரகத் தட்டால்மூடி
கிருபையுள்ள கிளிஞ்சிலதை மூடிகொண்டு
நாளப்பாபத்து எருச்சுற்றி வைத்து
நன்மையுடன் கீழ்மேல்ரண் டெருவும்வைத்து
தாளப்பா தீமூட்டிப் புகையுமாறித்
தன்மையுட னெரிக்ககன லெரியும்போது
வேளப்பா சூரட்டாலே மேலேருவைநீக்கு
விதமான கிளிச்சியதினடு வில்வையே 191

வைத்தப்பா மேல்நெருப் பெருவால்மூடி
மார்க்கமுடன் பாக்கடிக்குத் திறந்துமெள்ள
உத்தப்பா மேல்நெருப்பு கிளிச்சிநீக்கி
உன்மையுடன் ஞன்பார்க்க வுருகிநல்ல
சத்தப்பா வில்லாமல் செம்புபோல
தானிருந்தா விறக்கியதன் தூரிற்றன்னில்
வைத்தப்பா ஆறினபின் சிவந்துகாட்டும்
மார்க்கமுட னப்பிரகந் தள்ளிப்போடே 192

போடவே கட்டியாய் வைத்துக்கொண்டு
புண்ணியனே மூன்றுமொன்ருய்க் கூட்டித்தாக்கு
சாடவே சன்னிமுதல் சுரங்கள்தீரும்
தயவான தாளகத்தை மீட்டுக்கேளு
கூடவே கிராம்புதிப்பிலி சிற்றாத்தை
குணமாக வறுத்துநன்ருய் சாரனைதன்னில்
போடவே யிழைத்திடுவாய் தேனிற்ருனுந்
திறமான தாளகமிழைத்துக் கொள்ளே 193

கொள்ளவே தீருகிற வியாதிகேளு
குடிகெடுத்த பழையசுரங் குத்திரைச்சல்
துள்ளவே நதியோடு அன்னத்வேஷம்
துயரமுள்ள சேத்துமத்தின் சுரங்கமீரும்

வள்ளலார் பத்தியமோ விதற்கோவேண்டாம்
மைந்தனே புளிகூட்டிச் சோறுமுண்ணு
உள்ளபடி பூரணத்திற் றப்போயில்லை
யுறுதிவெகு வுறுதியடா வுண்மையாமே 194

190, 194-வது உரை

தாளகத்தை ரேக்குப்போல லேசாகக் கிழித்து அரைபலம் எடுத்துக்கொண்டுக் கிளிஞ்சலில் அபிரேகம் வைத்து அதன்மேல் தாளகத்தை வைத்துக் களிப்புரட்டைச் சாற்றை மேலே பிழிந்து அபிரேகம்மூடி அதன்மேல் கிளிஞ்சலிட்டு 10-வரட்டி சுற்றி வைத்துக் கீழும்மேலும் 2-வரட்டி வைத்து தீயிட்டு எரியும்போது மேல்வரட்டியை நீக்கிப் பார்க்க உறுகிச் செம்புபோலிருக்கும்போது இறக்கி ஆறியபின் எடுத்துப்பார்க்கக் கட்டியிருக்கும் அதை எடுத்துக்கொண்டு லிங்கக்கட்டு, பூரக்கட்டு, இத்துடன் கொடுக்க சுரம் சந்நிதீரும். தாளகம் கிராம்பு திப்பிலி சிற்றரத்தை வறுத்துச் சூரணிக்கியாழமிட்டு தாளகம் தேனில் சாப்பிட்டு மேலே சொன்ன கியாழம் சாப்பிட பழைய சுரம் குத்திரச்சல் சந்நி அன்னத்துவேஷம் சிலேத்மசுரம் தீரும் பத்தியமில்லை.

தாளகற்பம் :—

195, 201-வது கவி

உண்மையுட னின்னமொரு வித்தைகேளு
உறுதியுள்ள தாளகத்தின் பற்பஞ்சொல்வேன்
நன்மையுடன் வெடியுப்பு புளியுமொன்றாய்
நாட்டமுடன் றனிடித்து வட்டுபோல
வெண்மையா யோட்டிவிட்டு வாசல்தன்னில்
விதமாக வடுப்பிட்டு வனலைமூட்டு
தன்மையுட னோட்டை யனல்மீதில்வைத்து
தானடுக்கி நின்றுமெள்ள பார்த்தாலே. 195

பார்த்தாலே யனற்சூடு வுரைக்கும்போது
பாங்கான வெடியுப்பு பற்றிப்போதுங்
காத்தாலே வில்லையது கறுத்துக்காணுங்
கனமாகப் மபாடிசெய்து பீங்கானிலிட்டு
மேத்தானே குழிவெட்டி வைத்துமூடி
விதமாக மேலமூடிகாற் றுடாமல்
பார்த்தாலே மூன்றுநாட் கழிவுகண்டு
பாலகனே பொருபக்கங் தண்ணீராமே 196

தண்ணீரா மந்நீரைசெந்நீ ரென்பார்
தன்மையுட னூறோறு மெடுத்துக்குப்பி
அந்நீரை யடைத்து வைத்துக்கொண்டுநீயும்
அப்பனே தாளகத்தை வைத்துவாட்டி
பொன்னீர்பொற் கரியோட்டிற் கருகவாட்டு
புண்ணியனே நவக்கிரகஞ் சிவந்துகாணு
முன்னீரை விட்டுமே யரைத்துக்கொண்டு
மிஞ்சாம லேசாகவில்லை தட்டே 197

தட்டியே ரவிதனிலே காயவைத்து
கனமில்லா வகலிலே சிப்பிச்சுண்ணம்
இட்டுமே கீழ்மேலாய் வில்லைவைத்து
என்மகனே மண்சீலை ஏழுஞ்செய்து
பட்டுமே பத்தெருவிற் புடத்தைப்போடு
பாலகனே புடமாறி யெடுத்துப்பாரு
நட்டமே வாராது தவளம்போலாம்
நன்மையுட னன்னீரா லரைத்துப்போடே 198

போடப்பா முன்போலச் சீலைசெய்து
புனிதமுடன் பதினைந்து எருவிற்றனும்

நாடப்பா புடம்போட பற்பமாகும்
நன்மையதாய் வெளுக்காட்டால் முன்போலாட்டி
கூடப்பா விருபதொரு தன்னிற்போடக்
குருவான தாளகமு பற்பமாகும்
பாடப்பா பற்பத்தை பனவெல்லத்திற்
பாங்காக பணவிடை கால்பருகக்கேளே 199

பருகவே பித்தசுரம் பித்தவெட்டை
பாங்கான பித்தசயம் பித்தகாசம்
தருகவே மாடடாது மந்தகாசந்
தன்மையுள்ள வலிமேக ரோகம்
வருகவே மாட்டாது உப்பாகாது
மண்டலங்கால் கொண்டுவிட மார்க்கமாக
உருகவே வாதமெகன்று மலேத்திடாதே
உண்மையுடன் நோய்தீர்ந்தால் வாதமாமே 200

வாதமென்ற ரசவாத மூலத்தோர்க்கு
வாயாது வாகையென்ற வஞ்சகத்தால்
போதமென்ற சிவயோகம் பெற்றபேர்க்குப்
பூதலத்தி லாசையில்லை வாதங்கட்டும்
வேதமென்ற வேதவாக்கிய மீதாகுமப்பா
விருதாவில் வாதமென்முல் விழலாய்ப்போகும்
பாதமென்ற பாதமதை யறிந்தால்முத்தி
யாதவழி மார்க்கமதை பகரக்கேளே. 201

195, 201-வது உரை

வெடியுப்பும் புளியுமிடித்து பில்லைதட்டி கரித்துப் பொடித்து பீங்கானில் இட்டு குழிவெட்டி அதில்வைத்து மூடி 3 ம் நாள் எடுத்துப்பார்க்க ஒரு பக்கம் தண்ணீர் கசிந்து இர்கும், தாளகத்தை அக்

தண்ணீராலரைத்து பழைய ஓட்டில் கறுகவாட்டினுல் தாளகம் சிவந்தகாணும் அதை எடுத்து முன் நீரால் அரைத்து பில்லைதட்டிக் காயவைத்து அகலில் சிப்பிச் சுன்னம் வைத்து பில்லைவைத்து மேலே சின்னமிட்டு மூடி சீலை மண்செய்து 10-வரட்டியில் புடமிட்டு எடுத்துப்பார்க்க தவளம்போலிருக்கும் அதை முன் நீரால் அரைத்து சீலைமண்செய்து 15-வரட்டில் புடமிட பற்பமாகும் பற்பம் வெழுக்கா விட்டால் முன் நீரால் அரைத்துப் புடமிட பற்பமாகும் அதை கால் பண விடை பனவெல்லத்தில் கொடுக்கப் பித்தசுரம், பித்த வெட்டை பித்தசயம் பித்தக்காசம், மந்தகாசம், வலி, மேக ரோகம், தீரும், பத்தியம் உப்பு நீக்கவும்.

அகாரம் உகாரம் :—

202, 205-வது கவி

பகரக்கேள் புலத்தியனே தேகம்சித்தி
பராபர மாமுள்ளுயிராய் வாய்வுமாச்சு
நிகரில்லை ரண்டுமொன்றுல் நிலைத்தால்முத்தி
நினைவாக வுளத்தின் வீடுகேளு
புகலவே அகாரமதை கீழேதாக்கி
புரிந்துநின்றுல் உகாரமதை மேலேசேர்த்து
உகரக்கேள் மகாரத்தி னடுவேநின்று
உற்றுப்பார் பூரணத்தின் ஒளிகாண்பாயே. 202

காணப்பா சத்திசிவம் ஒன்றதாகக்
கலந்திருப்பாய் ஒருவருமே காணுர்காணுர்
தேன்போலே யருவியங்கோ பாயும்வீடு
திருவானசுளி முனையில் திறமாய்நின்றுல்
தான்போல தானுள்ளே தானேதோணும்
தனதாக முகமங்கே தானேதோணும்
வீணப்பா வலைந்துகெட்டு திரியவேண்டாம்
விபரமா யின்னமொரு பாகங்கேளே. 203

202, 203 வது உரை

அகாரத்தைக் கீழே தாக்கி உகரத்தை மேலே சேர்த்து மகாரத்தின் நடுவே இருந்து பார்க்கில் சகலமும் அவ்விடத்தில் தோன்றும்,

சிலாசித்து பற்பம் :—

204, 205 வது கவி

கேளப்பா சிலாசத்து யார்தான்காண்பார்
கிருபையுள்ள கற்பூரசத் துவாங்கி
நாளப்பா சுத்திசெய்து கல்வத்திட்டு
நன்மைசிறு செருப்படையின் சாற்றாலாட்டி
கேளப்பா லேசாகபில்லைசெல்து குணமாகக்
காயவைத்து வோட்டில் வைத்து
காளப்பா சீலைமண் மிதமாய்ச்செய்து
தன்மையுட னைம்பதெருப் புடத்திற்போடே 204
போட்டுமே ஆறவிட்டு முடிபோற்போடு
புண்ணியனே மூன்றுவிசை யரைத்துப்போடு
நாட்டுமே வெண்மையுமாய்ப் பற்பமாகும்
நன்மையுடன் மேலெரிவு மித்தவெட்டை
காட்டுமே பசுவெண்ணை தன்னிலீயக்
கனமான நீர்க்கடுப்புக் காணுதோடும்
பாட்டுமே பத்தியங்க ளுண்டோவில்லை
பாலகனே பற்பமுரை பரிந்துபாரே. 205

204, 205-வது உரை

கற்பூர சிலாசித்து சுத்தி செய்து கல்வத்திலிட்டு சிறு செருப்படைசார் விட்டரைத்து பில்லைசெய்து காயவைத்து ஒட்டில் வைத்து மேலே மூடி சீலை மண் செய்து 50 வரட்டியில் கெஜபுட போடவும்

இது போல் 3 முறை போட பற்பமாகும் பசு வெண்ணெயில் சாப்பிட மேலெரிவு, பித்த வெட்டை, நீர்க்கடுப்பு முதலியவை தீரும் பத்தியம் இல்லை.

வெண்கார பற்பம் :—

206, 208-வது கவி

பாரப்பா கற்பூர சிலையின்பற்பம்
பாங்காகக் கழஞ்சிரெண்டு அகலிலிட்டு
நேரப்பா வதின்மேலே நினைவாய்க்கேளு
நிலையாத வெண்காரஞ் சுத்திசெய்து
தாரப்பா கழஞ்சிரண்டு யிட்டுமேதான்
தயவாகமே லுமேகார மிட்டு
காரப்பா அகல்மூடிச் சீலைசெய்து
கனமாக மூணெருவிற் புடத்தைப்போடே. 206

போடப்பா ஆறினபின் னெடுத்துக்கொண்டு
பொல்லாத நீர்கட்டு நீர்க்கடுப்பு
தேடப்பா வெண்ணெயிலே யீந்தாயானல்
தீருமடா கல்லடைப்புத் தீரவென்றால்
நாடப்பா வராலினிட தலையின்கல்லு
நன்மையுள்ள வெள்ளரியின் விரையின்சாறு
கூடப்பா பற்பமுடன் கலக்கிக்கொள்ளக்
குடிகெடுத்த கல்லடைப்புக் குணமதாமே. 207

குணமாக மாட்டாமல்கல் லடைத்துக்கொண்டால்
குவலையத்தா ருன்னையுமே நகைசெய்யாமல்
குணமாக வின்னமொரு சப்பிரதாயங்
கூறுகிறேன் முள்ளங் கிடித்தசாறு

குணமாகக் காற்படியிற் பணவிடை
கால்பற்பங் கூட்டியே தான்கொடுக்கக்கல்லும்
குணமாகு முள்ளங்கி ஆண்மையப்பா [வீழ்ந்து
கூறுதவின்ன மொருபற்பம் பாரே. 208

206, 208-வது உரை

இரண்டு கழஞ்சு கற்பூர சிலாசித்து பற்பம் இரண்டு கழஞ்சு சுத்தி செய்து வெண்காரம் இவை இரண்டையும் அகலிலிட்டு 3 வரட்டியில் புடமிட்டு ஆறிய பின் எடுத்து நீர்க்கட்டு நீர்க்கடுப்புக்கு வெண்ணெயிலும் கல்லடைப்புக்கு விராலிச் செடியின் இலையில் வெள்ளரி விரை சார் கலந்து அதிலும் கல்லடைப்புக்கு முள்ளங்கி இடித்தச் சார் கால் படியில் கால் பண விடைப் பற்பங் கொடுக்கத் தீரும்.

வெள்வங்க பற்பம் நவமூலத்துக்கு :—

209, 212-வது கவி

பாரப்பா வின்னமொரு பற்பங்கேளு
பாங்கான வாலைரசங் கழஞ்சுமூணு
நேரப்பா வதினிடைக்கு வெள்வங்கந்தான்
நேர்த்தியாய்த் தொந்தித்துக் கல்வத்திலிட்டு
சாரப்பா கற்பூர சிலாசத்து
தானுந்தயவாகக் கழஞ்சியது மூன்றுங்கூட்டி
காரப்பா அரைத்திடுவாய் சுண்ணநீரால்
கடுவாகப் பில்லைதட்டி காயப்போடே. 209

காய்ந்தபின் ஒட்டிலிட்டுச் சீலைசெய்து
கருணையுடன் முப்பதெரு புடத்தைப்போடு
ஆய்ந்துநன் றாயாறியபின் னெடுத்துமைந்தா
அப்பனே முன்னீரா லிரண்டுஜாமம்

பாய்ந்துநன்ரு யரைத்துபில்லை ரவியிற்போடு
பங்கான வோட்டிலிட்டு சீலைமண்செய்
மாய்ந்து விடுமைம்ப தெருபுடத்துக்குள்ளே
மல்லிகைபூ நிறம்போலே வேண்மையாமே. 210

வெண்மையென்ற வெள்வங் கற்பந்தன்னை
விதமான பனவிடைதா னனுபானங்கேள்
வண்மையெண்ற மாதளம்பூ விதழ்தான்மைந்தா
மார்க்கமுடன் ரண்டுபலம் நிழலிணிலர்த்தி
நன்மையென்ற சீரகம் அவ்வீதங்கூட்டி
நலமானசூரணந்தான் பண்டைகால் கூட்டி
இண்மையுள்ள பசுநெய்யில் யிரண்டுவேலை
யுண்டிடவே மண்டலத்தி லுள்மூலந்தான். 211

உள்மூல வேளிமூல மிரத்தமூலம்
உண்மையில்லா மெய்நோயும் எலும்புறுக்கி
வெள்மூலஞ் சிழ்மூல மேல்மூலம்
விதமான சனிமூலம் பித்தமூலம்
நள்மூல மென்பதுமே தீர்ந்துநல்ல
நாடிகளுந் தான்வலுத்துத் தாதுவுண்டாம்
வெள்வங்கபற்பமடா பத்தியந்தான் வேண்டாம்
விதமான உளுந்துமொச்சை பூசினிக்காய்நீக்கே.

209, 212-வது உரை

வாலை ரசம் கழஞ்சி வெள்ளியம் கழஞ்சி 3. கல்வத்திலிட்டு கற்பூர சிலாசித்து கழஞ்சி 3-ம் சேர்த்து சுண்ணும்பு நீரால் அரைத்து காயப் போட்டு ஓட்டில் வைத்துசீலை செய்து 30 வரட்டியில் புடம் போட்டு ஆரிய பின் எடுத்து முன்னே சொல்லிய சுண்ணும்பு நீரால் 2 சாமம் அரைத்துவெய்யிலில் உலர்த்தி சீலை மண் செய்து 50 வரட்டியில் கெஜபுடம் போட பஸ்பமாகும் ஒரு பண விடையை. மாதளம்

பூ இதழ் 2 பலம் நிழலிலுலர்த்தி நற்சீரகம் 2பலம் சேர்த்து சூரணித்து பசுநெய்யில் சாப்பிட உள் மூலம் வெளி மூலம் ரத்த மூலம் தேநோய்-எலும்புருக்கி வெள்ளை மூலம் கீழ் மூலம் மேல்மூலம் கனி மூலம் பித்தமூலம் நல்மூலம் இவைகள் நீங்கி நாடிகளும் வலுவுண்டாகும் தாது விர்த்தி உண்டுபப்பத்தியம் உளுந்து மொச்சை பூசணிக்காய் நீக்கவும்.

கன்ம வரலாறு :—

213, 217-வது கவி

நீங்காத மூலநோய் கன்மத்தாலே
நிலைகெட்ட அபானத்தில் நெருப்போமீறி
வாக்கான அபானத்தில் வாசல்தன்னில்
வந்துமுளை மேகத்தால் சூட்டால்காணும்
தாக்கோலா லடைத்தாப்போல் வாயுநின்று
தண்மையுள்ள மலமதனை வாட்டித்தீய்த்துப்
பேய்க்கோலம் பண்ணுமடா மூலரோகம்
பேரான பழவினைக ளின்னங்கேளே. 213

பழவினையால் விஷப்பூச்சி கடித்ததோஷம்
பாதகர்க்கு வொருநாளுந் தீர்வதில்லை
உள்வினையா லூடாடிக் கொள்ளவந்த
உண்மையது அறியாமல் மூர்க்கஞ்செய்வார்
களவினையுந் தீர்வதில்லை கடினமெத்த
கருணையுள்ள பூரணத்தின் கண்டகாட்சி
அளவினைநீ காணுமுன்னே அகலச்சொல்லி
அடையாளம் விரல்குறுகு மின்னங்கேளே. 214

விரல்குறுகுங் கால்திமிறும் விஷம்போலேறும்
மெய்யழுந்தும் தலைசுழலும் வெளுக்குமேனி

பரமான தேகமெல்லாந் தடித்துக்காணும்
பதமெல்லாம் வைத்துமிகப் புண்ணூல்காணுஞ்
சரசமுடன் சொறிகரப்பான் பணம்போல்தோணுஞ்
சாந்தையமே விந்தைகெடுத் தடித்துவீங்கும்
பாருலகி லிந்நோய்க்கு மருந்தியாதே
நல்லோரைப்பழிக்க குஷ்டங் கன்னமாமே. 215

நல்லோர்கள் பெரியோர்கள் நடத்துஞ்செய்கை
நாட்டிலுள்ள துர்ச்சனர்கள் நகைத்ததாலே
பொல்லாத விஷக்குடிநீர் பற்றிவந்து
பொன்னான திரேகமெல்லாங் குஷ்டம்போலே
சொல்லாத கடிவிஷங்கள் குன்மம்பாண்டு
துயர்தீராக் கன்மவினை செய்தபாவம்
எல்லாரும் நகைக்க வுடம்பெடுத்தபாவி
இன்னமுண்டு விபரமதா யுலகிற்கேளே. 216

உலகுதனில் செவிடு மைகுருடர்தாமு
மூக்குமுள்ள சப்பாணி மூக்கிலாதார்
நலகுமது விஷக்கடிநீர் குன்மம்பாண்டு
நாடிவரும் பெருவயிறு யீளை
பிலக்குமதை பெரியோரைக் கற்புள்ளோரைப்
பேதமில்லாக் சிவஞானப் பொருள்ளோரை
தலைகவிழவைரவர்கள் தனைத்தூஷித் தோர்கள்
சண்டாளரிந் நோயாய் தயங்குவாரே. 217

213, 217-வது உரை

கர்ம வசத்தால் மூல நோய் நீங்காது அபானத்தில் உஷ்ணமதிகரித்து மூளை மேகச் சூட்டால் உண்டாகி ஆப்பு அடைத்தது போல் வாய்வு நின்று மலத்தைத் தீய்த்து அதிக சிரமத்தைப்பண்ணும் முன் வினையால் விஷப்பூச்சி கடித்த விஷமானது பாவிகளுக்கு ஒரு

நாளும் தீராது உள்வினைப் பயனால் அடையும் துன்பத்தைப்பற்றி. யாது பிடி வாதம் செய்தாலும் கடுகளவு வாகிலும் வினை தீராது அதற் கடையாளம் விரல் குறுகும் கால்திமிர் கொள்ளும் விஷம் போல் ஏறும் திரேகம் கையும் தலை சுற்றும் திரேகம் வெளுக்கும் தீபேகம் தடிப்புக் கொள்ளும் பாதம் ரணம் போலிருக்கும் சொறிகரப் பான் போல் சொறி சிறங்கு உண்டாகும் வித்துவைக் கெடுத்து திரேகம் வீங்கும் இந்நோய்க்கு மருந்து கொடுக்காதே நல்லவர் பெரியவரைத் தூஷித்ததால் அத்தோஷதினால் விஷநீர் பற்றி நல்ல தேகத்தில் குஷ்டம் போல் வந்து குன்மம் பாண்டு ஏற்பட்டு எல்லாரும் நகைக்கும்படி உண்டானது. செவிடு ஊமை. குருடர் சப்பாணி மூக்கில்லாதவர் விஷ நீர் பற்றி குன்மம் பாண்டு பெருவயறு யிசிவு ஈளை பெரியாரை நிந்தித்ததால் உண்டான வியாதி.

கன்மந்திர :—

218, 220-வது கவி

தயங்காமல் தீருதற்கு வகையைக்கேளு
தன்மை யுள்ளவருஷமது தகையுங்காலம்
நயங்கா மலாடியமா வாசையன்று
நன்மையுள்ள தெளிநீரில் ஸ்நானம்பண்ணி
மயங்காமற் சிவதலத்தைக் கோரிவந்து
முத்தியுட னுயிரம்பேர் வேதியற்கு
சுயம்பாகம் தான்கொடுத்து நவக்கிரகந்தன்னைத்
தோத்தரித்து அட்சதையும் வாங்கிக்கொள்ளே. 218

தாங்கியே பொதிகைக்குத் தென்கிழக்குமூலை
வரிசையுள்ள வானுமா மலைக்குச்சென்றால்
தூங்கியே யாலிலைமேற் பள்ளிகொண்ட
சுவாமி யிடசந்நிதியில் தியானஞ்செய்து

வோங்கியே நூறுபேர் பிராமணர்க்கு
வுத்தமனே சுபம்பாகங் கொடுத்துநீயுந்
தேங்கியே யுதகமென்ற கிரணங்கொண்டு
திறமாக ஒருசெம்பு நெய்யைவாரே. 219

வார்த்துமே மறுசெம்பு தயிலமொண்டு
மைந்தனே வேடுகட்டிக் கொண்டுபோய்நீ
ஆற்றுமேயந்திசந்தி காசிடையாய்க் கொள்ள
அப்பனே திங்களது மூன்றுக்குள்ளே
தோற்றுமே தேகமது பொன்போலேதான்
துயரான கன்மனேய் தூரவோடுங்
காத்துமே யித்தயிலங் கொள்ளாவிட்டால்
கன்மநோய் தீராது பின்னுங்கேளே. 220

218, 220-வது உரை

அக்கர்ம நோய் நிவர்த்திக்கு ஒரு மார்கமுண்டும் ஆடி அம்மாவாசை யன்று சுத்த ஜலத்தில் ஸ்நாணம் செய்து சிவஸ்தலத்தைப் பூசித்து 1000-பேர் வெதியர்களுக்கு போஜனங் கொடுத்து நவக்கிரகங்களுக்கு ஸ்தோத்திரம் செய்து நீட்சை பெற்று பொதிகை மலைக்குத் தென்கிழக்கு மூலையிலுள்ள வானுமாமலை சென்று மகாவிஷ்ணுவைக் கண்டு 100-பிராமணருக்கு போஜனம் கொடுத்து ஒரு செம்பு நெய் வார்த்து மறு செம்புதைலங் கொண்டு வேடுகட்டி காலை மாலை காசிடை சாப்பிட மூன்று மாதத்திற்குள் திரேகம பொன் போலாகும் கர்ம நோய்விலகிப்போகும் இந்த விதம் செய்யா விட்டால் கர்ம வியாதி நீங்காது.

வெண்குட்டந்திரச் சொர்னபற்பம் :—

221, 225-வது கவி

இன்னங்கேள் புலத்தியனே இராஜயோகிக்
கின்பமுள்ள சொர்னபற்ப மிதமாய்ச்சொல்வேன்

முன்னமே முள்ளிக்கிரை சாற்றிலேதான்
மூன்றுநா ளூறவைத்து பொடியாய்ராவி
சொர்னமதைக் கல்வத்திலரை க்கும்போது
சித்திர பாலாடையது சிவந்தசாற்றில்
நன்னயமாய்மை போலே யரைத்துபில்லை
நலமாகரவி யுலர்த்தி நலமாய்க்கேளே. 221

கேளப்பா கடம்பினிலை யரைத்துமைந்தா
கிருபையுடன் பில்லைமேல் கவசங்கட்டி
கேளப்பா வகலில்வைத்து ஓட்டால்மூடிக்
குணமாகச் சீலைமண் ணேழுஞ்செய்து
தாளப்பா நூறெருவிற் புடத்தைப்போடு
தன்மையுடன் ஆறினபின் தவளம்போலே
வேளப்பா வெண்குட்டந் தீருதற்கு
விதமான வநுபானம் விளம்பக்கேளே. 222

விளம்பவே சவுரியிலைச் சாறுதானும்
விதமாகத் தனிசாறும் படிதானெட்டு
தளும்பவே வெயிலிலிட்டு மெழுகுபோலே
தான்வற்றிற் கலந்தயிடை யாடாதோடை
குளம்போடே யிலையறுத்து மெழுகுபோலே
கூட்டி யதிற்புனுகுமோர் பலந்தான்கூட்டி
துளும்பவே சொர்னபற்பங் கழஞ்சிரண்டு
தூக்கியதிற் போட்டரைத்து நெல்லிக்காய்போல்.

காய்போலேயுருட்டியதை யிளம்பதமா யுலர்த்திக்
கனமான எள்ளிலிட எண்ணெயிலேபோட்டு
தாய்போலே யோருண்டை யந்திசந்தி
தண்மையுட னரைவருஷந் தயவாய்க்கொள்ள

வாய்போலே வெளுத்தகுட்டங் தீர்ந்துபோகும்
வண்மையுள்ள பத்தியஞ்சை யோகமாகா
பேய்போலே காமப்பேய் கொண்டபேர்க்குப்
பெருமையுள்ள சொர்ன பற்பங்கொடுத்திடாயே.

கொடுத்ததினுல் மருந்தாரும் எண்ணெதன்னைக்
குறைவாக எட்டுநாட் கொருக்கால்மூழ்க
கொடுத்ததினுல் மருந்துவிடு மட்டுமூழ்கக்
குவலயத்திற் பறங்கியென்ற குட்டங்தீருந்
தடித்துநின்ற வெண்குட்ட மேககுட்டம்
தயவாக தீருமடா தண்மையாலே
அடுத்திருந்த பேர்களைநீ யகலச்சொல்லி
அப்பனே கைபாக மறிந்துசெய்ய. 225

221, 225-வது உரை

முள்ளிக் கீரைச்சாற்றில் சொர்னத்தை 3-நாள் ஊரவைத்து பொடியாய்ராவி அப்பொடியை அம்மா பச்சரசிச் சாற்றில் மைபோலரைத்து வெய்யிலுலர்த்தி அதை நிலக்கடம்பு இலையை அரைத்து கவசம் செய்து அகலில் வைத்து ஓட்டால் மூடி 7-சீலை மண் செய்து 100-வரட்டியால் கெஜபுடமிட்டு ஆரினபின் எடுத்து 2-அவுரி இலைச் சாற்று 8-படி வெய்யலில் வைத்து மெழுகு பாகமாகும்போதுஎடுத்து அத்துடன் ஆடா தொடை சார்சமனிடை விட்டு காயவைத்து. குளம்படி இலை சாற்றுல் மைபோல் அரை ஒருபலம் புனுகு கூட்டி அதில் சொர்ணப் பஸ்பம் 2-கழஞ்சி எடை போட்டுஅறைத்து நெல்லிக்காய் யளவு உண்டை செய்து இளம்பதமாக உலர்ததி எள் ளெண்ணெயிற் போட்டு காலை மாலை 6-தினங்கள் சாப்பிட வாயில் வெளுத்திருக்கும் வெங் குஷ்டம் தீரும் பத்தியம் போகமாகாது காம இச்சை உள்ளவர்களுக்குச் சொர்ணப்பஸ்பம் கொடுக்கக்கூடாது ஷை மருந்தை 8-நாள் சாப்பிட்ட பிறகு 1-நாள் ஆறப்போட்டு ஷை எண்ணெயில் ஸ்நானம் செய்யவும் இப்படி 8-நாளைக்கு ஒரு முறை-

ஸ்நானம் செய்யவும் இதனல் பறஸ் குஷ்டம் தடி குஷ்டம் மேகங் களும் தீரும் அருகிலிருப்பவர்களை விலக்கி கைபாக மறிந்து செய்ய வும்.

வெள்ளிபற்பம் :—

226, 228-வது கவி

செய்யவே யின்னமொரு குளிகைகேளு
 செயமாக வூதசட்டி வெள்ளிதன்னை
துய்யமாய் குகையிலிட்டு உருகும்போது
 துரையான வெள்ளியிடை மகிழம்பூஞ்சார்
அய்யனே யிரண்டுயிடை விட்டிருக்கி
 வப்பனே வெள்ளியது மடிந்துபோகும்
பொய்யல்ல வப்பொடியை முன்சாற்றலே
 புகழாகவரைத்து பில்லை யுலர்த்திக்கேளே. 226

உலர்த்தியதோர் வில்லைக்குக் கவசங்கேளு
 வுண்மையுடன் முட்கா வேளைவேரைத்தானும்
பிலக்கவதை முன்னீ ராலரைத்துக்கட்டி
 பிரியமுடன் குகையிலிட்டுச் சில்லுமூட்டி
உலர்த்தி நன்றாய்மண் சீலைவலுவாய்ச்செய்து
 உள்ளபடி நூறெருவிற் புடத்தைப்போடு
பெலத்ததோ ரசிதமென்ற வெள்ளிபற்பம்
 பெருமையுள்ள வெண்ணையிலே கொடுத்துப்பாரே.

கொடுத்துமிகப் பார்க்கையிலே தீரும்நோய்கேள்
 குணமில்லாக் காசமொடு இரத்தகாசம்
அடுத்து நின்றமேக சயமந்தகாச
 மப்பனே திப்பிலியில் கலுஞ்சொன்னேந்
தொடுத்துமிகப் புளிபுகையை தவிர்க்கவேணுஞ்
 சுயமாக வேளைக்குப் பணவிடையிற்பாதி

கடுத்துநின்ற பவுத்திரமு மூலைச்சூலை
காணும லோடுமடா கண்டுபாரே. 228

226, 228-வது உரை

வெள்ளியை மூசையில் அல்லது தேங்காயில்வைத்து உருக்கும் போது அதன் எடைக்கு 2-எடை மகழம்பூச்சார் விடவெள்ளிமடிந்து போகும் மருபடியும் அதைமுன் சாற்றிலரைத்து பில்லைசெய்து உலர்த்திமுக்கா வேளைவேர் முன்சாற்றால் அரைத்து கவசம் செய்து சீலைமண் செய்து 100-வரட்டையில் புடமிட்டு எடுத்துக்கொண்டு காசம் ரத்தகாசம் மேகம் சயம் மந்தபாகாசம் இவைகளுக்கு வெண்ணையில் பண எடை கொடுக்க நீரும் பவுந்திரம் மூலைச்சூடு இவைகளுக்கு திப்பிலியில கொடுக்கத்தீரும்.

நாகபற்பம் :—

229, 233-வது கவி

கண்டுபா ரின்னமொரு பற்பங்கேளு
கருவான நாகமதைப் பயறுபோலே
கொண்டுபோய் பொடிசெய்து கழஞ்சிரண்டு
குணமான அயக்கரண்டி தன்னிலிட்டு
நிண்டுபார் முதற்றரமாஞ் சோமனுகி
நிறுத்தெடுத் துப்பணவிடைதான் கூடப்போடு
மொண்டுபார் சுத்தஜலங்கழஞ்சு விட்டு
மூர்க்கமுட னிளஞ்சிலை வேடுகட்டே. 229

கட்டியே காலமேது வக்கிமைந்தா
கதிரவனி லிருபத்தாறு நாழிமட்டும்
இட்டுமே யிரகாலே கரண்டித்தூரி
இதமாகவேலியென்ற பருத்தி சார்தடவி
தொட்டுமே யுலையில்வைத் தூதும்போது
சுகமாகத் தானுருகி மஞ்சள்போலே

பட்டியே புகையெழும்பும் போதுமட்டும்
பாங்காக தாதுநற் பற்பமாமே. 230

பற்பமடா வைத்தபிடை குறைத்திடாதே
பாலகனே செய்பாகந் தவறிடாதே
அற்பமென்று பற்பமதை எண்ணிடாதே
அப்பன் வெண்ணெயிலே பணவிடைதான்கொள்ள
சொற்பமென்று வுப்பாகா புளியுமாகா
துவரையிட பருப்பிட்டுக் கிச்சடிபோற்பொங்கி
பற்பமென்ற பசுநெய்யுங் கூட்டியேதான்
நலமாக யெழுநாள் கொள்ளுக்கேளே. 231

கொள்ளவே யெட்டுநாள் உப்புக்கூட்டு
குணமாக பத்தாறுள் ஸ்நானமட்டுந்
துள்ளவே புளிகூட்டு தீருநோய்கேள்
துலையாத வெள்ளையது துலைந்துபோகுங்
கள்ளமா மூலமது தீர்ந்துநல்ல
கனமான தாதுவிர்த்தி யுண்டாகும்பாரு
எள்ளளவுங் கைபாகந் தப்போவில்லை
ஏகாந்த பூரணத்தி னியல்புகேளே. 232

பூரணமாம் நாநூறுங் கைபாகந்தான்
புலத்தியனே யுனக்காக நன்றாய்ச் சொன்னேன்
காரணமாய் வடமொழியைத் தமிழால்செய்த
கருவிநூல் சரக்குசுத்தி யஷ்டலோகம்
மாரணமுஞ் சொன்னடா நூற்றியைந்து
வகையான பத்திலே மகிழ்ந்துபார்த்தால்
காரணமும் பூரணமுங் கண்டபோதே
கருவான பற்பமெல்லாங் கைக்குள்ளாமே. 233

229, 233-வது உரை

சிறு கண் நாகத்தைப் பொடி செய்து 2-கழஞ்சி எடை அயக்காண்டியில் எரிக்கும்போது உருகிமேலே மஞ்சள் போல் நிற்கும் அதில் பணவிடை எடுத்து 1-கழஞ்சி சுத்த ஜலத்தில் கலக்கி மெல்லிய துணியில் வேடுகட்டி 26-நாழிகை வெய்யலில் வைக்க ஜலம் வற்றிப்பூத்திருக்கும் அதைச்சுரண்டி வேலிப்பருத்திச் சாற்றிலரைத்து முசையில் வைத்து ஊதும் போது புகையடைங்கிஉருகி மஞ்சள் போல் பற்பமாகும் அதைப்பண எடைவெண்ணெயில் சாப்பிடதீராத வெள்ளை, மூலம், தாது வீர்த்தியுண்டாகும் 7-நாள் சாப்பிடவும். உப்பு நீக்கவும் 8-நாள் உப்புக்கூட்டிக் கொள்ளவும் 10-நாள் ஸ்நானம் செய்யவும்.

இரசபற்பம் :—

234, 242-வது கவி

பற்பமென்ற ரசபற்ப மொன்றுகேளு
பாலகனே ரசமதனைப் புளிக்காய்ப்பாலில்
அற்பமென்று நினையாமல் கையிற்றேய்க்க
யகங்கையி லொட்டுமா ஈயம்போலே
துப்புரவாய்த் தேய்த்துமெள்ளக் கழுவச்சுத்தி
செய்தரசங் கழஞ்சு பன்னிரண்டு
நிற்புரமாய்க் குழிக்கல்லி விட்டுக்கொண்டு
நினைவாகத் தானரைக்கத் தயிலங்கேளே. 234

தயிலமென்றால் கெந்தகத்தின் தயிலமப்பா
தண்மையுடன் இறக்கும்வகை தயவாய்க்கேளு
ஓயிலாகக் கெந்தகத்தை தூளாயாட்டி
யுண்மையுள்ள கலயத்தில் பாதிபோட்டு
மயலாகக் கலசம்வாய்க் கேற்றப்போலே
மைந்தனே மண்ணாலே புனலுண்டாக்கி
அயிலமென்ற கலயத்தில் மூடிச்சீலை
யஞ்சாறுமண் வலுக்கச்செய்துக் கொண்டே. 235

கொண்டபின்பு வடிவுயர்ந்த குப்பிவாங்கி
குணமாகச் சலநிரப்படைத் துப்போட்டு
அண்டையிலே ஒருவனைத்தான் பிடிக்கச்சொல்லி
அடியப்பா இரும்பாணி நூரிலேதான்
மண்டையிலே யோரடியிற் றமருண்டாகும்
பாலகனே புனல்மூக்குத் தமருள்விட்டு
ஒண்டையிலே மண்பூசி புகையோடாம
லுத்தமனே சிறுவடுப்பில் தீபம்போலே. 236

தீபம்போல் மேல்குப்பிகனல் படாமல்
தீயெரித்த நாழிகைதானிர ண்டுக்குள்ளே
தூபமென்ற கெந்தகத்தின் புகைதான்குப்பி
சுற்றிலுமே திராவகமாய் நிற்கும்பாரு
தாமென்ற மறுகுப்பிக் கேற்றிக்கொண்டு
தயவாக நாற்கழஞ்சு தயிலம்விட்டு
சோபமென்று சமாளவரைத் துருட்டிச்
சுருக்காகமேற் கவசஞ்சொல் லக்கேளே. 237

சொல்லக்கேள் பூவரசம்பட்டை பலமிரண்டு
சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்திபலமிரண்டு
அல்லக்கேள் சிறுதும்பைச் சாறுவிட்டாட்டி
யப்பனே ரசமெழுகி லணிந்துருட்டி
நல்லாய்க்கேள் வாய்பொருந்துந் தாளிரண்டு
நன்னயமாயடித் தாளிதன்னிலுப்பும்
வல்லக்கேள் செங்கலுமே யொடித்துப்பாதி
வகையாகத் தான்செய்து மருந்துவையே. 238

வைத்துப்பார் மூன்றுநாள் மறையமூடி
மார்க்கமுடன் மெற்றுளி தூரிலேலான்
கைத்தப்பா கையான்சா றேழுவகைபூசி
காயவைத்து மேல்மூடி யேழுமண்செய்து

சுத்தப்பா வெடித்தயிட மண்ணும்பூசிச்
சுதானந்தி பதம்போற்றி வாலுகைமீதேற்றி
நைந்தப்பா காடாக்கினி மூன்றுசாமம்
நலபாகத் தானெரித்துப் போடாற்றே. 239

ஆற்றியே கிழறக்கி யோரப்பட்டாய்
அப்பனே தான்சாய்த்து கவிழ்த்துமெள்ள
தூற்றியே மேற்கட்டிக் குள்ளேமைந்தா
துயர்தூராக் குடிகொண்டு நீலம்
பார்த்திபனே துடைத்தெடுத் ததனைநீயும்
பாங்கான கன்மநோய் தீரவேண்டி
சாற்றியே பணவிடைத்தான் பனைவெல்லத்தில்
தயவாக யிருவேளை யேழுநாளீயே. 240

ஏழுநாள் தான்கொடுக்கத் தீரும்நோய்கேள்
என்மகனே குறைநோயுங் குன்மநோயும்
ஆழுமே குஷ்டமுஞ் சூலையரையாப்பு
அபானத்தில் சூலையுடன் யோனிப்புற்று
கேழுமே முலைமூளை கண்டமாலை
கிரந்தியுடன் றடிப்புவெள்ளைக் கருங்கரப்பான்
பாழுமே வண்டுகடி சிலவிடமுந்தீரும்
பத்தியந்தா னுப்பாகா பசும்பாலாமே. 241

பாலாகும் வெந்நீரும் பதினாலானாள்
பாலகனே வோமநீர் ஸ்நானம்பண்ணி
நாலாகும் வுப்பதனை வறுத்துக்கூட்டு
நன்மையுடன் மறுநாளும் வெந்நீர்முழுகு
காலாக விளக்கெண்ணை பின்புமுழ்கி
கனத்தபுளி கட்டுமே கூட்டச்சொல்லு
ஆலான ஸ்ரீபோக மண்டலபாகாது
அப்பனே சகலநோய் அகலும்பாரே 242

234, 242-வது உரை

புளியங்காயில் சுத்தம் செய்த ரசத்தைக் கந்தகக்குழி தைலத்தில் 4-கழஞ்சி விட்டு அரைத்து உண்டை செய்து பூவரசன் பட்டை 2-பலம் சுத்தம் செய்த நெல்லிக்காய் கந்தகம் பலம் 2-சிறு தும்பை சாற்றிலரைத்து மேலே பூசி 2-மண் பாத்திரத்தின் உதவியால் ஒன்றைக் கீலாகவும் ஒன்றை மேலாகவும் வைத்து உப்பும் கெந்தகமும் பாதி போட்டு மருந்தைவைத்து மூடி 3-நாளைக்குப் பின் எடுத்து பொற்றலை கையாந்தகரைச் சாற்றில் 7-முறை பூசிக் காயவைத்து மூடி 7-சீலை மண் செய்து காயவைத்து சதா நந்தியைப் பூசித்து வலுகை அல்லது அடுப்பில் 3-சாமம் எரித்து எடுத்து ஆர வைத்துப் பிரித்து மருந்தை எடுத்து காலை மாலை பணவிடை பனை வெல்லத்தில் 7-நாள் கொடுக்க குறை நோய். குன்ம நோய் குஷ்டம் சூலை அரைபாப்பு அபானச்சூலை யோனிப்புத்து மூளை கண்ட மாலை கிரந்தி, தடிப்பு வெள்ளை கரப்பான் வண்டுக்கடி விஷத்தீரும் பத்தியம் பால் வெண் நீர் ஆகும் 14-ம் நாள் ஓமந்தேய்த்து ஸ்நானம் வறுத்த உப்பு சேர்க்கவும் மறு நாள் வெந்நீர் மூழ்கிப்பின் புளி கூட்டவும் போகம் நீக்கவும் சகல நோயும் தீரும்.

குப்பிசெந்தூரம் :—

243, 249-வது கவி

பாரப்பா யின்னமொரு செந்தூரங்கேள்
பாடுகிறேன் புலத்தியனே பதிவாய்க்கேளு
நேரப்பா வாலைரசம் பலந்தான்நாலு
நேர்த்தின்யன கெந்தியோர் பலமேகூட
காரப்பா கரியோட்டில் தொங்கித்தேதான்
கனமாகப் பொடிசெய்து குப்பிக்கேற்றி
மேறப்பா வாலுகையி லேற்றிக்கொண்டு
மேன்மையுட னெருசாமந் தீபம்போலே. 243

தீபம்போல் மறுசாமங் கமலம்போலே
திறமாகத் தானெறித்து மூன்றும்சாமம்
தாபம்போற் காடாக்னி போலேமைந்தா
தானெரிக்கில் கெந்தகத்தின் வாசம்வீசுங்
கோபம்போல் சிலாகையிட்டு மெள்ளக்கிண்டு
குமரனும் குமரியுமே கூடும்நேர்மை
சோபம்போ லிக்கணமதா யுருகிக்காணுந்
துரிதமுட னிளகுபத மில்லாட்டாலே. 244

இல்லாட்டால் மேலே வேரோடுமூடி
யென்மகனே யொருநாழி கடுந்தீப்போட்டு
சல்லாப மாய்நீக்கிச் சலாகையோடு
சதிராக யுருகியது குழம்பாய்க்காணும்
பொல்லாத தாளகத்தைப் பொடித்துத்தூள்தான்
புலத்தியனே யரைப்பலந்தான் குப்பியில்போட்டு
நன்றாய்த்தா ஹற்புறமுங் கீழும்மேலும்
நன்றாகச் சலாகையினற் கிண்டிப்போட்டே. 245

கிண்டியே முச்சாமங் கடந்துமேலே
கிருபையுட ஹற்சாமந் தன்னில்மைந்தா
அண்டினல் வடவையென்ற தணலைப்போட்டு
அப்பனே மருந்தெல்லா மேலேயேறும்
துண்டியே மிதப்பனே மறந்திடாதே
துரிதமுட ஹற்சாபம் எரித்துநீயும்
தண்டியே சலாகையிட்டுப் பார்க்கும்போது
தயவாக வாசலாகமுனை சிவந்துபோகும். 246

சிவந்தாலும் வெளுத்தாலும் பதமிதப்பா
சீக்கிரத்தில் குராட்டாலே யெடுத்துக்குப்பி
மவமாக நீர்தெளித்து ஆற்றிப்போடு
மைந்தனே சலாகைமுனை கறுத்துதோன்றில்

குவிந்த குப்பிதனை யடுப்பேற்றே தான்
குணமாக எரிப்பாற்றி வைத்துப்போடு
கவிந்திருக்க அடுப்பினது வேகத்தாலே
தான்வசிக்கு மிருநாழி சென்றப்பாலே. 247

அப்பாலே குறட்டதினால் குப்பிவாங்கி
அசராமல் தெளித்திடுவாய் சுத்தகங்கை
தப்பாத குப்பிதனை யுடைத்துப்பாரு
தயவான செந்தூரங் கறுத்துக்காணும்
இப்பாலே யுரைக்கையிலே முருக்கம்பூப்போல்
இருக்குமடா பணவிடைத்தான் தேனிலீய
செப்பாத பத்துநாள் தன்னிலேதான்
தீருகிற வியாதிகளைத் திறமாய்க்கேளே. 248

கேளப்பா மூலநோய் மேகரோகங்
கெடியான பவுத்திரமு மனேகநோய்கள்
தாளப்பா புளிகையுந் தள்ளத்தீருந்
தயவான வாலைரசஞ் செந்தூரத்தை
ஆளப்பா கற்பாதி செய்யானப்பா
அரகரா வுலகத்தோர் ரசமென்பார்கள்
வாளப்பா யின்னமொரு செந்தூரந்தான்
வகையாகச் சொல்லுகிறேன் வரிசையாக. 249

243, 249-வது உரை

வாலை ரசம் 4-பலம் கெந்தகம் பலம், கரியோட்டில் மதித்து பொடி செய்து குப்பியிலடைத்து அடுப்பேற்றி சாமம் எரித்து 2-சாமம் கமலம் போலவும் 3-ம் சமம் காடாக்னி போலவும் எரித்துப்பார்க்க உறுகி இளகுபாகமாகக்காணும் அப்படி யில்லாவிட்டால் வேறே ஓடு மூடி 1-காமம் கடுந்தீயிட உறுகிக்குழம்பாய் காணும் தாளகம் அரை பலம் பொடித்து குப்பியில் போட்டு சிலுவையில் 3-சாமம் கிண்டி 1-சாமம் வடவக்கினி போல் எரித்து சிலுவை யிட்டுப்பார்க்

கும் போது முனை சிவந்திருக்கும் அதை எடுத்துத் தேனில் பண விடை 10-நாள் கொடுக்க முலரோய் மேகரோகம் பவுந்திரம் தீரும் பத்தியம் புளியாகாது.

250, 255-வது கவி

வரிசையாகச் சொல்லுகிறேன் னப்பிரேகந்தன்னை
மைந்தனே பொடிப்பொடியாய்ப் பொடித்துக் கொண்டு
துரிதமா யந்திடைக்குப் பனைவெல்லந்தான்
சுகமாக வெடியுப்பு மொன்றுய்க்கூட்டி
பரிசமுடன் சுத்தகங்கை தன்னுலாட்டிப்
பாலகனே பில்லைதட்டி ஓட்டிவிட்டு
பிரியமுடன் மேல்மூடிச் சீலைசெய்து
பெலமாக்கிக் கெசபுடத்திற் போட்டுபாரே. 250

போட்டுமே யாறினபின் னெடுத்துப்பாரு
புண்ணியனே தனுக்கற்றுக் கற்பம்போலாம்
தாட்டிகமாய்க் கல்வத்தி விட்டுக்கொண்டு
தானரைப்பா யொருசாம மெருக்கம்பாலால்
மாட்டியமாய்க் கல்லோடே ரவியிற்போட்டு
மற்றுநா ளெருக்கம்பால் சாமமாட்டு
நாட்டுமே கல்லோடே வெயிலிற்போட்டு
நலமாக வவ்விதம் நாற்பதுநாள்போடே. 251

நாள்கேளு நாற்பதிலே வில்லைதட்டு
நன்மையுடன் காயவைத்து ஓட்டிவிட்டு
வேள்போன்ற மேலோடு பொருந்திமூடி
மேன்மையுடன் எழுசீலை மண்ணுஞ்செய்து
தாளான தாளிறைஞ்சி செகபுடத்திற்போடு
தயவாக வாறினபின் னெடுத்துப்பாரு

வாள்போன்ற வப்பிரகஞ் சிவந்துகாணும்
மைந்தனே கல்வத்தி லரைத்திடாயே. 252

அரைத்திடுவாய் பொற்றலையின் கையான்சாற்றி
லப்பனே சாமமரைத்து வில்லை
திறத்துடனே தானுலர்த்தி கெசபுடத்திற்போடு
தீர்க்கமுட னிவ்விதமா யரைத்தரைத்து
உரத்துடனே யஞ்சுபத்தும் ஒன்றும்போட
உத்தமனே யருணனைப்போல் சிவந்துகாணும்
நிறைத்துமதை பொடிசெய்து குப்பிதன்னில்
நீபதனம் பண்ணிவிடு வனுபானங்கேள். 253

கேளடா ஆவாரை பஞ்சாங்கந்தான்
கிருபையுடன் பலமெட்டு அசுவகெந்தி
காளடா அவ்வீதஞ் சிரகந்தான்
நன்மையுடன் பலரண்டுஞ் சூரணித்து
தாளடா வெருகடியிற் குன்றிவீதந்
தருவான பசும்வெண்ணை தன்னிலுண்ண
வேளடா யிருவேளை மண்டலந்தான்
விதமாகக் கொண்டுவிட வியாதிகளே. 254

கேளேநீ மேகமென்று லிருபத்தொன்று
கெடியாகத் தீருமடா பத்தியமேயில்லை
கோளே நீரிவுமது மேகந்தீரும்
கோடான கற்பமிதுக் கொவ்வாதப்பா
வாளேநீ செந்தூரஞ் சகலருக்கும்
வாதுயார் படுகுவா ரிந்தப்பாடு
வேளோனே வென்றசித்தர் செப்புமார்க்கம்
வெளியாகச் சொன்னதிந்தப் பூரணந்தான்பாரே.

250, 255-வது உரை

அபிரேக்கை பொடியாக்கிக் கொண்டு அதனிடைக்குப்பனை வெல்லம் வெடியுப்புக் கூட்டி ஜாத்தா லரைத்து பில்லை தட்டி ஓட்டில் வைத்து சீலைமண் செய்து கெஜபுடமிட்டு ஆறியபின் எடுத்து எருக்கன் பாலால் அரைத்து வெய்யலில் காயவைத்து ஓட்டிவைத்து 7-தரம் சீலைமண் செய்து கெஜபுட மிட்டு எடுத்துக்கல் வத்திலிட்டு பொற்றலைக் கையார்ந்த நகரச்சாற்றில் சாமம் அரைத்துப் பில்லை செய்துக் காயவைத்துக் கெஜபுடமிட்டு இவ்வாறு 51 முறை செய்ய அபிரேக்குச் சிவந்திருக்கும் அதை யெடுத்துப் பொடி செய்துக் குப்பியிலிட்டு, ஆவரை சமூலம் 8-பலம் அமுக்களன் பலம்-8 சீரகம் பலம்-2 சூரணம் செய்து வெண்ணெயில் குன்றுமணிப் பிரமாணம் ஒரு மண்டலம் காலை மாலை இரு வேளை சாப்பிட 21-மேகம் நீராழிவு. மதுமேகம் முதலியவை தீரும் பத்தியமில்லை.

காந்த செந்துரம்:—

256, 260-வது கவி

பாரப்பா யின்னமொரு செந்தூரந்தான்
பாங்கான கெந்திசமன் காந்தங்கூட
நேரேநீ கரிசாலைச் சாற்றாலாட்டி
நினைவாகப் பில்லைதட்டிக் காயப்போட்டு
சாரப்பா ஓட்டிலிட்டு ஓடுமூடித்
தயவாக சீலைமண்ணே மூஞ்செய்து
தாரப்பா செகபுடத்திற் போட்டுவாங்கித்
தயவாக ஐந்திடைக்குக் கெந்திகூட்டடே. 256

கூட்டியே முன்சாற்று லரைத்துமுன்போற்
குணமாக செகபுடத்திற் போட்டுவாங்கி
நாட்டியே யிவ்விடைக்கு கெந்திகூட்டி
நலமான பழச்சாற்று லரைத்துமுன்போல்

மாட்டியே கெகபுடத்திற் போட்டுப்பின்பு
மைந்தனே யிவ்விடைக்குக் கெந்திகூட்டு
தாட்டிகமா யிவ்விடைக்குச் சித்திரமூலந்
தயவாகத்தான் கூட்டிமுலைப் பாலாட்டே. 257

ஆட்டியே பில்லைதட்டி யோட்டிவிட்டு
அப்பனே முன்போல புடத்திற்போடு
நாட்டியே கெந்தியொடு சிந்திரமூல
நன்மையுட னவ்விடைக்கு ஒன்றாய்க்கூட்டி
ஆட்டுவாய்க் கோழிமுட்டை வெண்கருவினாலே
அப்பனே பில்லைசெய்து புடத்திற்போட்டு
காட்டிடவே பின்னெடுத்து கல்வத்திட்டுக்
கனமான எருக்கம்பால் தன்னாலாட்டே. 258

எருக்கம்பால் தன்னாலே நாலுசாம
மென்மகனே தானரைத்துப் பில்லைதட்டிச்
சுருக்கமுடன் தானுலர்த்தி யோட்டிவிட்டுச்
சுகமாக மேல்மூடி சிலைசெய்து
இருக்கமுடன் மண்செய்து கெஜபுடத்திற்போட்டு
எடுத்துப்பார் செங்கருப்பா யிருக்கும்பாரு
பொறுக்கமுடன் பொடிசெய்து பதனம்பண்ணி
புண்ணியனே பணவிடைதான் தேனிலுண்ணே.

உண்ணப்பா அந்திசந்தி மண்டலந்தா
னுத்தமனே பத்தியமோ அதற்குவேண்டாம்
கண்ணப்பா மோகமது தவிர்த்தார்போதுங்
கனமான விஷப்பாண்டு கவுச்சிக்கட்டி
தண்ணப்பா சோகையுடன் பித்தபாண்டு
லருதாக நீரம்ப லண்டவாய்வு
நிண்ணப்பா மேலேரும் ஆனந்தவாயு
நிலையான வாயுவெல்லாம் நீங்கிப்போமே. 260

256, 260-வது உரை

கெந்தகம். காந்தம் இரண்டும் ஓரிடையாகக் கொண்டு கரிசிலை சாற்றிலரைத்துப் பில்லை தட்டி காயவைத்து மேலே ஓடுமூடி எழுதரம் சீலைமண் செய்து காயவைத்துக் கெஜபுடமிட்டு எடுத்து அதனிடைக்கு 5 எடை கெந்தகம் சேர்த்து முன் சாற்றில் அரைத்து முன்போலவே சீலைமண் செய்து கெஜபுடமிட்டு எடுத்து அதனிடைக் குக் கெந்தகம் சேர்த்து எலுமிச்சப்பழச் சாற்றாலரைத்து முன் போல புடமிட்டு எடுத்து அவ்விடைக்குச் சித்திரமூலம் சேர்த்து மூலைப்பாலால் அரைத்துப் புடமிட்டு எடுத்து அவ்விடைக்கு ஷை சித்திர மூலம் சேர்த்துக் கோழி முட்டை வெள்ளைக் கருவால் அரைத்துப் புடமிட்டு எடுத்து எருக்கன் பாலால் 4-ஜாமம் அரைத்து முன்போல் புடமிட்டு எடுத்துப் பார்க்க செங்கரும்பாக விருக்கும் அதை யெடுத்துத் காலை மாலை 1-மண்டலம் தேனில் சாப்பிட விஷப்பாண்டு குன்மக்கட்டி சோகை பித்தப் பாண்டு நீராம்பல் அண்டவாய்வு எறுவாய்வு முதலிய வாய்வுகளெல்லாந் தீரும்.

261, 264-வது கவி

நீங்கிப்போ மின்னமொரு செந்தூரங்கேள்
நிலையான வரப்பொடியைக் கல்வத்திட்டு
எங்கிப்போம் காடிதெளித் தொதியன்பட்டை
இடித்துபிழிந் துச்சாற்றை யூற்றிமைந்தா
பாங்குடனே மூன்றுநாள் ரவியில்வைத்தே
பாலகனே வைத்தபின்பு நாலாநாளிற்
சாங்கமாய் முன்சாற்றி லரைத்துபில்லை
தயவாகத் தான்செய்து காயப்போடே. 261

போடப்பா ஓட்டிலிட்டு ஓடுமூடிப்
புகழாக சிலைமண் ணேழுஞ்செய்து
நாடப்பா கெஜபுடத்திற் போட்டெடுத்து
நலமாக முன்சாற்றிலறைத்து முன்போல்

தேடப்பா கெஜபுடம் எட்டுப்போட்டு
திறமாகக் காடியது சேர்ந்தசாற்றிற்
கூட்டப்பா தனிச்சாற்றில் மூன்றும்போடு
குணமாக அயமதுவுஞ் செந்தூரமாமே. 262

ஆமப்பா வனுபான மறிந்தேயுண்ண
அரும்பிணிகள் வாதபித்த மையத்தாலே
நேமப்பா அனேக ரோகமெல்லாம்
நீங்கித்திரி நாடிகளு முறக்குமேறி
காமப்பால் பெருகிருக்கும் விந்துகட்டும்
கண்கள் செவ்வலரியறி வீரஞ்செய்யும்
தாமப்பா ஆலரசு பிச்சுவித்து
சமனிடைக்கு அதிமதுரம் பசுநெய்யாமே. 263

நெய்யா குந்தேனுகு மனுபானந்தான்
நீங்காத வாய்வுகளு நீங்கிப்போகும்
பொய்யாகுங் கைபாகந் தவறிட்டாலும்
புலத்தியனே மருந்தொன்றும் பலித்திடாது
வையாதே பூரணத்திற் கைபாகந்தான்
வண்மையுடன் சொன்னதினால் வைத்தியபூரணம்
ஐயமில்லா நானூறும் வெளியாய்த்தோணும்
ஆதிகுருகொடுத்த வடமொழி தன்னாலே. 264

261, 264-வது உரை

அயத்தை அரத்தால் ராவிப் பொடி செய்து கல்வத்திலிட்டு காடி தெளித்து உதியன் பட்டை சார்விட்டு 3 நாள் வெய்யலு லர்த்தி 4-ம் நாள் முன் சாற்றில் அரைத்துப் பில்லை செய்து காயவைத்து ஓட்டில் வைத்து மேல் ஓடுமூடி சீலைமண் செய்து 7-தரம் கெஜபுடமிட்டு எடுத்து முன் சாற்றிலரைத்து கெஜபுட மிட்டு எடுத்துக் காடிசேர்ந்த சாற்றிலரைத்து 3-புடமிட்டு எடுத்து, அனுபானமறிந்து சாப்பிட வாத, பித்த, சிலேத்துமத்தல் எற்படும்

வியாதிகளெல்லாம் நீங்கும் நரம்புகளுக்கு வலுவைத் தரும் விந்து கட்டும் வீரஞ்சொறியும் ஆலம்விந்து அரசன் விந்து அதிமதுரம் நெய் சமனிடை கூட்டி சாப்பிட எல்லா வாய்வும் தீரும்.

நாகசெந்தூரம் :—

265, 268-வது கவி

தன்னாலே யின்னமொரு செந்தூரங்கேள்
தருவான நாகமதை யுருக்கிமைந்தா
முன்னாலே மூவேழு தரந்தானன்றாய்
மூர்க்கமுட னிலுப்பை நெய்யிற்காய்ச்சிச்சுத்தி
பின்னாலே புதுச்சட்டி தன்னிலிட்டுப்
பிசகாம லடுப்பிட்டு வுருக்கிக்கொண்டு
தன்னாலே சிதசெங்கழு நீர்ப்பூண்டு
தான்போட்டு அயக்கரண்டி தன்னிற்கிண்டே. 265

கிண்டுவா யடிக்கடிதான் பூண்டுபோட்டுக்
கிருபையுட னனல்போட்டு நாலுஜாமந்
தண்டுமிண்டு பண்ணாதே கிண்டிவாங்கு
தருவான நாகமது மாண்டுபோகும்
கண்டுமே செங்கழுநீர் சாரரைத்துக்
கனமான பில்லைசெய்து காயப்போட்டு
பண்டுமே யோட்டிலிட்டு யோடுமூடிப்
பாலகனே சீலைமண் வலுவாய்ச்செய்யே 266

செய்துமே கெஜபுடத்திற் போட்டுவாங்கித்
திரும்பவதை பொற்றலையின் சாற்றாலாட்டி
எய்துமே மூன்றுவிசை முன்போர்போட
என்மானே நாகமது செந்தூரமாகும்
கொய்துமே பணவிடைதான் பன்றிவெண்ணெய்தனிற்
குழைத்திரண்டு வேளையரை மண்டலமேகொள்ள

வைதுமே மூலமெல்லாம் தீருமப்பா
வகையான மேகநோய் மாறிப்போமே. 267

மாறிப்போம் பத்தியந்தான் கரப்பான்பண்டம்
மைந்தனே யாகாது மற்றதெல்லாம்
தேறிப்போம் புலத்தியனே செந்தூரந்தான்
சிவக்காது மஞ்சள்வர்னஞ் சிவப்புமாகும்
கோறிப்போஞ் செந்தூரம் கொடுக்கும்போது
குணமில்லா மூலநோய் மூலவாய்வும்
மாறிப்போம் நாகசெந் தூரமப்பா
வகையாகச் செய்துநீ வயித்யம்பாரே. 268

சிறுகண் நாகம் 21-முறை இலுபை நெய்யில் சுத்திசெய்துப் புது சட்டில் போட்டு உருக்கிக்கொண்டு சீதாதேவி சங்கம்பூர் பூண்டுபோட்டு அயக்கரண்டியினுல் அடிக்கடி முன் சொன்ன பூண்டைப் போட்டு 4-சாமம் கிண்டிவர நாகம் மாண்டுபோகும் அதை எடுத்துச் சிதாதேவி செங்கழுநீர் பூண்டின் சாற்றுலரைத்துப் பில்லை செய்து சீலமண் செய்து கஜபுடமிட்டு எடுத்து பன்றி நெய்யால் அரைத்து மண்டலம் பணவிடை சாப்பிட மூலம் மேகம் மூலவாய்வு தீரும் பத்தியம் கரப்பான் வஸ்தாகாது.

அறிவு :—

269, 271-வது கவி

வயித்தியம் நீபார்க்கவென்றல் சொல்லக்கேளு
வண்மையுள்ள மானிடர்க்குக் கர்மநோய்தான்
பயித்தியமோ வில்லாவிட்டால் நோயேயில்லை
பாலகனே முன்செய்த பாவத்தால
சயித்தியமோ தொடர்ந்துவரும் குஷ்டரோகம்
தன்னுலே யுன்னையவர் பணிந்துகாப்பார்
அயித்தியமாம் பொருளாசைப் பட்டாயானல்
அணுகுமடா புலத்தியனே உன்னைத்தானே 269

புலத்தியனே பொருளாசை கொண்டுநீயும்
பூதலத்திற் பணங்கேட்டால் நோய்தீராது
சிலத்தியாய வன்மனது கனிந்தீந்தால்
சிந்தையல்ல நீயவனைக் கேட்கவேண்டாம்
நிலத்திலே வயித்தியன்றன் மனம்நொந்தக்கால்
நீடூழிகால மட்டும் நரகிற்சேர்வார்
தலத்திலே பணம்பிடுங்கும் வயித்தியனேயானல்
தன்மையுடன் கன்மநோய்க் குள்ளாவானே. 270

கன்மநோய்க் குள்ளாகிப் பிறக்கனன்றே
கயிலாய பராபரத்திற் சேர்தனன்றே
வன்மமென்னு முலகத்தார் மீதிலேதான்
வயித்தியனே சிவன்மேலே கன்மம்வைத்தால்
கன்மநோய் தீருமடா காலனில்லை
கயிலாயபதிகிடைக்குங் கருணைதங்கும்
நன்மையென்ற பெயரெடுக்க வெகுநாள்செய்தும்
நலமான வயித்தியந்தான் தருமமாமே. 271

269, 271-வது உரை

வைத்தியம் செய்யவேண்டுமானல் சொல்லுகிறேன் கேள் மானிடர்க்குக் காம வியாதியாலே குஷ்டம் முதலிய பெருநோய்கள் உண்டாகும் ஆகையால் உன்னை நாடி நிற்பவர்கள் அதனல் அவர்களை நீ வைத்தியத்திற்குப் பணம் கேட்காதே ஏனென்றால் அவர்களிடம் நீ பணம் வாங்கும்பக்ஷம் அந்தக் கர்ம நோய்கள் உன்னைத் தொடரும் நோயும் தீராது நோய் தீராததற்கு அவர்களே கொடுத்தால் பாதகமில்லை அப்படிக் கொடாதவர்க்கு நரகந்தான் கிடைக்கும் ஆகவே கர்ம நோய்பட்டு நரகத்தில் செல்வது நன்றல்லாம் அதிபராபாவஷ்துவை வணங்கி அதை யடைந்தால் நன்மையுண்டாகும்.

தாம்பிரச் செந்தூரம் :—

272, 273-வது கவி

தர்ப்பா யின்னமொரு செந்தூரங்கேள்
தருவான தாம்பிரத்தைத் தகடுகட்டி

நின்மல மாமனோசிலைதான் கொஞ்சம்போலே
நேர்மையுள்ள * அந்தரமா மூலிச்சாற்றில்
வன்மமுட னுடைத்ததின்மேல் தடவியப்பா
மார்க்கமுடன் பத்தெருவிற் புடத்தைப்போடு
கன்மமடா தானகலும் போலேமைந்தா
கருதாக விருபுறமும் வெந்துபச்சை. 272

பச்சையாய்த் தானிருக்கு மதைத்தான்மைந்தா
பக்குவமாய் முன்போலப் போடச்சாகும்
மிச்சமாய்ச் செத்ததொரு செம்பைநீயும்
மீறுமற் பொடிசெய்து புதுசட்டிதன்னில்
அச்சபறப் புளியிலைச்சார் விட்டுக்காய்ச்சி
யரைபடிதான் குழம்புபோல் வருமந்நேரம்
உச்சிதமாய்ச் சுத்தகங்கை நாழிவிட்டு
உண்மையுடன் றுன்கலக்கித் தெளியவைவே.273

தெளிந்தபின் னிறுத்துவிட்டு மறுநீர்வாரு
திறமாகக் கலக்கியதன் தெளிவைநீக்கி
ஒளிந்துவிடப் பச்சைவர்ன முறல்தானும்
ஒன்பதுநீர் தெளிவிறுக்க வூறல்நீங்கும்
அளிந்துநீ யவசரமாய்த் தெளித்திடாதே
அப்பனே ஊரலற்றுச் சுத்தியாகும்
இளிந்துநீ படுப்பில்வைத்து சூடுதாச்கு
என்மகனே யவற்றைநீ கிண்டிக்கேளே. 274

கிண்டிடுவாய் புளியஞ் சிறுகீரையாலே
கிருபையுட னுற்சாமங் கிண்டிநீயும்
அண்டிடுவாய் கல்வத்தி லிட்டுக்கொண்டு
அப்பனே புளியஞ்சிறு கீரைச்சாற்றால்

---

* அந்தரமாமூலி - ஆகாசத் தாமரை.

கிண்டடனே தானரைத்துப் பில்லைதட்டி
நினைவாகத் தானுலர்த்தி ஓட்டிலிட்டு
பண்டிடவே கெஜபுடத்திற் போட்டுவாங்கிப்
பருவமுடன் றூனரைப்பாய் பொற்றிலைசாற்றில்.

சாற்றிலே யரைத்துஅதை மூணுபுடமுன்போல்
தயவாகப் போடவேகருஞ் சிவப்பாய்காணும்
தோற்றுத தாம்பிரம் வீரடங்காவிட்டால்
துரிதமுடன் திரிபலையின் கஷாயத்தாட்டி
காற்றுலே முன்போல புடத்தைப்போடு
கருவாபண விடைத்தான் கொள்ளச்சொல்லு
பார்த்தாலே குஷ்டமெல்லாந் தீருமப்பா
பண்பான மேகமோடீளைபோகும். 276

ஈளையொடு மந்தார காசம்போகும்
யின்பமுடன் கரிசாலைச்சாறு நாழி
கொள்ளையென்ற பசுவின்பால் படிதானென்று
கூட்டியதிற் சாக்கரையும் பலம்பத்தாகும்
வேளையென்ற பாகுபதம் வருதல்கண்டு
பெலமான மிளகுபலம் பதினறப்பா
வாளநல்லாப் பொடித்திட்டு லேகியம்போற்கிண்டி
மைக்தனே நெய்யுழக்குத் தேன்றுபாதி. 277

பாதிவிட்டுக் கிண்டியதில் லேகியமப்பா
பாங்கான செந்தூரம் பணவிடைகால்கூட்டி
சாதியுமாயிருவேளை மண்டலந் தான்கொள்ளச்
சகலநோய் தீருமடாதாம் பிரத்தின்வேகம்
ஆதியாம் புளுபுகையுந் தவிர்த்துநல்ல
அன்பான பசுநெய்யும் வெள்ளாட்டுக்கண்டம்
ஓதியதோர் சிறுபயறு துவரையாகும்
உத்தமனே வழுதலையு முருங்கைப்பிஞ்சே. 278

272, 278-வது உரை

தாம்பரத் தகடுதட்டி ஆகாயத் தாமரைச் சாற்றில் மனோ சிலையைச் சேர்த்து அரைத்து அந்தத் தகட்டின்மேல் தடவி 10 வரட்டியில் புடமிட்டு எடுக்க வெந்து பச்சை தோன்றும் முன் போல் புடமிடச் சாகும் அதைப் பொடி செய்து புதுச் சட்டியி லிட்டுப் புளியாரைச் சார்விட்டு காச்சிக் குழம்புப்பதத்தில் காச்சி ஜலம் விட்டு இறக்கித் தெளியவைத்து தெளிவுநீரை நீக்கி வேறு ஜலம் ஊற்றிக் கலக்கித் தெளியவைத்து தெளிவு நீரை நீக்கி இதுபோல் 9-முறை செய்து அடுப்பேற்றிச் சூடுதாக்கிப் புளியா ரைக் கீரை சிறுகீரையால் 4-சாமம் கிண்டிக் கல்வத்திலிட்டு புளியா ரைச் சிறுகீரைச் சாற்றாலரைத்துப் பில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுக் கெஜபுடமிட்டு எடுத்துப்பொற்றலைக்கையான் சாற்றினா லரைத்துப் பில்லைதட்டி முன்போல மூன்று பொடம் போட சிறிது ஆசுதங்கல் தாளிக்காய், கடுக்காய், நெல்லக்காய் கியாழத்திலரைத்து முன்போல புடமிட அருணன்போல் செந்தூரமிருக்கும். அது குஷ்டம் மேகம், ஈளை மந்தாரகாசம் இவைகளுக்குக் கரிசலை 1-படி பசும்பால் கூட்டி 10-பலம் சர்க்கரை போட்டு 16-பலம் மிளகு பொடித்துப்போட்டு லேகியம்போல் கிண்டி கால்படிநெய் அரிக்கால் படி தேன் கலந்து கிண்டி அந்த லேகியத்தில் பணவிடை செந்தூரம் வைத்துச் சாப்பிடவும் 1 மண்டலம் காலை மாலை இரு வேளையும் சாப்பிடவும் பத்தியம், புளி, புகையிலை, நீக்கவும் பசு நெய் வெள்ளாட்டுக் கண்டம் சிறிது பயிறு துவரை விடுதலை முருங்கைப் பிஞ்சு ஆகும்.

பெரும்பாடுதீர மிளகுலேகியம் :—

279, 280-வது கவி

பிஞ்சாகு மின்னமொரு லேகியங்கேளு
பெலமான போஸ்தக்காய் கர்க்கடகசிங்கி
தஞ்சமென்ற வகைக்குஒரு பலமாய்வாங்கித்
தன்மையுடன் மராட்டிமொக்கு கழஞ்சுசேர்த்து

மிஞ்சாமற் பொடிசெய்துப் பனைவெல்லந்தான்
மீறாமல் மருந்திடைக்குப் பாகுசெய்து
அஞ்சாமற் சூரணத்தைக் கொட்டிக்கிண்டி
அப்பனே தேனையும் விட்டுக்கிண்டே. 279

கிண்டியே பாக்களவு லேகியந்தான்
கிருபையுட னிருவேளை யஞ்சுநாளுங்
கொண்டிடவே பெண்களிட வுதிரப்பாய்ச்சல்
கொடுமையென்ற பெரும்பாடு தீருமப்பா
உண்டிடவே பத்தியந்தா னென்றுமாக
உத்தபனே வறுத்தவுப்பு முளகூட்டு
சுண்டவென்ற துவரையுடன் சுண்டலாகுஞ்
சுகமான வெந்நீருஞ் சாதமாமே. 280

279, 280-வது உரை

போஸ்தக்காய், கற்கடசிங்கி, வகைக்குப் பலம் மராட்டி மொக்கு ஒரு கழஞ்சி சேர்த்துப் பொடிசெய்து அவ் விடைக்குப் பனை வெல்லம் பாகுசெய்து ஷை பொடியை சேர்த்துக் கிண்டிப் பாக் களவு காலை மாலை 5-நாள் சாப்பிட உதிரம் விழுதல், பெரும்பாடு தீரும் பத்தியம் வறுத்துப்புக் கொள்ளவும், மிளகு, துவரை வெந்நீர் சாதமாகும்.

தேற்றாங்கொட்டை லேகியம் :—

281, 282-வது கவி

சாந்தமா மின்னமொரு லேகியங்கேள்
சமர்த்தான பலமைந்து தேற்றாங்கொட்டை
சேர்ந்ததொரு திரிகடுகு திரிபலாதி
சிற்றரத்தை சீரகம்வகைக் கரைபலந்தான்
பாந்தமாய்ப் பொடிசெய்து வைத்துக்கொண்டு
* பஞ்சதாரை பலம்நாலு படியாவின்பால்
தோய்ந்திடவே கலக்கியதைப் பாகுசேர்த்துத்
துரிதமுடன் தூள்கொட்டிக் கிளறுவாயே. 281

---

* பஞ்சதாரை - சர்க்கரை,

கிளரையிலே பசுவின்நெய் படிதான்வாரு
கீழிறக்கித் தேன்பாதி விட்டுக்கிண்டி
கிளரயிலே பாக்களவு லேகியத்தில்
கருவான நாகபற்பம் கூட்டித்தின்னு
அளரியிலே யிருவேளை இருபதுநாள்கொள்ளு
அப்பனே மூலனே யகலுஞ்சொன்னேம்
இளரவே சயமுடனே யத்திசுரவாத
மிதமான அக்கினியா மந்தம்போமே. 282

281, 282-வது உரை

தேற்றுங்கொட்டை 5-ம், திரிகடுகு, திரிபலாதி சித்தரத்தை சீரகம் வகைக்கு அரைபலம் வீதம் எடுத்துக்கொண்டு பொடித்து பஞ்சதாரை அல்லது சர்க்கரை 4-பலம் பசும்பால் 1-படி இவைகளை ஒன்று சேர்த்து அடுப்பேற்றி மேற்படி தூள்களைக்கொட்டிக் கிளரி பசுவின் நெய் 1-படி வார்த்துக்கிண்டி அதோடு தேன்பாதி விட்டுக் கிண்டி பாககளவு எடுத்து அதோடு நாகபஸ்பம் கூட்டி இருவேளை வீதம் 20-நாள் கொடுத்து வர மூலம் சயம் அத்திசுரம், வாதம் அச்கினி மந்தம்தீரும்.

திரிகடுகு லேகியம் :—

283, 285-வது கவி

மந்தமொடு மூலத்தின் வாயுதீரும்
மைந்தனே புளிபுகையு மாற்றச்சொல்லு
அந்தமுட னின்னமொரு லேகியங்கேள்
அன்பான திரிகடுகு பலந்தானொன்று
சொந்தமுடன் சீரகமுங் கிராம்புயேலம்
தரிதமுடன் வகைக்கு அரைப்பலமேவாங்கி
விந்தையாய்ச் சுத்திசெய்து சூரணித்து
விதமான பனவெல்லம் பலந்தானஞ்சே. 183

அஞ்சாகும் பாகுபோற் காய்ச்சிக்கொண்டு
அப்பனே சூரணத்தைப் பாய்ச்சிக்கிண்டி
மிஞ்சாமல் நெய்யுழக்கு அரைக்கால்தேனுன்
விட்டுமதை லேகியம்போற் கிண்டிவாங்கிக்
கொஞ்சமாய்க் கொட்டைப்பாக்களவு மைந்தா
குணமாக யிருவேளை யிருபதுநாள்கொள்ளு
நெஞ்சாரத் தீருகிற விபாதிகேளு
நிலையான வாதமொடு வாய்வுபோமே. 284

வாயுவொடு வுஷ்ணமும் பித்தவாய்வும்
வயிற்றுவலி கடுப்புபுளி எரிச்சல்பேதி
தேயுவென்ற வக்கினி மாந்தவாந்தி
தீராதவஸ்தி சுரமஸ்தி வெட்டை
பாயுறதோர் பொருமலென்ற வாயுக்கிராணி
பறக்குமடா லேகியத்தில் அயச்செந்தூரம்
பேயுமின்றிப் பணவிடைதான் கூட்டியுண்ணப்
பெலமான வாயுவெல்லாம் புரண்டுபோமே. 285

283, 285-வது உரை

சுக்கு, மிளகு திப்பிலி, வகைக்குப் பலம் 1-சீரகம், கிராம்பு, ஏலம் வகைக்கு அரைபலம் எடுத்து சுத்தி செய்து சூரணஞ் செய்து 5-பலம் பனை வெல்லத்தைப் பாகுபோற் காச்சி சூரணத்தைக் கொட்டிக் கிண்டி கால்படி நெய் அரைக்கால்பலம் தேன்விட்டுக் கிளரி வைத்துக்கொண்டு கொட்டைப்பாக்கு அளவு காலை மாலை 20-நாளைக்கு சாப்பிட வாய்வு உஷ்ணம் பித்தவாயு அக்கினி மந்தம் வாந்தி அஸ்தி சுரம் அஸ்தி வெட்டை, கிராணி வாய்வு, தீரும், லேகியத்தில் அயச் செந்தூரம் சேர்த்துச் சாப்பிட்டால் ரத்தவிர்த்தி தாது விர்த்தி உண்டாகும் வயிற்றுக் கடுப்பு வயிற்று எரிச்சல் (புளிச்ச ஏப்பம்) அஜீரணம் நிவர்த்தியாகும்.

கபாட லேகியம் :—

286, 290-வது கவி

புரண்டுபோ மின்னமொரு லேகியங்கேள்
பெலமான ஆலரசு அத்திநாவல்
முரண்டைய மாம்பட்டைக் கருவேல்பட்டை
மூர்க்கமுடன் வெள்வேலும் விடதாரைவேரும்
திரண்டுநின்ற தென்னம்பூ ஒன்பதுமேஒன்றுய்த்
திறமாகப் பலமிரண்டு மிடித்துமைந்தா
இரண்டுமே பானையிட்டுக் குறுணிநீர்தா
னிட்டுமதை யெட்டொன்று யிட்டுக்கேளே. 286

கேளப்பா கியாழத்தை வடித்துக்கொண்டு
கிருபையுடன் சர்க்கரையால் மெறிந்துவோடு
கேளப்பா பூண்டுரித்து பலந்தானெட்டு
தருவாக அதிற்போட்டு வேகவைத்து
கேளப்பா தலமெல்லாங் குறுகிவெந்தாற்
குணமாக மத்திட்டுக் கடைந்துநீயே
நாளப்பா பனவெல்லம் பலந்தானறு
நன்மையுட னதிற்போடப் பாகுபோலாம். 287

பாகுபோல் பதமாகும் போதிலேதான்
பக்குவமாய் ஜாதிக்காய பினிலமம்
நேகவரை வகைக்கிரண்டு விராகனிடையாகு
நேராகப் பொடிசெய்து போட்டுக்கிண்டி
பாகுபோ விளம்பதமா யிருந்ததறுற்
பக்குவமாய்ச் சலம்வற்ற கிண்டும்போது
ஏகமாய்ப் பசுவினெய் கொஞ்சம்விட்டு
எமகனே லேகியம்போல் கிண்டிவாங்கே. 288

வாங்கியே நெல்லிக்காய் வீதந்தானும்
மைந்தனே யிருவேளை யிருபதுநாள்கொள்ளத்
தாங்கிநின்ற மூலமொடு கடுப்புரத்தந்
தருவான சீழுடனே மூலக்கிராணி
ஓங்கிநின்ற மூலத்திற் சேர்ந்தநோய்கள்
ஓடுமடாகார மதுமட்டாய் கூட்டு
பாங்குடனே புளிகூட்டு பத்தியமோயில்லை
பாலகனே செந்தூரங் கூட்டித்திண்ணே. 289

செந்தூர முன்சொன்ன நாகமப்பா
தின்றுவரில் தீராதரோக முண்டோ
விந்தூர மெலும்புருக்கி ரோகந்தீரும்
வித்தகனே தேகமது புஷ்டியாகும்
செந்தூரமுந் நூற்றிற்சுளுவாய்ச் சொன்னேன்
திறமாக அனுபான மறிந்துகொள்ள
செந்தூரில் முருகனைப்போல் நோய்கள்நீங்கும்
திறமான வயித்தியபூரண மிதுதானே. 290

286, 290-வது உரை

ஆலப்பட்டை அரசன்பட்டை அத்திப்பட்டை நாவல்பட்டை-1 மாமரப்பட்டை கருவேல்பட்டை வெள்ளைவேலாம்பட்டை விடைத் தளான் வேர் தென்னம்பூ இவை வகைக்கு பலம் 2-கொண்டு இடித்து பாத்திரத்திலிட்டு (மண் பாண்டம்) 2-மரக்கால் ஜலமிட்டு எட்டொன்றாய் கூட்டி சுண்டக் காச்சி வடித்துக்கொண்டு உரித்த பூண்டு 8-பலம் போட்டு வேகவைத்து மத்தால் கடைந்து 4-பலம் பனை வெல்லத்தைப் போட்டுப் பாகு பதமாகும்போது ஜாதிக்காய், அபின் ஓமம் வகைக்கு 2-விராகனிடை பொடித்துப் போட்டுக் கிண்டி பாகாகும்போது இளப்பதத்தில் பசு நெய்விட்டு கிண்டி இறக்கிவைத்து காலை மாலை நெல்லிக்காய் பிரமாணம் 20-நாள் சாப்பிட மூலம் மருப்பு ரத்தம், சீழ்மூல கிராணி மூலத்திற் சேர்ந்த நோய்களெல்லாம் தீரும் பத்தியமில்லை காரம் குறைக்கவும் இதை நாக செந்தூரம் சேர்த்துச் சாப்பிட எலும்புருக்கு நோய் விந்துவின் நோய் தீரும் தேக புஷ்டியாகும்.

தூதுவளை லேகியம் :—

291, 294-வது கவி

பூரணமா மின்னமொரு லேகியங்கேள்
புலத்தியனே நானூற்றில் புனிதமாக
காரணமா முருங்கைப்பூ தூதுவளம்பூவும்
கணக்காக வகைக்குநால் பலம்நிறுத்து
தாரணியில் * சதாவேரிக் கிழங்குமூணு
தருவான நன்னாரிவேர் பலமிரண்டு
காரணமாய் நிலப்பனையு நெருஞ்சிமுள்ளும்
கருவாக வகைக்குஒரு பலமாய்க்கூட்டிடே. 291

கூட்டியே சூரணித்துப் பசுவின்பால்தான்
குறுணியிலே போட்டு மேகுழம்புபோலே
காட்டியே வற்றிவரும்போது மைந்தா
கதருவான் சீனிபலம் பன்னிரண்டும்போட்டு
நாட்டியே கிளரயிலே பசுவினெய்தான்
நலமாகப் படியரை தேனுக்குவிட்டு
கெட்டியா லேகியம்போற் கிண்டி வாங்கிக்
கிருபையுள்ள கணபதிக்குப் பூசைசெய்யே. 292

செய்துமே தான்றிக்காயளவு கொள்ளத்
தீருகிற வியாதிதனைத் திறமாய்க்கேளு
எய்துகின்ற பிரமியமு மேகநோயும்
இன்பமுள்ள எலும்புருக்கிப் பிரமேகந்தான்
பெய்துமே மண்டலத்திற் றீர்ந்துதானல்
பெலமுண்டா மிந்திரியபெல முண்டாகும்
செய்துமே லேகியத்தில் மேகநோயெல்லாந்
தீருமடா பத்தியமோ யில்லைபாரே. 293

---

* சதாவேரி - தண்ணீர் விட்டான் கிழங்கு.

இல்லையென்று மயங்காதே யின்னமொன்று
என்மகனே சாதிக்காய் சாதிபத்திரி
வல்லென்ற கிராம்பு சிறுநாகப்பூ
வகையான அமுக்கரு பறங்கிப்பட்டை
கொல்லென்ற சந்தனமுங் கொடுவேலிவேரும்
கூர்மையுடன் பச்சைக்கர்ப்பூர மொன்றாய்
சல்லையென்று நினையாதேகாற்பல மாய்வாங்கித்
தான்பொடித்துச் சரியிடைதான் சீனிகூட்டே 294

291, 294-வது உரை

முருங்கைப்பூ தூதுவாளைப்பூ வகைக்கு பலம்-4 தண்ணீர் விட்டான் கிழங்கு பலம்-3 நன்னாரிவேர்-2 நிலைப் பனைக்கிழங்கு நெருஞ்சில் முள் வகைக்கு பலம்-1 இவைகளை இடித்து சூரணத்து ஒரு மரக்கால் பசும் பாலில் காச்சிக் குழம்புபோல சுண்டி வரும் போது 12-பலம் சர்க்கரை போட்டுக்கிளரி இறக்கிவைத்துக் கணபதியைப் பூசித்து தான்றிக்காய் அளவு காலைமாலை 1-மண்டலம் சாப்பிட பிரமியம் மேகம் எலும்புருக்கி பிரமேகம்நீக்கி சரீரப்பெலமுண்டாகும் பத்தியமில்லை. சாதிக்காய் சாதிபத்திரி கிராம்பு, சிறு நாகப்பூ அமுக்களன் பறங்கிப்பட்டை 1-சந்தனம் கொடுவேலிவேர் பச்சைக் கர்ப்பூரம் வகைக்கு கால்பலம் கொண்டு இடித்துச்சரி இடை சர்க்கரை கூட்டிப் பசு நெய்யால் பிசைந்து பீங்கானில் வைத்துக் கொண்டு பாக்களவு காலை மாலை 20-நாள் சாப்பிட சகல மேகமுந் தீரும்.

திப்பிலி ரசாயனம் :—

295, 297-வது கவி

கூட்டியே பசுநெய்யால் பிசைந்துமைந்தா
குணமான பீங்கானில் வைத்துக்கொண்டு
தாட்டியே பாக்களவு யிரண்டுவேளை
நன்மையுட னிருபதுநாள் கொள்ளும்போது

தாட்டிகமாய் மேகனோய் நீங்குமப்பா
தயவாக இன்னமொரு ரசாயனங்கேள்
காட்டுகிறேன் திப்பிலியும் பலம்பத்தப்பா
கருவான மிளகுடனே சுக்குபலமஞ்சே. 295

பலமொன்று * இருசீரகம் † மிரண்டுஓமம்
பாங்கான ‡ அரத்தைரண்டு 0 திரிபலாதி
நலமான லவங்கமுடன் லவங்கப்பத்திரி
நன்மையுள்ள லவங்கப்பட்டை தாளிசப்பத்திரி
பெலமான கொடுவேலி யேலமப்பா
பேசியோர் பதினோந்து பலமொவ்வொன்று
வலமாக விளவறுப்பாய்ச் சூரணித்து
தன்மையுட னவ்விடைக்குச் சீனிசேரே. 296

சேர்த்துமே தேன்விட்டுப் பிசைந்துமைந்தா
திறமான பீங்கானிற் பதனம்பண்ணி
காத்துமே தாப்பிரசெந் தூரங்கூட்டிக்
கனமாக வுண்டிடவே காசரோகம்
போர்த்துமே மந்தாரகா சங்கூடப்
புலத்தியனே சயயிருமல் இளைப்புகக்கல்
ஆர்த்துமே சேத்துமந் தொண்ணூற்றாறும்
அகலுமடா மண்டலமருந்திபாரே. 297

295, 297-வது உரை

திப்பிலி பலம்-10 மிளகு சுக்கு வகைக்குப் பலம்-5 நற்சீரகம், ஓமம், குரோசாணி ஓமம், சிற்றத்தை பேராத்தை, கடுக்காய்,

* இருசீரகம் - கருஞ்சீரகம்.
† இரண்டு ஓமம் - குரோசானியோமம்.
‡ அரத்தை - சிற்றரத்தை - பேரரத்தை.
0 திரிபலாதி - கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய்.

தான்றிக்காய், நெல்லிக்காய், லவுங்கம் லவுங்கப்பத்திரி லவுங்கப் பட்டை தாளிச்சபத்திரி கொடிவேலி ஏலம் வகைக்குப் பலம்-1 சேர்த்து இளவருப்பாக வறுத்து சூரணித்து அவ் விடைக்குச் சர்க்கரை சேர்த்து தேன்விட்டுப் பிசைந்து பீங்கானில் வைத்துக் கொண்டு தாம்பரச் செந்தூரங் கூட்டி காலை மாலை 1-மண்டலம் சாப்பிடக் காசநோய் மந்தாரகாசம் சயம் இருமல் இளைப்பு கக்கல் சிலேத்மம் 96-ம் தீரும்.

சுக்குச் சூரணம் :—

298-வது கவி

பாரேநீ இன்னமொரு சூட்சங்கேளு
பாங்கான சுக்கதனைச் சூரணமேபண்ணி
காரேநீ கருப்புசர்க்கரை யவ்வீதங்
கலந்துமே யிருவேளை யேழுநாளுந்
தேரேநீ தின்றுவரவாய் வுந்தீரும்
திறமான தீபமுண்டு முண்டாமப்பா
ஊரெல்லா மருந்திருக்கக் காட்டிற்போய்நீ
உலுத்தரைப் போலலையாதே உண்மைகேளே 298

298-வது உரை

சுக்கை யிடித்துச் சூரணித்து அவ்விடைக்குச் சர்க்கரை கலந்து காலைமாலை 7-நாள் சாப்பிட எல்லாவித வாய்வுந் தீரும் பசி தாபனம் உண்டாகும்.

திப்பிலி மிளகுசூரணம் :—

299-வது கவி

உண்மையென்ற திப்பிலியைச் சூரணமேசெய்து
உகமையுடன் றேனிலே குழைத்துத்தின்ன

வண்மையுடன் புகைந்திருமுஞ் சேத்துமநோய்தான்
மாறியே பசியுண்ட மருவிப்பாரு
நன்மையுடன் மிளகுதனை சூரணமேசெய்து
நலமான பசுநெய்யிற் சீனிகூட்டி
தன்மையுடன மூன்றுநாள் அந்திசந்தி
தானருந்த சளியிருமல் தவறிப்போமே. 299

299-வது உரை

திப்பிலியை சூரணம் செய்து பசுநெய் தேன்விட்டுக் கிளரிக் காலே 3-நாள் சாப்பிட சனி இருமல்தீரும்.

திரிகடுகு சூரணம் :—

300-வது கவி

தவறிப்போம் திரிகடுகு சூரணத்தால்
தருவான மந்தமுடன் கழிச்சல்தீருந்
தவறிப்போந் தேனிலே கொண்டாயானல்
தருகாது செந்நி சீதளங்கள்தானுந்
தவறிப்போம் பனைவெல்லங் கூட்டியுண்ண
தன்மையுள்ள வயிற்றுநோய் தானேதீருந்
தவறிப்போஞ் சகலநோய் தன்னைக்கண்டால்
தருகாது வயித்தியன்பேர் சொல்லுமுன்னே. 300

300-வது உரை

சுக்கு மிளகு திப்பிலி சமனிடையாகச் சூரணம் செய்து சாப்பிட மாந்தம் கழிக்சல் தீரும் தேனில் சாப்பிட சந்நி சீதளம் பனைவெல்லத்தில் சாப்பிட வயிற்று நோய் தீரும்.

முப்பூவுக்கு விபரம் :—

301, 304-வது கவி

முன்னமே முப்பூவை மறைத்ததாலே
ஞானமது வகைவிபரஞ் சொல்லக்கேளு

நன்னயமாம் நாதமென்றால் பூமிநாதம்
நாதாக்கள் பூசித்து வாழ்ந்தநாதம்
அன்னைஉமை நாதமதிற் கொஞ்சம்வாங்கி
அப்பனே பிரிதிவின் அண்டஞ்சேர்த்து
சொன்னமொழி தவறாமல் அனுப்பிவைத்து
சேர்த்தரைக்கத் தாளிச்சார் கருக்குநிரம்ப. 301

அனுப்பினுட்சுவை உப்பு :—

நிரம்பவென்று லரைநாழி யரைத்தாற்போதும்
நிலவரமாய்ச் சிப்பியுட சாம்பலுக்குள்வைத்து
ஐம்பதொரு புடம்போடே சதாசிவனுமங்கே
அடக்கிவெள்ளை நிறமாகிக் குருவுமாவார்
செம்பொனென்ற வாதமுடன் வயித்தியமுஞ்சித்
திறமான வாதிசித்தி குளிகைசித்தி
சம்புசதா சிவனுடைய பாதஞ்சித்தி
தயாநிதியாந் தாயினிட நாகத்தாட்டே. 302

இரசவாதத்திற்கு வாலைரசச் செந்தூரம் :—

ஆட்டவென்றால் குருவெல்லா தாட்டமுண்டோ
அப்பனே வாலைரசச் செந்தூரத்தில்
நாட்டமென்ற பலம்நிறுத்தும் பாதிகெந்தி
நன்மையுடன் பேய்ச்செம்பின் கிழங்குசாற்றில்
ஆட்டுவாய் நாள்மூன்று பின்புலர்த்தி
அப்பனே குப்பியிலே மூன்றுசாமம்
வாட்டமில்லா தீயெரித்து முன்போல்கெந்தி
மாட்டியே யைந்துவிசை யெரித்துவாங்கே. 303

முன்சொன்ன வைப்பு விபரமும்

வெடியுப்பு சுத்தி விபரமும் :—

வாங்கினூற் குப்பியடி யிருக்குமப்பா
    மைந்தனே செந்தூர மேலேறுது
தூங்கியே யலையாதே சொல்லக்கேளு
    துறைத்தாக செலவுக்குக் கிட்டுமப்பா
ஓங்கியே சகலநோய் தீருமப்பா
    உத்தமனே முன்சொன்ன சீடனுக்கு
தாங்கியே வாழையுட கிழங்குசாற்றில்
    தான்காய்ச்சி வெடியுப்பு கூட்டநன்றே. 304

301, 304-வது உரை

மறைக்கப்பட்ட ஞானமதை விரித்துரைக்கின்றேன். சற்றுக் கவணிப்பீராக:—நாதாக்கள் வணங்கி வந்த நாதம் அன்னையாகிய மாதாவள் மூலமாய் அப்பு, தேயு, வாயு, என்ற அண்டமும் சேர்ந்து வேதாந்தமாகிய நாதாந்தம் உண்டானது அந்த நாதாந்தமாவது உப்பு அந்த உப்பை அரை நாளிகை அரைத்து சிப்பிச்சாம்பலுக்குள் வைத்து 50 புடம்போட பஸ்பம் வெள்ளை நிறமாயிருக்கும் அதுவே வாதம் செய்யக்குருவாகவும், வைத்தியத்திற்கு அதிகாரணமாகவும், அதுவே வாதம் சித்திபாகும் குளிகை அதைசதா சிவசித்தி அந்த சித்தியை எடுத்து நாகம்கூட்டி ஆட்டி வாலை ரசச்செந்தூரத்தில் 1 பலம் நிறுத்து எடுத்து அதில்பாதி கெந்திமேய சொறையின் கியாழத்தில் ஆட்டி 3 நாள் காயவைத்து குப்பியில் அடைத்து தீபெரித்து முன் போல் கெந்திகூட்டி முன்போல் 5 விசை எரித்து எடுத்துப்பார்க்கச் செந்தூரமாக இநக்கும் அதை எடுத்து அனுபானத்துடன் கொடுக்க சகலநோயும் தீரும், முன்சொன்ன செந்தூரத்தில் வாழைக்கியாழத்தில் காச்சி வெடியுப்புக்கூடப்போட்டு காச்சிக்கொள்ளுதல் மிகவும் நலமாகும்.

சைவீர வைப்பு :—

305, 308-வது கவி

நன்றப்பா சைவீர வைப்புதானும்
நலமான வெடியுப்பு நாலுபங்கு
நின்றப்பா சத்தைவிடு ரண்டுபங்கு
நிலையான நவாச்சார மிரண்டுபங்கு
கண்டப்பா சினமோர் பங்குகூட்டிக்
கருவாகத் தான்பொடித்துக் கலைபத்திரட்டு
மூன்றப்பா கெந்தகம்பே லதிநீர்வாங்கி
முட்டையரை சைவீர வைப்புநன்றாம். 305

வைப்பான திறவுகோலிது தானப்பா
மார்க்கமுடன் சித்தாதிசெய்யும் வித்தை
செப்பாத சதுர்முகத்தோன் றிருமுகமுன்
சொன்னேன் றினமான சீடனுக்குஞ்சொன்னேன்
வைப்பானவைப்புக் குகைபாகஞ் சொன்னேன்
மகத்தானமுப் பூவின்மறைப்பைச் சொல்வேன்
அப்பான அப்பினுப்பு கல்லுப்புத்தான்
அப்பனே நாதமென்றாற் பூநீறுமே. 306

பூநீறுஞ் சத்தியுப்பு கல்லுப்பின்பேர்
புலத்தியனே சிவமென்பார் மரத்தைக்கேளு
பூநீறுமதற்கடியில் அண்டம் போலே
பூமியிலே தானிருக்கும் தெரிந்திடாதோ
பூநீறும் அண்டமென்றால் சுக்கான்கல்லு
புலத்தியனே பேருலகம் புகழுங்கல்லு
பூநீறுங்கல்லுப்பாஞ் சுண்ணாம்பு கல்லு
பூட்டிவிட்டு நாக்கறப்பே னென்றுசொல்லே.

சொல்லப்பா பரத்தினிட உப்பிதப்பா
சுகமாக மூன்றுமொன்ருய்ச் சுண்ணமானும்
அல்லப்பா ஆகாரந் தன்னில்மூனு
அப்பனேயதைச் சேர்க்கில் உயிருண்டாகும்
வல்லென்ற பெரியோரும் யோகிமாரும்
வாழ்ந்திருப்பா ரிதைத்தானே பூசைசெய்து
கல்லென்றகலைக்கருகே யிருப்பார் சொன்னல்
காணரிது கண்டவர்கள் கோடிக்கொன்றே. 308

305, 308-வது உரை

வெடியுப்பு 4-பாகம் பாசம் 2-பங்கு நவச்சாரம் 2-பங்கு சீனம் 1-பங்கு இவைகளைப் பொடித்துப் பாத்திரத்தில் போட்டு கெந்தக நீர் இறக்குவதுபோல் இறக்கவும் இதுதான் சைவீர நீர்வைப்பு இதை சித்தாதிகள் தான் செய்வார்கள் சதுர்முகன் சாக்ஷியாய் சொன்னேன் அதைவைக்கும் இடமும் சொன்னேன் முப்பூவின் மறைப்பும் சொன்னேன், அப்பினுப்பு கல்லுப்பு சேர்ந்துதான் நாதம் என்ற பூநீர், அரத்தையை சிவன் என்றும் சொல்லுவார், பூநீர் சுக்கான் கல்லின் நீராகவும் சொல்லலாம் இந்த முன்று உப்போடு சுண்ணும்பும் சேர்ந்து சேர்த்தால் உயிருண்டாகும் இதை வல்லுவராண் யோகிகள் இதைப்பூசைசெய்து அதனருகில் இருப்பார்கள் இதை கண்டு அறிந்தவர்கள் கோடிக்கு ஒருவர்தானுண்டு.

வெள்ளைச் சூரணம் :—

309, 310-வது கவி

ஒன்ருக இன்னமொரு சூரணங்கேள்
உத்தமனே சந்தனமூம் அகிற்கட்டையேலம்
நன்ருகலவங் கப்பட்டை கிராம்புசோம்பு
நன்மை யதிமதுரங்கார் போகவித்து
சென்றதோர் வெட்பாலை தேற்ருன்வித்து
திறமான அருகம்வேர் சிற்ருமுட்டி

பன்றுன வேருடனே பன்னிரண்டு
பாலகனே வகைக்கு அரை பலமாய்வாங்கே. 309

வாங்கியே வெயிலுலர்த்திச் சூரணமேசெய்து
வண்மையுட னந்திடைக்குகற் கண்டுகூட்டி
தேங்கியே வொருகடிதான் அந்திசந்தி
திரமான பசு வெண்ணே
மண்டலமேகொள்ள ஓங்கியே ஓடுகிற
வெள்ளைதீரும் உத்தமனே நீரெறிப்பு
உடனேதீரும் பாங்குடனே பத்தியமோ
காரமாகா பரிவானபுலத்தியனே பாகமாமே. 310

309, 310-வது உரை

சந்தனம், அகிற் கட்டை. ஏலம் லவுங்கப்பட்டை கிராம்பு சோம்பு, அதிமதுரம் கார்போக விரைவெட்பாலே தேற்றுன்கொட்டை அருகம் வேர் சிற்றுமுட்டி வேர் இவை வகைக்கு பல அரை வாங்கி சூரணம் செய்துகொண்டு அதனிடைக்குக் கற்கண்டு சேர்ந்து ஒரு கடிகைப் பிரயாணம் காலைமாலை ஒரு மண்டலம் சாப்பிட ஓடு வெள்ளை நீரெறிவு தீரும் பத்தியம் காரம் நீக்கவும்.

இஞ்சிச் சூரணம் :—

311, 313-வது கவி

பாகமா யின்னமொரு சூரணங்கேள்
பாங்கான இஞ்சி பலம்பத்து
வாங்கி சோகமாய்த் தோல்போக்கி
பில்லையாக்கி சுத்தமா பொன்வறுப்பாய்
பசுநெய்யாலே ஏகமாய்ப் பொடிசெய்து
வைத்துக்கொண்டு ஏலமொடு திரிகடுகுகிராம்பு
ஓமம் தாகமாய் வாலுழுவைச்
சாதிக்காயுந் தருவான ஆனைத்திப்பிலிசீரகமாமே.

ஆமப்பா அதிமதுரங் குரோசாணிஓமம்
அமுக்கிரு கசகசாலவங்கப் பத்திரி
நாமப்பா மோடியுடக் கொத்தமல்லி
நலமான பேரீச்சு முந்திரிக்கைஒக்க
தாமப்பா வகைக்கிகாற் பலமேவாங்கித்
தருவான இளவறுப்பாய் சூரணமேசெய்து
ஓமப்பா சீனிபலம் பத்துங்கூட்டி
உத்தமனே மூன்றுமொன்ருய் விரவிக்கொள்ளே.

விரவியே வொருகடிதான் அந்திசந்தி
விவரமுடன் மண்டலமே கொண்டாயானல்
பரவியே மந்தமுடன் அக்கினிமாந்தம்
பாங்கான ஊஷ்ணத்தின் வாய்வுங்கூடக்
கரவியே பித்தமொடு பித்தவாய்வுங்
காணுதே ஓடுமடா தீபனமுண்டாகும்
பிரவியென்ற வாதமெல்லா மொடுக்கிநல்ல
பிலமுண்டா மின்னமொரு விவரங்கேளே. 313

311, 313-வது உரை

10-பலம் இஞ்சியைத் தோல்சீவி பில்லையாக்கி பசு நெய்யில் பொன்வறுப்பு வறுத்துக்கொண்டு பொடி செய்துகொண்டு ஏலம் சுக்கு மிளகு திப்பிலி கிராம்பு ஓமம் வாலுவையரிசி சாதிக்காய் ஆனைத் திப்பிலி சீரகம் அதிமதுரம் குரோசானி ஓமம் அமுக்குளாங்கிளங்கு கசகசா லவுங்கம் பத்திரி மோடிகொந்து மல்லி முந்திரிபருப்பு பேரீச்சம், வகைக்கு கால் எடுத்து இளவறுப்பாக வறுத்துச் சூரணம் செய்துகொண்டு அத்துடன் 10-பலம் சர்க்கரையும் இஞ்சிச் சூரணம் 3-ம் ஒன்ருக கலந்துகொண்டு காலைமாலை 1-மண்டலம் சாப்பிட்டால் மந்தம் அக்னி மாந்தம் உஷ்ண வாய்வு பித்தம் பித்தவாய்வு தீரும் பசிதீபனமுண்டாகும் பலமுண்டாகும்.

திராட்சசூரணம் :—

314, 316-வது கவி

கேளேநீ முந்திரிக்கை பேரீச்சோடு
கிருபையுள்ள தக்கோலமைதுர முத்தம்
வாளேநீ கொத்தமல்லி அல்லிக்கிழங்கும்
வகையான சாதிக்காய் லவங்கஞ்சுக்கு
ஆளேநீ நன்னாரி லவங்கப்பத்திரி
அப்பனே தாளிசம் திப்பிலிவிலாமிச்சு
பாளேநீ சிறுநாவற்பூ லவங்கப்பட்டை
பாங்கான சந்தனமு மூங்கிலுப்பே. 314

உப்பானநெல்லி விதைநெற் பொறியுமொக்க
வுத்தமனே வகைக்கு ஒருபலமாய்வாங்கி
செப்பாமல் சூரணித்து சமனிடைதான்சீனி
சேர்த்துமே வொருகடிதான் அந்திசந்தி
ஒப்பாக காலேசும்மா மண்டலந்தான்
உத்தமனே பசுநெய்யில் மாலையிலுண்ணத்
தப்பாதபத்திய மோயில்லை யப்பா
தருவான வியாதிதனைச் சாற்றக்கேளே. 315

சாற்றக்கேள் பயித்தியமும் பாண்டுசோகைத்
தருவான பித்தமொடு மிரத்தபித்தம்
போற்றியே காமாலை தாகசுரமும்
வாங்கிப்போ சயித்தியமும் தீர்ந்துபோகும்
வாழ்த்தக்கேளின்ன மொரு சூரணந்தான்
மைந்தனே திரிகடுகு மோடிகோஷ்டங்
தோற்றியதோர் நெல்லிக்காய்ச் சந்தனமுமாஞ்சில்
சுகமான தாளிசை கிராம்புசீரகமே. 316

314, 316-வது உரை

முந்திரிப்பருப்புப் பேரீச்சுங்காய் வால்மிளகு அதிமதுரம் கோரங்கிழங்கு கொத்து மல்லி அல்லிக்கிழங்கு சாதிக்காய் லவுங்கம் சுக்கு விலாம் பிஞ்சு சிறுநாகப்பூ லவுங்கப்பட்டை சந்தனம் மூங்கிலுப்பு நெல்லிவிரை நெற்பொறி வகைக்கு 1-பலம் இடித்துச் சூரணம் செய்து சர்க்கரை சமனிடை சேர்த்து காலைமாலை 1-மண்டலம் நெய்யில் சாப்பிட பாண்டு, பயித்தியம் சோகை பித்தம் ரத்தபித்தம் காமாலை தாகசுரம் சயித்தியம் தீரும் பத்தியமில்லை.

மந்தவாய்வுக்குச்சூரணம் :—

317-வது கவி

சீரகமுமேல மொடுபச்சைக் கர்ப்பூரந்
திரமாகச் சூரணித்துச்சீனி சமன்கூட்டிக்
காரணமாய் வொருகடிதா னந்திசந்தி
கனமாக உண்டிடவே பித்தமெல்லாம்
பேரணியாய் நின்றதொரு யிரத்தபித்தம்
பிலமாக வெரித்த பித்தமரோசிகம்வாந்தி
தாரணியில் நில்லாது பத்தியமோயில்லை
தருவாக இருபதுநாள் கொண்டுதேறே. 317

317-வது உரை

சீரகம் ஏலம் பச்சைக்கற்பூரம் இவைகளை எமஎடை யெடுத்துச் சூரணித்து அதற்குச் சரியாய் சீனிசமன் கலந்து ஒரு கடிகையாக அக்திசந்தி சாப்பிடவும் தீரும் வியாதி:—பித்தம் உறுதியான ரத்த பித்தம் உஷ்ண பித்தம் வாந்தி அஜீரண வாந்தி முதலிய வியாதி தீரும் பத்தியமில்லை.

வாந்திபேதிக்குச்சூரணம் :—

318, 319-வது கவி

தேறவே யின்னமொரு சூரணங்கேள்
திறமான எட்டியுட வடவேர்வாங்கி

கூறவேமேல் தோலைப்பழச் சாற்றுலாட்டி
குணமாக ரவியுலர்த்திச் சூரணமேசெய்து
மீறவே பதனமதாய் வைத்துக்கொண்டு
மேன்மையுடன் புரமெரித்தார் தும்பைரெண்டும்
ஏறவே கியாழமிட்டுச் சூரணந்தான்
இன்பமுடன் கடலைபிடை யிட்டுக்கொள்ளே.

கொள்ளவே யுகபேதி தீருமப்பா
குணமாக மீறியது பேதியானல்
விள்ளவே மறுபடியுங் கிஷாயத்தில்தாக்கு
மீருகிற வாந்தியொடு பேதியாவும்
உள்ளவே காதடைப்பு சந்நிவேர்வை
உத்தமனே தீருமடா மூன்றுவிசையீய
வள்ளவேவறுத் தரிசிகஞ்சி கொள்ளு
மைந்தனே ஊன்றியது பறக்கும்பாரே. 319

318, 319-வது உரை

எட்டியின் வடக்கில் போகும் வேர் கொண்டுவந்து மேல் தோல் எடுத்து அதை எலுமச்சம்பழச் சாற்றிலரைத்து வெப்பிலி லுலர்த்திச் சூரணித்து சிவனுர் மூலிகை (அல்லது) தும்பையைக் கியாழம் செய்து அந்தக் கியாழத்தில் கடலையிடைச் சூரணம் போட்டுக்கொள்ளவும், சுகமாய் பேதியாகும். மறுபடியும் முன்போல் கொள்ள அளவுக்கு, மீறிய பேதி வாந்தி, காதடைப்பு சந்நி வேர்வை முதலியவை தீரும் பத்தியம்:—வறுத்த அரிசிக் கஞ்சி கொள்ளவும்.

பறங்கிப்பட்டைச்சூரணம் :—

320-வது கவி

பாரப்பா யின்னமொரு சூரணங்கேள்
பறங்கிபட்டையொடு அமுக்கு ருவும்
சேரப்பா செங்கத்தாரி வேம்பாடம்பட்டை
நினைவாகத் திப்பி பியுஞ் சித்திரமூலம்

சாரப்பா சமனிடையாய்ச் சமனித்து
சமர்த்தாக ஆவின்பாற் பிட்டுவைத்து
காரப்பா பசுநெய்யில் லொருகடிதா னுண்ண
காணாது சூலைபுண் ணுப் பாகாதே. 320

320-வது உரை

பாரங்கிப் பட்டை அமுக்களாம் வேர் செஞ்சத்தரி வேம் பாடம் பட்டை, திப்பிலி சித்திர மூலம் இவைகளை சமனெடை எடுத்துக்கொண்டு இவைகளைச் சூரணம் செய்து பசு நெய்யில் 1-கடிகை கொள்ளவும் சூலைப்புண் தீரும் உப்பு நீக்கவும்.

கருஞ்சூரைச்சூரணம் :—

321, 322-வது கவி

உப்பாகா தின்னமொரு சூரணங்கேள்
உத்தமனே கருஞ்சூரை சித்திரமூலஞ்
செப்பாத வெள்ளருகு மிளகரணைமிளகுஞ்
சிறிகுறிஞ்சான் * ஆகாசக்கிழங்கு கருவேரும்
ஒப்பான உழலத்தி வேர்பட்டை
ஒன்பதுமே சரியிடையாய்ச் சூரணித்து
அப்பாநீ முன்போலே பாலிட்டு
அவித்திடவே சுத்தியதாம் பின்புகேளே. 321

காட்டுக்கரணைச்சூரணம் :—

கேளேநீ லொருகடிதா னிரண்டுவேளை
கிருபையுடன் பசுநெய்யில் தீருநோய்கேள்
பாளேநீ கடிவிஷமும் குஷ்டரோகம்
பாங்கான கருங்கரப்பான் கிரந்திசூலை

---

* ஆகாசகிழங்கு - ஆகாசக்கருடன் கிழங்கு.

ஆளேநீ புண்களெல்லாந் தீருமப்பா
அப்பனே வறுத்தவுப்பு துவரையாகும்
வாளேநீ பின்னமொரு சூரணங்கேள்
மைந்தனே பேய்கரணைகழஞ்சு பதினாறே. 322

321, 322-வது உரை

கருஞ்சூரை அல்லது செம்பருத்தி சித்திர மூலம் வெள்ளை குரு மிளகு காரனை மிளகு சிறிகுறிஞ்சான் ஆகாசக் கெருடன் கிழங்கு அத்திப்பட்டை வகைக்குக் சமனெடையாகக் கூட்டிப் பொடித்துச் சூரணித்துக்கொண்டு காலைமாலை பசுநெய்யில் ஒரு மண்டலம் சாப்பிட குஷ்டம் கடி விஷம் ரணம்கருங்கரப்பான் கிரந்திகுலை தீரும் வருத்த உப்பு துவரைப்பருப்புச் சாப்பிடவும்.

காட்டுக்கருணைச் சூரணம் :—

323-வது கவி

பதியான சுக்குமே கழஞ்சுநாலு
பாலகனே கொடிவேலி கழஞ்சுரண்டு
விதியானமிளகுரண்டு சூரணமே செய்து
மீறுமல் மூன்றுசுண்டைக்காய் வீதந்தான்
சதியாக வேழுநாள் அந்திசந்தி
சாதகமா யெண்ணைதனில் குழைத்துத்தின்ன
குதியான மூலமுளை மூலரோகங்
குணமாகும் பத்தியமும் புளியாகாதே 323

323-வது உரை

சுக்கு 4-கழஞ்சி கொடிவேலி 2-கழஞ்சி மிளகு 2-கழாஞ்சி இவைகளைச் சூரணம் செய்து 3-சுண்டைக்காய் அளவு காலைமாலை 7-நாளைக்கு எண்ணையில் குழைத்துச் சாப்பிட மூளைமுலை ரோகந் தீரும் பத்தியம் புளியாகாது.

சிந்திச்சூரணம் :—

324, 326-வது கவி

ஆகாது யின்னமொரு சூரணங்கேள்
அப்பனே சிந்தியிட சூரணத்தை
வாகான சுத்தகங்கை தன்னில்சுத்தி
மைந்தனே மூவேழுதரமே செய்து
பாகாகஉலர்த்தியதை பால்விட்டுப் பிசரி
பாலகனே காயவைத்து பலம்பத்தப்பா
நேராகக்கரி சாலைசூரணங் கூட்டி
நினைவாகப் * பூறுகப் பூச்சிதன்னை. 324

தன்னையே பாலிலிட மண்ணெல்லாங்கக்குந்
தருவாகப்பின் புலர்த்திச் சூரணமேசெய்து
ஒண்ணுமே பலமூன்று இடையுங்கூட்டி
உத்தமனே மூன்றுவிசை பொடித்துவடிகட்டி
நிண்ணயமாய் வொருகடிதான் நெய்யிற்கொள்ள
நிலையான மேகமொடு விசையிலே
சொன்னமே காசமெட்டு இளைப்புசயரோகந்
தொலையாத † கிறுச்சினமும் அண்டவாய்வே.

வாயுவென்ற வாதமொடு வரட்சிபித்தம்
வகையாகத் தீருமடாதே னிற்கொள்ள
தேயுவென்ற கர்மநோய் நாசிப்புண்கள்
தொலையாத பீனசமுந் தொலைந்துபோகும்
பாயுமென்ற சர்க்கரையிற் கொண்டால்மைந்தா
பாங்கான மயிர்வெட்டுப் புழுவெட்டோடுங்
காயுமென்ற காற்பலமுங் கண்தெளிவுமுண்டாங்
கருவாகப்புளி புகையுந்தவிர்க்கச் சொல்லே. 326

---

* பூநாகப்பூச்சி-நாகப்பூச்சி
† கிறுச்சினம்-அற்பம்.

324, 326-வது உரை

சேந்தில் கெண்டியை 21-முறை சுத்த ஜலத்தில் சுத்தி செய்து காயவைத்துச் சூரணித்துப் பாலில் பிசறிக் காயவைத்து 10-பலமும் 10-பலம் பொற்றலை கையாந்தகரை சூரணித்துக் கலந்து பாலி விட்டு சுத்தமான நாகப்பூச்சிப்பொடி 3-பலம் சேர்த்து 3-முறை இடித்துக் சளித்து நெய்யில் காலைமாலை 1-மண்டலம் சாப்பிட மேகம் யீளை காசம்-8 இளைப்பு சயம் அண்டவாய்வு வாதம் நாவரட்சி, பித்தம் தீரும் தேனில் சாப்பிட உஷ்ணம் நாசிப் புன் பீனசம் தீரும் சற்கரையில் சாப்பிட புழுப்பற்றி மயிர் விழுதல் முதலியவகை தீரும் கால்கணுக்குப் பலமுண்டாகும் கண்களுக்குப் பிரகாசம் உண்டாகும்.

வாதசுரத்துக்குகியாழம் :—

327, 328-வது கவி

சொல்லவே கியாழமொன்று விபரமாய்க்கேளு
　　சுகமான பற்பாட கஞ்சேந்தில்முத்தம்
அல்லவேமலை தாங்கி கண்டங்கத்திரி
　　அப்பனே செம்முள்ளி முன்னைசுக்கு
நல்லவேவகைக் கிரண்டு கழஞ்சுகூட்டி
　　நாழிநீ ரெட்டொன்றாய் மூன்றுநாளும்
வெல்லவே யிருவேளை குடிக்கும்போது
　　மீண்டுவரும் வாதசுரம் விட்டுப்போமே. 327

விட்டுப்போம் வாதசுரந் தனக்குக்கேளு
　　விதமான சுக்குமுள்ளி கண்டங்கத்திரி
வெட்டிப்போம் பெருமல்லி சிற்றுமல்லி
　　வேருடனே வகைவீதங் கழஞ்சிரெண்டு
கட்டிப்போம் நாலுழி நீர்நாழியாக
　　காய்ச்சிவடித் ததில்உழக்கு வறுத்தரிசியிட்டு
கெட்டியில்லாக் கஞ்சிபோல் காய்ச்சிக்கொள்ளக்
　　கெடியான வாதசுரம் கிளரிப்போமே. 328

327, 328-வது உரை

பற்பாடகம் சீந்தில் கோரைக்கிழங்கு முன்னை சுக்கு இவைகளை வகைக்கு 2 கழஞ்சி 2 மரக்கால் ஜலத்திலிட்டு 1 படியாக வத்த வைத்து வடித்து அதில் கால்படி வறுத்த அரிசிக்கஞ்சி சாப்பிட வாதம் சுரம் நிவர்த்தியாகும்.

பித்தசுரத்திற்கு கியாழம் கஞ்சி :—

329-வது கவி

கிளரிப்போந் தூதுவளை வேரினோடு
கிருபையுள்ள சீந்தில் சுக்குமதுரமாஞ்சி
அளரிப்போம் பயறுமுத்தஞ் சிற்றுமுட்டி
அப்பனே முன்போலே கியாழங்கொள்ள
உளரிப்போம் பித்தசுரங் கஞ்சிகேளு
உத்தமனே வில்வவேர் மதுரஞ்சுக்கு
முளரிப்போ மிலுப்பை வேர்சிற்றுமுட்டி
முன்போலக் கஞ்சிகொள்ள முறைமையாமே.

329-வது உரை

தூதுவேளை வேர், சீந்தில்வேர் சுக்கு அதிமதுரம் மஞ்சில் சித்தாமுட்டி இவைகளைக் கியாழம்வைத்து கொள்ளவும் பித்தசுரத்திற்கு, வில்வவேர் அதிமதுரம் சுக்கு இலுப்பவேர் சிற்றுமுட்டி இவைகளைக் கூட்டி முன்போல் கஞ்சி கொள்ளவும்.

சேத்துமசுரத்துக்குகியாழம் கஞ்சி :—

330-வது கவி

முறைமையென்ற தூதுவளை கண்டங்கத்திரி
முயன்றதொரு செம்முள்ளி சுண்டைவேரும்

வறுமையென்ற சுக்குடனே கியாழம்பண்ணி
வகையான திப்பிலித்தூள் போட்டருந்த
அருமையென்ற சேத்துமத்தின் சுரமுந்தீரும்
அப்பனே கஞ்சிவகை பாதரியும்வில்வம்
உரிமையென்ற பெருங்குமிழம் வேரில்முன்போல்
உத்தமனேகஞ்சியிட சேத்தும சுரம்போமே. 330

330-வது உரை

தூதுவேளை கண்டங்கத்திரி செம்முள்ளி சுண்டைக்காய் வேர் சுக்கு இவைகளை சமனிடையாக தட்டிக்கியாழமிட்டு திப்பிலி தூள் செய்து சாப்பிட சிலேத்ம சுரம்தீரும்.

குளிர்சுரத்துக்குக்கியாழம் :—

331-வது கவி

போமப்பா சீரகமுங் * குறுந்தொட்டிவேரும்
புண்ணியனே கியாழ மிடகுளிர்சுரங்கள்
ஆமப்பாவிஷசுரமும் பழயசுரமும் போகு
மப்பனே வெள்ளுள்ளி வசம்புமஞ்சள்
காமடா கொடிவேலி யிந்துப்போடு
சாரணைவேர் முருங்கைவேர் கியாழங்கொள்ள
போமப்பா வாயுவினிட வயிற்றுவலிபோகும்
புலத்தியனே யின்னமொரு கியாழங்கேளே. 331

331-வது உரை

சீரகம், குருந்தொட்டி வேர் அல்லது பூனைக்கஞ்சாரி வேர் கியாழங்கொள்ள குளிர் சுரந்தீரும். வெள்ளுள்ளி வசம்பு மஞ்சள் கொடிவேலி இந்துப்பு சாரணைவேர் முருங்கைவேர் கியாழம்கொள்ளவும்.

---

* குறுந்தொட்டி-பூனைக்காஞ்சொரி.

சந்நிசூத வாய்வுக்கு :—

332, 333-வது கவி

கியாழமென்ற தூதுவளை கண்டங்கத்திரி
கிருபையுடன் முட்கா வேளைசுக்குமொன்றாய்
கியாழமிட்டுத் திப்பிலித்தூள் தூவிக்கொள்ள
கிருபையுள்ள சந்நியுட சூதகந்தான்
கியாழததில் வாய்வுடனே வலிப்புதீரும்
கிருபையுடன் நெல்லிர்க்கு கருவேப்பிர்க்கு
கியாழமுடனருகம் வேர்பிடி தானென்று
கிருபையுடன் மூன்றறப்பாய் அரிந்துபோடே.

போட்டுநன் மிளகுகொஞ்சம் உடைத்துப்போட்டுப்
புண்ணியனே தான்வறுத்து யிறக்கிப்போட்டு
நாட்டியே அருகம்வேர்க்கணுப் போக்கிப்போட்டு
நன்மையுடனிள வறுப்பாய் வறுத்துத்தண்ணீர்
காட்டிடுவாய் ஒருபடிநீர் விட்டுப்பின்பு
கணக்காகக் கிராம்புஐந்து வறுத்துப்போட்டு
தாட்டிகமா யெட்டொன்று யிறுத்துக்கொண்டு
தருவான பாக்களவு வெண்ணெய்போடே. 333

332, 333-வது உரை

தூதுவேளை கண்டங்கத்திரி முக்கா எடைவேளை சுக்கு கியாழமிட்டு திப்பிலி தூள் தூவிச்சாப்பிட சன்னி சூதகம் வாய்வு வலிப்பு தீரும் நெல்லி கருவேப்பிலை பீர்க்கு கியாழத்தில் அருகம்புல் ஒரு பிடிபோட்டு மிளகு உடைத்துப்போட்டு அருகம் வேர்க்கணு நீக்கி இளம் வறுப்பாக வறுத்து 1-படி ஜலத்தில் டை சரக்கைததட்டிப்போட்டு 5 கிராம்பு வறுத்துப்போட்டு அரைக்கால் படியாகச்சுண்ட வைத்து பாக்களவு வெண்ணெயில் கொடுக்கக் கர்ப்ப ஸ்திரிகளுக்கு உண்டாகும் சூடு காங்கை ஜலக்கட்டு மலக்கட்டு தீரும்.

மூலக்கியாழம் இரசம்வேக்காட்டுக்குக் கியாழம்:—

334, 337-வது கவி

வெண்ணெயிட்டு உள்ளுக்குக் கொடுத்தாயானால்
வியாதியது தீருகிறவிதந் தான்கேளு
தண்மையுடன் கர்ப்பஸ்ரீ சூடுகாங்கை
சலகட்டு மலகட்டுந் தீருமப்பா
வண்மையுடன் விலாமிச்சை லவங்கப்பட்டை
மரமஞ்சள் கியாழமிட மூலந்தீரும்
நண்ணயமாய் கருவேலு வெள்வேலம்பட்டை
நலமான துள்சிவேர் எருக்கம் வேர்தான். 334

தானென்றாய்க் கியாழமிட்டுக் கொப்பளிக்க
தருவான ரசத்தினுட வேக்காடாறும்
நானன்றாய்ச் சோதித்துப் பார்த்தேனப்பா
நாய்ச்சூலை வாய்ச்சூலை யிரண்டுந்தீருந்
தானன்றாய்ச் செய்து இதைக்கொப்பளிக்க
தருவான தந்தமெல்லா மிறுகுமப்பா
வானென்ற கந்தகத்தைப் பசுவெண்ணெயிட்டு
மைந்தனே தானரைத்து துணியிற்பூசே. 335

பூசியே உருட்டியதை கதிரில்கோத்து
புலத்தியனே தீய்க்கொளுத்தி எரியும்போது
ஆசியே அடியிலே பீங்கான்வைக்க
அப்பனே சுடர்த்தயில மிறங்கும்பாரு
தேசிகனே பதனமாய் வைத்துக்கொண்டு
திறமாக மூன்றுதுளி மூக்கிலூற்ற
தூசனத்தால் மூக்கறுக்க வந்தநோய்தான்
துலைந்து விடும்பத்து நாளுற்றும்போதே. 336

ஊற்றுதே போனுக்கால் நோய்தீராது
உத்தமனே யெளியோரை பெரியோர்தன்னை
சாற்றியே கற்புடைய மங்கையோரைத்
தருவாக மொக்கை குலத்ததினலைப்பா
தேற்றியதோர் அரசருனைப் பார்த்தாரானல்
சிக்கிரத்தில் மூக்கறுத்து கரமுங்கொய்வார்
பார்த்திருந்து யோகிகளைப் பழித்ததோஷம்
பாவமதால் மூக்கறுக்கும் பழவினையாம்பாரே. 337

334, 337-வது உரை

விலாமிச்சம் வேர் லவுங்கப்பட்டை மரமஞ்சள் கியாழம் சாப்பிட மூலந்தீரும் கருவேலாம் வெள்ளை வேலாம் பட்டை துளசிவேர் எருக்கன் வேர் கியாழமிட்டு வாய் கொப்பளிக்க வேக்காடு நாய்குலை தீரும் தந்தங்கள் இருகிஉருதியாகும் கெந்தகத்தைப்பசுவெண்ணெயி லரைத்துத் துணியிற்பூசி கதிர்விட்டெரிக்கும்போது அடியில் பீங்கான் வைத்து சுடர்தைல மிறக்கிவைத்துக்கொண்டு மூக்கில் 3 துளி விட மூக்கிலுள்ள புண் வியாதிகள் தீரும்.

நசியம் :—

338, 340-வது கவி

பழவினையாந் தீராதுபாவி மார்க்கு
பரிவான புலத்தியனே மருந்தீயாதே
* உழவினையா டுடாடிக்கொல்ல மட்டும்
உலுத்தருக்குத் தீராது உறுதிசொன்னேன்
கழவினையுந் தானகற்றி பெரியோருக்கு
கால்பிடித்து ஏவல்செய்து காத்திருந்தால்
பழவினையுந் தானகலு மருந்துகேளு
பாங்கானநிம்ப எண்ணைபடி யரைக்கால்வாங்கே.338

* ஊழ்வினை எதுகைநோக்கி உழவினையென மருவியது.

வாங்கியதில் திரிகடுகு தான்றிக்காயும்
மைந்தனே மிளகோடு கஸ்தூரிமஞ்சள்
தாங்கிநின்ற கார்கோலும் வேப்பமுத்துத்
தகுவாகக் கழஞ்சியரைப் பொடித்துப்போட்டு
தேங்கிநின்ற ரவிப்புடந் தானேழுநாள்
வைத்திரும்ப வதைவாசலிலே வைத்துமைந்தா
ஓங்கிநின்ற இரவிதனை நமஸ்கரித்து
உத்தமனே மூன்றுதுளி மூக்கிலூற்றே. 339

மூக்கிலே மூன்றுநாள் விட்டாயானால்
முழுவினையால் வந்ததொரு பீநசமேதீரும்
மூக்கிலே சாரணையுங்கிழங்குந் திப்பிலி
மிளகுடனே சினிவகைக் கழஞ்சுரண்டு
மூக்கிலே முலைப்பாலா லரைத்துநெய்யில்
மூன்றுநாள் ரவியிட்டு மூக்கிலே
நீர்ப்பாய்ச்சல் பீநசமே தீரும்
முறையாக இன்னமொரு திரிதான்கேளே. 340

338, 340-வது உரை

அரைபடி வேப்பெண்ணெயில் சுக்கு மிளகு திப்பிலி தான்றிக்காய் மிளகு கஸ்தூரி மஞ்சள் கோரைப்புல் வேப்பமுத்து வகைக்கு அரை கழஞ்சி இடித்துப்போட்டு 7 நாள் சூரியப்புடம் வைத்து சூரியனை நமஸ்காரம் செய்து 3 துளி மூக்கிலிடவும் அவ்வாறு மூன்றுநாள் இட்டு வந்தால் பீனிசம் தீரும் சாணைக்கிழங்கு திப்பிலி மிளகு சர்க்கரை 2 கழஞ்சி வீதம் கொண்டு முலைப்பாலால் அரைத்து நெய்யிலிட்டு 3 நாள் வெய்யிலில் வைத்து மூக்கிலிட பீனிசம் தீரும்.

பீநசத்துக்குத்திரி :—

341-வது கவி

திரியென்ன பூவரசம்வெள் ளெருக்கின்வேரும்
திறமான மலைதாங்கி கஸ்தூரிமஞ்சள்

உரமான சிறுநாகம்வெடி யுப்பும்புழுகும்
உத்தமனே புகையிலைசார் விட்டுஆட்டி
திறமாகச் சீலையிலே புரட்டிக்கொண்டு
தீர்க்கமாயனற் கொளுத்தி நாசிக்கேற்ற
பரமான பீனிசமும் புழுவுங்கூட
பாலகனே தீர்ந்துவிடும் பாகங்கேளே. 341

341-வது உரை

பூவரசன் வெள்ளெருக்கன் வேர் மலைதாங்கி கஸ்தூரி மஞ்சள் சிறுநாகம் வெடியுப்பு இவைகளைக் கூட்டி புகை இலைச்சாற்றால் அரைத்துத் துணியில்பூசி திரியுருட்டி தீக்கொளுத்தி நாசியில் புகை கொடுக்கப் பீனிசம் தீரும்.

சிரசுநோய்பீனசம் சிரச்சூலைக்குத்தயிலம் :—

342-வது கவி

கேளப்பா நெல்லிக்காய் சாறுநாழி
கிருபையுடன் கரிசாலைச் சாறுநாழி
ஆளப்பா பசுவின்பால் எள்ளெண்ணைநாழி
அதிமதுரம் பலமரைத்து கலக்கிக்காய்ச்சி
வேளப்பா தலைமுழுகசிரசி லுள்ளநோய்கள்
விலகுமடா பீநசமுஞ் சிரசிற்சூடும்
ஏளப்பா பறந்திடுங்கண் தெளிவுமாகு
மின்பமுட னின்னமொரு தயிலங்கேளே. 342

342-வது உரை

நெல்லிக்காய் ரசம் 1 படி கரிசாலை சார் 1 படி பசும்பால் படி எள்ளெண்ணெய் அதிமதுரம் அரைபலம் அரைத்துப்போட்டு கலக்கிக்காச்சித் தலைமுழ்கிவர சிரசிலுள்ள நோய்கள் பீனிசம் சிரசிலேற்படும் உஷ்ணம் தீரும் கண்கள் குளிர்ச்சியும் ஒளியுமுண்டாகும்.

கபாலசூலைக்கு சவுரித்தயிலம் :—

343, 344 வது கவி

கேளப்பா சவுரியிட பழச்சாறுநாழி
கிருபையுடன் பொடுதலையின் சாறுநாழி
வேளப்பா பசுவினிட பால்தானுழி
விதமான மிளகுபலம் நல்லெண்ணைநாழி
தாளப்பா கலக்கியதை மெழுகுபோல
தான்வடித்து எண்ணைதனை முழுகும்போது
கேளப்பா வொன்றுமில்லை மிளகுநீருங்
கூட்டியே சாதமுண்ணு போகம்நீக்கே. 343

நீக்கவே தீருகிற வியாதிகேளு
நிலையான கபாலவலி கபாலக்குத்து
போக்குமே பீநசங்கள் மண்டைசூலை
பொல்லாத நேத்திரத்தின் மாசிதீரும்
வாக்குமே நீர்க்கடுப்பு மேகச்சூடும்
வாங்குமடா தைலமது வாரந்தோறும்
தாக்குமே தவறுமல் மூழ்கிவாநீ
தன்மையுள்ள நோய்களெல்லாம் தவறிப்போமே.

343, 344-வது உரை

சவுரிப்பழச்சார் படி 1 பொடுதலைச்சார் படி 1 பசும்பாள் படி 1 மிளகுபலம் 1-நல்லெண்ணெய் படி-1 இவைகளைக் கலக்கியடுப்பேற்றி மெழுகுபதத்தில் காச்சி வடித்துத்தலை முழ்கிவரவும் பத்தியம் மிளகு நீர் சாதம் போகம் நீக்கவும் கபாலவலி கபாலக்குத்து பீனிசம் மண்டைச்சூலை கண்மங்கள் நீர் கடுப்புமேகச்சூடு தீரும் வாரம் தவராமல் மூழ்கி வரவும்.

சிவயோகி கற்பம் :—

345, 346-வது கவி

தவறிப்போஞ் சிவயோகம் செய்வோர்க்கெல்லாந்
தண்மையுள்ள எள்ளெண்ணை நீக்கிமைந்தா
சவரிச்சார் பொடுதலைச் சார்பசுவின்பாலுஞ்
சமன்கூட்டி மிளகிட்டுக் காய்ச்சிமூழ்க
தவறிப்போ முன்சொன்ன வியாதிதீருந்
தன்மையுடன் சிவயோகங் கேளுமைந்தா
அவமானஞ் சொல்லுகிறேன் மூலவன்னி
அப்பனே காந்தியடா செந்தீதானே. 345

செந்தியென்ற உந்தியிலே மைந்தாகேளு
சிவசிவா கங்கைசிவகங் கையுண்டு
சொந்தமுடன் தங்நிலை யறிந்துக்கொண்டு
சுத்தமுள்ள கங்கைதனை சுகமாய்நீயும்
அந்திசந்தி கொண்டதனால் அப்பாகேளு
ஆதாரமான சிவ மூலாதாரம்
எவ்விதமென் றறிந்துசொல் லப்போறேன்
ஏக நிராமயமான மூலந்தானே. 346

345, 346-வது உரை

சிவயோகம் செய்கிறவர்கள் எள்ளெண்ணெய் நீக்கவும் சவுரிச்சார் பொடுதலைச்சார் பசுவின்பால் சமன்கூட்டி மிளகு இட்டுக்காச்சி மூழ்கவும் மூலவன்னி உஷ்ணம் காந்தல் நீங்கி பரிசுத்தமென்ற முத்தியாவது சிவசிவா கங்கையைகண்டு தன்னைத்தானே அறிந்து பரிசுத்தம் பொருந்திய கமல அறிவியைப்பார்த்துக் காலை மாலை உள்ளத்தில் பூசித்து வந்தால் ஜீவனுக்கு ஆதாரமாகிய சிவமூலாதாரத்தை அறிந்துகொள் வதற்காக எங்கும் நிறைந்த ஆதியைச் சொல்கின்றேன்.

அகாரஉகாரதீட்சை பூரணமகிமை :—

347, 350 வது கவி

தானென்ற ஆதார மூலம்பார்க்கச்
சாதகத்தைச் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
கோனென்ற குருவருளாலகார தீட்சை
கொண்டபின்பு உகாரமடா சத்திதீட்சை
வானென்ற பவுனமடா மகாரதீட்சை
மார்க்க முடனுருவறிந்து தீட்சைபெற்றால்
தேனென்றால் அமிர்தரச கற்பத்தாலே
திடமில்லாக் காயமது சித்திதானே. 347

தானென்ற சித்தியது யோகமார்க்கந்
தனையறிந்த மூலமடா பிரமஞானம்
வானென்றஞான மடாகேசரி யின்றீபம்
மௌனத்திலான துவுமூலத் தில்தான்
ஓனென்ற தியதுதான் உந்தியுந்தி
ஓமுடித்த ஆவியடா பிராணபந்தான்
தேனென்ற நாதமடா சிலப்பினோசை
தீக்கடங்கா ஓசையைநீ செவியிற்கேளே. 348

செவியான ஆகாச மோசைமைந்தா
தீர்க்கமென்ற மூலமதில் நாவிதன்னால்
தவியாத வாசியடா மேகமாச்சு
சங்கையுள்ள மேகமது ரவியினாவி
குவியாத ரவியுடனே மேகஞ்சேர்த்து
முகுறொளி சத்தமதாய்ச் சலமுமாச்சு
அவியாத மேகசலந் தன்னால்மைந்தா
அண்டசரா சரங்க ளெல்லாமுயிருண்டாச்சே.

உண்டான சேதியப்பா புலத்தியனேகேளு
உரைத்துவிட்டேன் பூரணமாய் நானூற்றுள்ளே
கண்டாயோபூரணமு நாலுநூற்றில் கண்டெடுத்து
சொன்ன பொருளிந்தநூல்தான்
விண்டனடா அதில்சொன்ன கருக்கலெல்லாம்
வேதாந்த யோகியற்கு விளக்கமாகும்
பண்டுபோலிதிற்கருக்கள் தெளிவாய்ச் சொன்னேன்
பதனமப்பா இன்னமொரு றயிலங்கேளே. 350

347, 350-வது உரை

எங்கும் வியாபித்துள்ள ஜீவனுக்கு ஆதாரமாய் நிற்கும் மூலாதாரத்தைக் குருவால் தீச்சை பெற்று அன்னவரின் உதவியால் உகாரத்தை அரிந்து தீச்சைக்கு ஆதாரமாகிய உருதியும் நம்பிக்கையுமுள்ள மவுனத்தை சாதித்து நன்மார்க்கத்தை உடனுருவால் அறிந்து திச்சை பெற்று கற்பத்திலே உருதியற்ற காயத்தை சித்திமார்க்கத்தில் நிலை நிறுத்துவாயாக சித்தின்வழியே நின்றுபார்க்க உருதியான ஞானம் வெளிப்படும் அப்பொழுது ஓமென்ற உந்தி அறிவால் தோற்றிப் பிராணனுக்கு ஆதாரமான வஸ்தை அறிந்து நாதமாகிய சிலம்பிஞேசை அண்டம் விண்டமும் அவ்விடத்திலுள்ள எல்லா ஜீவன்களிலும் நிறைந்து சப்திக்கின்ற பேரின்ப ஒளியைக் கேட்பாய் அந்த ஓசைதான் உருதியுள்ள மூலமதில் நாவி என்றவாசியேமேகமாக எங்கும் வியாபத்து அண்டசராசர முழுவதும் நிறைந்திருக்கிறது புலத்திய மகாரிஷியே பரிபூரணமான இந்த நானூறு காவியத்திலும் பூரணமாயுள்ள பரிபூரணத்தை விளக்கிக்காட்டுவது இந்தப்பரிபூரணமான நானூறே இதில் சொல்லும் கருக்கலெல்லாம் சிவயோகிகளுக்கு விளங்கும் உருதியும் சித்தியுமான நல்நெறிகளை சொல்லி விட்டேன்.

கந்தகத்தயிலம் :—

351, 352-வது கவி

தயிலங்கேள் கந்தகமும் வெடியுப்புச்சிலையுந்
தருவாகப்பல மொன்று பொடிக்குப்போது

அயிலமென்ற நவாச்சாரம் வீரந்தானு
மப்பனே யரைகழஞ்சு கூடப்போட்டு
ஓயிலாகப் பலம்நாலு பசுவின்வெண்ணை
உத்தமனே கல்வத்தி லிட்டுஆட்டி
தயிலமப்பா முன்போலச் சுடர்த்தயிலம்வாங்கித்
தருவான பீங்கானிற் பதனம்பண்ணே. 351

பண்ணியே பணவிடைதா னந்திசந்தி
பத்துநாள் சர்க்கரையிற் கொள்ளும்போது
உண்ணவே பத்தியமோ இல்லைகண்டாய்
உத்தமனே நீங்குசில வியாதிகேளு
நண்ணவே குஷ்டசொறி விரணம்வெள்ளை
நலமான கருமேகம் வாதவாய்வு
திண்ணவே க்ஷயரோகங் குன்மவலிகூட
தீருமடா இன்னமொரு செய்திகேளே. 352

351, 352-வது உரை

கெந்தகம் வெடியுப்பு மனோசீலை வகைக்குப் பலமாக ஆளாகும் போது நவச்சாரம் வீரம் அரை கழஞ்சி வீதம்போட்டு 4-பலம் பசு வெண்ணெயிலிட்டு கல்வத்தில்போட்டு அரைத்து சுடர்தைலம் இறக்கி வைத்துக்கொண்டு காலைமாலை 10-நாள் சர்க்கரையில் சாப்பிட குஷ்டம் சொரி ரணம் வெள்ளை கருமேகம் வாதவாய்வு சயம் குன்மவலி தீரும் பத்தியம் இல்லை.

மூதண்டக் கியாழம் :—

353-வது கவி

செய்தியென்ன சூடுகொண்டால் மருந்தினாலே
தீருதற்கு அறுகம் வேர்பலம்பத்தப்பா
நைந்துமே யதிமதுரங் கூகைநீரும்
நலமான மாதளம்பூ மிளகினோடு

எய்துமே பலமரைதான் கூடப்போட்டு
என்மகனே அறுபடிநீ ரெட்டொன்றுக்கி
கொய்துமே காற்படிநீர் பாக்களவுவெண்ணை
கூட்டியே மூணுநாளகாலமே கொள்ளே. 353

353-வது உரை

10-பலம் அருகம்வேர் அதிமதுரம், இளநீர் மாதளம்பூ மிளகு வகைக்கு 6-பலம் சேர்ந்து 8-படி ஜலம்விட்டு 1-படியாக சுண்டக் காச்சி கால்படி கியாழத்தில் பாக்களவு வெண்ணெய்போட்டு 3-நாள் சாப்பிட ரணம் கடுப்புக் காங்கைதீரும்.

சன்னிக்குத்தயிலம் :—

354, 356-வது கவி

கொள்ளவே வீறுடனே கடுப்பும்போகும்
குணமான சந்நியுட தயிலங்கேளு
விள்ளவேமாவி லிங்கம்புனல் முருங்கக்காயும்
விளாவின்வேர் நொச்சிவே ரெருக்கன்வேரும்
கள்ளவே சொன்னகரை வாதமடக்கக்
கருவானபட்டை பலமாறு டொக்க
வள்ளலே பலமிரண்டு மயில்பீலிதானும்
வண்மையுடன் எட்டியுடகனி குருணியாமே.

குருணியா மித்தனையு மிடித்துப்பாண்டங்
கூட்டியே வேப்பெண்ணை புங்கினெண்ணை
கருணமா யெள்ளெண்ணை படியரையாய்வார்த்து
தயவாகத்தான் பிசறிமே லோமூடி
அருணமாய்ச் சீலைமண் வலுவாய்ச் செய்து
அப்பனே யடியிலே தமருதான்போட்டு
வருணமாய்க்குழி வெட்டிப் பல்லாய்வைத்து
மைந்தனே பல்லாவாய்ப் பானைத்தூரே. 355

தூரெல்லாம் மண்பூசிப் புகைபோகாமல்
துரிதமுடன் சாணமேற் றிச்சுத்திகேளும்
பாரெல்லாந் தானெரியக்கனல் புடமாய்ப்போட்டு
பாங்கானகலயத்தில் தயிலம் வீழும்
நேரான குழித்தயிலம் பதனம்பண்ணி
நினைவாக மேல்பூசிப் பிடித்துவரும்போது
பாரெல்லாஞ் சந்நியொடு வலிப்பிசிப்பு
பாங்கான கான்முடக்கம் பாரிசவாயுவே. 356

354, 356-வது உரை

மாவிளங்கு வேர் நல்லமுருக்கன்காய் விளாவேர் நொச்சிவேர் எருச்சன்வேரும் தையாங்கரை வாதமடக்கிப்பட்டை 6-பலமும் மேலேசொன்ன வேர்களும் மையிர்பீலி 6-பலம் எட்டிக்கனி 2-பலம் இவைகளை இடித்துப் பாத்திரத்தில்போட்டு வேப்பெண்ணெய் புங்கெண்ணெய் யெள்ளெண்ணெய் வகைக்கு அரைபடி வீதம் மேற்படி சரக்குகளைக் கலந்து பிசிறி ஒடுமூடி ஜாக்கிறதையாய் சீலைமண் உருதியாய்செய்து பாத்திரம் அடியில் சிறிய தமிர்செய்து வட்டக்குழியில் (பல்லா) பாத்திரம் வைத்து தூரில் மண்பூசி புகைவெளியே போகாமல் சாணம் பூசிப்புடம்போட்டு கலயத்தில் தைலம்விழும் அத் தைலத்தைப் பத்திரப்படுத்திக்கொண்டு, சந்நி 18-வலிப்பு முடக்குப் பாரிசவாய்வு முதலியவைகளுக்குக் கொடுக்கவும்.

காதுமந்தத்துக்குச் சிரசில்தேய்க்கத்தயிலம் :—

357-வது கவி

வாயுவெல்லாம் போகுமடா தயிலந்தன்னில்
வண்மையுடன் காதுகேளாமற் போனால்
நேயுவென்ற நல்லெண்ணை படிகால்தன்னில்
நிலப்பனையுங் காற்பலந்தான் பொடித்துக்காய்ச்சி
பாயுவென்ற பாதமிரண்ட டியில்தேய்நீ
பதனமாய்ப் பக்குவமாய் மண்டலந்தான்
ஓயுவென்ற நல்லெண்ணை படிகாலுக்கு
ளுத்தமனே கொடுவேலிப்பட்டை பலங்காலே.

357-வது உரை

எள்ளெண்ணெய் கால்படியில் நிலப்பனைக்கிழங்கு கால்பலம் தூள்செய்து போட்டுக் காய்ச்சி இரண்டு பாதத்தின்கீழும் ஒருமண்டலம் தேய்க்காது மந்தம்தீரும்.

358, 359-வது கவி

காலப்பா முலைப்பால்விட் டரைத்துக்காய்ச்சிக்
கனமாகத் தினங்கொஞ்சம் சிரசில்தேய்த்து
மேலப்பா மண்டலமிப் பாரண்டெண்ணே
மேன்மையுடன் றுன்றேய்க்கக் காதுமந்தம்
பால்போலே தீர்ந்துபோகுங் குத்திரைச்சலுக்குப்
காங்கான கொள்ளிக்காய் கொழுஞ்சுவேரும்
நாளப்பா கழுஞ்சுமேல் தோலரைத்து
நன்மையுடன் முலைப்பாலால் நன்றுயாட்டே. 358

ஆட்டியே காற்படிநல் லெண்ணெய்தன்னில்
அன்பாகக் காய்ச்சியதி லஞ்சுதுளியிட்டு
பாட்டியே காதுக்குள் பஞ்சடைத்துவைக்கப்
பருவான காதிரைச்சல் காதுகுத்தல்
ஓட்டியே காதுநோய் போகுமப்பா
உத்தமனே பல்வலிக்கு மறுபாகத்தில்
நாட்டியே தைவேளை யறுகம்புல்லும்
நலமாகத் தட்டியதைக் கசக்கிக்கேளே. 359

358, 359-வது உரை

கால்படி எள்ளெண்ணெயில் கால்பலம் கொடிவேலிப்பட்டையை முலைப்பாலில் அரைத்துப்போட்டு காச்சித் தினம் கொஞ்சம் சிரசில் 1-மண்டலம் தேய்த்து வரக் காதக் குத்தல்தீரும் தூதுவேளைவேர் 1-கழஞ்சி முலைப்பாலிலரைத்து நல்லெண்ணெயில் காய்ச்சி 5-துளி வீதம் காதில்விட காதிரச்சல் காதுகுத்தல் காது நோய்தீரும். தையவேளை அருகம்புல் இரண்டும் சமனெடை கொண்டு தட்டிக் காச்சிக் காதில்விட முரவாதம் தந்தரோகம் ஒருத் தலைவலியும் தீரும்.

அறுகம்வேர்த் தயிலம் :—

360, 362-வது கவி

கசக்கியே மறுபாகங் காதில்தானும்
கடுகவே மூணுதுளி விட்டாற்போகும்
நசக்கிடவே முகவாதந் தந்தரோகம்
நன்மையில்லா ஒருதலைவலியும் போகும்
பசக்கியே யின்னமொரு தயிலங்கேளு
பாங்கான அறுகம்வேர் பலம்பத்தாக
கொசக்கியே மானத்தில் குறுணிநாதன்
சுகமாக எட்டொன்று யிறுத்துக்கொள்ளே. 360

இறுத்துநீ யெள்ளெண்ணை படிதான்கூட்டி
என்மகனே வெட்டிவேர் கார்கோல்வித்து
நெருக்கியே கோஷ்டமுடன் கழஞ்சுவீதம்
நெகழைத்துத் தயிலமதை நீரில்லாமல்
கருத்தாகக் காய்ச்சியதை முழுகும்போது
கனசனத்த மண்டையிடி சிரசில்பித்தம்
வருத்தமுள்ள மஞ்சள்நீர் ரத்தமூத்திரம்
மகத்தான மேகநோய் தணிந்துபோமே. 361

போமப்பா உஷ்ணங்கள் நேத்ரவாயு
பொல்லாற சயித்தியமும் பயித்தியமுங்கூட
நாமப்பா மூதண்ட தயிலங்கண்டால்
நன்மையில்லா நோய்க ளெல்லாம்
நாடாதப்பா தாமப்பா பித்தமென்ற
வியாதிபோகுந் தயவான சந்தனுதியிதிற்கொள்வாது
வேமப்பா விஷங்கடிக்குக் குழம்புகேளு
வேப்பமுத்து ரசங்கெந்தி துருசுவெள்ளை 362

360, 362-வது உரை

அருகம்வேர் 10-பலம் தட்டி 8-படி நீரில்காச்சி 1-படியாக்கி 1-படி எள்ளெண்ணெய் வெட்டிவேர் கார்போக அருசி கோஷ்டம்

வகைக்குக் கழஞ்சிவீதம் அரைத்து நீர்சுண்டக் காச்சி முழுகிவர மண்டையிடி சிரசு பித்தம் மஞ்சள் மூத்திரம் ரத்தமூத்திரம் மேக நோய் உஷ்ணம் நேத்திரவாய்வு சயித்தியம் பைத்தியம் தீரும்.

விஷங்களுக்குக் குழம்பு :—

363, 364-வது கவி

வெள்ளையொடு மனேசிலையும் பெருங்காயமேழு
மேன்மையாய் வகைக்கு அரைக்கழஞ்சுகூட்டி
தள்ளையென்ற நேர்வாளஞ் சுத்திசெய்து
தருவாகக் கழஞ்சது வு மேழுமொன்றாய்
வள்ளலே கல்வத்திலிட் டெருக்கம்பாலால்
மாட்டியரை ஒருசாம மெழுகுபோலே
துள்ளவேபின்பு * நிம்பநெய் தான்விட்டுத்
துருசாக வொருசாம மரைத்துக்கேளே. 363

அரைத்துமதைக் கொம்புசிமிழ் தன்னில்வைத்து
அப்பனே விஷந்தீண்டி வந்தபேர்க்கு
திரத்துடனே பயிரளவு வெற்றிலையிலீயிந்து
தீர்க்கமுடன் கடிவாயிற் கொஞ்சம்பூச
பறந்துவிடுஞ் சகலவிஷம் போகுமென்று
பாடினது வடமொழிநூல் பாகமப்பா
உரைத்துவிட்டேன் பத்தியந்தான்பசுமோராகும்
உத்தமனே சந்நிக்குக் கலிக்கங்கேளே. 364

363, 364-வது உரை

வேப்பமுத்து ரசம் கெந்தகம் துருசுவெள்ளைப் பாஷாணம் மனேசிலை பெருங்காயம் வகைக்குக் கழஞ்சி அரைநேர்வாளம் கழஞ்சு 1 சேர்த்துக் கலவத்திலிட்டு எருக்கம்பாலால் 1-சாமம் அரைத்துக் கொண்டு விஷம் தீண்டிய்வர்க்குப் பயிரளவு வெற்றிலையில் கொடுத்து மேலுக்குப் பூசத்தீரும் பத்தியம் பசுமோர் ஆகும்.

---

* நிம்பநெய்-வேப்பநெய்.

சந்நிக்குக் சலிக்கம் :—

365-வது கவி

கேளப்பா சருக்கரைப் பழத்தைநீயுங்
கிருபையுடனரைத்து அதின் விரையில்தானும்
பாளப்பா பிசினிருக்கும் வாங்கிக்கொள்ளு
பாலகனே விரையெல்லாம் நீக்கிப்போடு
தாளப்பா பயறுபோ லுருட்டிக்கொண்டு
தருவாக வெள்ளைச்சாரணை வேளையோடு
கேளப்பா வெற்றிலை யுங்கசக்கிசாற்றில்
கிருபையுடன் தானரைத்து விழியிற்போடே.

365-வது உரை

சக்கரைபழத்தை அரைத்து அவ்விரையிலுள்ள பிசினியை எடுத்துப் பயிறுபோலுருட்டி வெள்ளைச்சாரணை - வேளை-வெற்றிலையும் காச்சி சார் இறக்கி அதில் உண்டை அரைத்துக் கண்ணில்போட சந்நி பிடரிநோய் திரேகநோய் நீரேற்றம் தீரும்.

ஆக்கிராணகியம் :—

366-வது கவி

போடவே சந்நியொடு பிடரிநோயும்
பொல்லாத வுடம்புநோய் நீரேற்றங்கள்
சாடவே ஓடிப்போ மின்னமொன்று
சாற்றுகிறேனுக்கி ராண தயவாய்க்கேளு
நாடவே காட்டெருவில் எருக்கம்பாலை
நாலாறு விசையடித்துக் காயப்போட்டு
தேடவே புடம்போட்டுச் சாம்பல்தன்னைத்
திறமாக நாசியிலே ஏற்றுவாயே. 366

366-வது உரை

காட்டெருவில் 10-முறை எருக்கம்பாலடித்துக் காயவைத்துப் புடமிட்டுச் சாம்பலை மூக்கில் ஏற்ற சந்நி மண்டைக்குத்து நீரேற்றம் தீரும்.

கண்வியாதிக்கு மருந்து :—

367, 371-வது கவி

ஏற்றவே சலதோஷ மண்டைக்குத்து
 ஏற்றமென்ற நீரேற்றமெல்லாம் போகும்
பார்த்திபனே கண்ணுள்ள வியாதிபோகப்
 பாடுகிறேன் † சம்பழத்தில் நூற்றுஎட்டு
தோற்றுமல் துனைதுளைத் துலவுங்கநாட்டித்
 துரிதமுடன் கயிர்கோர்த்துச் சட்டியிலேதாக்கிப்
பார்த்தாலே விளாங்காய் போல்பசுவின்வெண்ணை
 பாலகனே லவங்கமெல்லாம் பரவிமூடே. 367

மூடியேயச் சட்டிதனில் படாமல்
 மூர்க்கமுடன் சுத்தகங்கை விட்டுவைநீ
நாடியே நாற்பதுநாள் வேறேவேறே
 நலமான சுத்தகங்கைவிட்டு வைத்து
தேடியே பிறகுவெண்ணை தனையெடுத்துத்
 திறமான தாம்பரத்தின் பரணிலேவைத்து
சாடியே பழமுடனே லவங்கப்பூவுந்தள்ளிவிடு
 வெண்ணெய்தனைக் கண்ணில் தீற்றே. 368

தீற்றிடவே சலம்வீழு மெரிப்புண்டாகுந்
 திறமாக சிலையினற் றுடைக்கதிற்கும்
பாற்றிடவே மண்டலந்தான் கண்ணில்தீற்றே
 மாற்றாத நேத்திரநோய் மாறுமென்றும்

---

† சம்பழம்-எலுமிச்சம்பழம்.

போற்றிடவே யென்குரு வேதியர்தானிந்தப்
    புத்தகத்தின் பெருமையினூற் புகன்றதோடா
தோற்றிடா வுலகத்தி லெளியோருண்டு
    துரையான துரைமக்க ளரசருண்டே. 369

அரசரென்றால் பொருள்கொடுத்து நோய்தீர்த்து
    கொள்வா ரதனாலேயுந்தனுக்குத் தருமமில்லை
நீசரென்று லெளியோர்க்கு வயித்தியஞ்செய்ய
    நிலையான தருமமது நிலைக்குமென்று
பிரியமுட னென்குரு வேதியர்தான்சொன்னார்
    பிள்ளையென்று புலத்தியனே யுனக்குச்
                    சொன்னேன்
பரிசனமாய் மனதில்வைத்தால் முத்திசேர்வாய்
    பாலகனே யிதைமறந்தால் பலித்திடாதே. 370

பலித்திடவே வேணுமென்றால் புலத்தியனேஐயா
    பாரிலுள்ளவுயிரெல்லாந் தன்னுயிர்போலெண்ணி
சலித்திடா யொருபோதுந் தருமஞ்செய்ய
    சந்தையங்கள் செய்யாதே சதிசெய்யாதே
சலித்திடவே கருமத்தால் பிறவிகிட்டுந்
    தருமத்தால் சாயுச்சிய மதவிகிட்டும்
சலித்திடாய் சற்குருவை யெடுத்துக்காரு
    சதாகாலஞ் சதாசிவனைப் போற்றிப்பாரே. 371

367, 371-வது உரை

எலுமிச்சம்பழத்தில் 108-பொத்தல்செய்து ஒவ்வொரு பொத்தலுக்கும் லவுங்கம்மூடி லவுங்கம் தெரியாமல் வெண்ணெயில் கட்டி சட்டியிலிட்டு சுத்தஜலமிட்டு தினமும் வேறே வேறே ஜலமிட்டு 40-ம்நாள் பழமும் லவுங்கமும் நீக்கிவிட்டு வெண்ணெயை எடுத்துத் தாம்பரபரணில் வைத்துக்கொண்டு 40-நாள் கண்ணிலிட சகலமான கால்நோய்களெல்லாம் தீரும்.

கர்ப்ப வியாதிக்கு எண்ணெய் :—

372, 374-வது கவி

போற்றினை லின்னமொரு எண்ணெய்கேளு
புலத்தியனே பிள்ளையில்லா மலடியோர்க்கு
சாற்றுகிறே மேரண்ட எண்ணெய்நாழி
னைதவேளை யிலையுனே யேரண்டத்திலையும்
பார்த்திடவே புஞ்சளொடு கடுக்காயிந்துப்பு
பரிவான வெண்காரம் வெள்ளைப்பூண்டு
தோர்த்திடவே கடுகுடனே விழுதிநிலவரையுந்
தொகைவைத்து கைமூன்று பலமாய்த்தூக்கே.

தூக்கியே யம்மியிலே மைபோலாட்டித்
துரிதமுடன் வெண்ணெயிலே கலக்கிக்காய்ச்சி
தாக்கியே மெழுகுபத மாய்வடித்துத்
தருவான குப்பியிலே பதனப்பண்ணி
வாக்கிலே வடிக்குமுன்னே கழஞ்சுநிறையப்பா
வண்மையுள்ள கள்ளிப்பால் கூட்டிக்கொண்டு
தேக்கியே காண்டிநிறை நாலுநாள்கொண்டு
திறமாக மூன்றுநாள் கொடுத்துக்கேளே. 373

கேளப்பா பத்தியமோ உப்பாகாது
கிருபையுடன் மூன்றுவிசை கொடுத்தாயானால்
பாரப்பா சூதகத்தின் வாயுகுத்துப்
பக்கத்திற் சூலையுடன் வயிற்றுவலிதீர்ந்து
நாளப்பா பெண்களுக்கு கர்ப்பமுண்டாம்
நானூறு வயித்திய பூரணமாய்ச்சொன்னேன்
கேளப்பா ஒருநாளு மில்லைகுணமாக
வின்னமொரு எண்ணெய் கேளே. 374

372, 374-வது உரை

ஆமணக்கு எண்ணெய் படி-1 தைவேளையிலை கொட்டைமுத்து இலைமஞ்சள் கடுக்காய் இந்துப்பு-வெண்காரம்-வெள்ளைப்பூண்டு கடுகு ரோகிணியிலை நிலாவரை வகைக்கு 3-பலம் அம்மியிலிட்டு மைபோலரைத்து எண்ணெயிலே (சேர்த்து) கலர்ந்து காச்சி மெழுகுபதத்தில் இறக்கி 1-கழஞ்சி கள்ளிப்பாலில் சேர்த்து கறண்டியளவு கொடுக்க சூதகவாய்வு பக்கச்சூலை வயிற்றுவலி தீரும் கர்ப்பமுண்டாகும் பத்தியம் உப்பை நீக்கவும்.

சகலமேக எண்ணெய் :—

375, 376-வது கவி

எண்ணெயென்ற மேகவெண்ணெய் சொல்லக்கேளு
மேரண்ட எண்ணெய்படி யீருள்ளிச்சார்
நன்னயமாய்த் * தேசிச்சாறு செம்பொனெருஞ்சி
நலமான காரிசாலை கற்பூரவள்ளி
பின்னையென்ற பூவரசங்காய்ச சங்கங்குப்பி
பிரியமுடன் வகைக்குச்சார் படியரைக்கால்
சொன்னமே மெழுகுபத மாகக்காய்ச்சிச்
சோதனைக்கு ஏழுநாளுப் போகாதே. 375

உப்பில்லாப் பத்தியமாய்க் குடிக்கும்போது
உள்ளுருகி மேகநோய் உட்டினங்கள்
தப்பில்லாக் கிரந்தியொடு அரையாப்புபோகுந்
தயவான யோனிப்புண்வெடி சூலைதீரும்
ஒப்பில்லா மேகத்தின் வாயுகூட
ஓடுமடா இதுவேது வயித்தியந்தான்
சொற்பமாய்ப் பாடிவிட்டே னிந்தநூலில்
சோதனைக்குப் பூரணத்தை மேவிப்பாரே. 376

* தேசிச்சாறு-எலுமிச்சம்பழச்சாறு.

375, 376-வது உரை

ஆமணக்கெண்ணெய் படி-1 ஈருள்ளிச்சார் (எலுமிச்சன்) தேச்சார் தங்கரலிச்சார் கர்ப்பூரவள்ளிச்சார் பூவரசங்காய் சங்கங்குப்பிச்சார் வகைக்குப்படி அரைக்கால் எடுத்து அடுப்பேற்றிக் காச்சி மெழுகுப்பதத்தில் எடுத்து 7-நாள் கொடு உள்ளுருச்கு மேகம், உட்டினங்கள் கிரந்தி அரையாப்பு, யோனிப்புத்து. வெடிசூலை மேகவாய்வு தீரும் பத்தியம் உப்பாகாது.

பூரண நூல் மருத்துவஞானம் :—

377, 382-வது கவி

போற்றினு னுனதுவினை யகலுமப்பா
பிறவியில்லாப் பதவியிலே புனிதமாவாய்
போற்றினல் பூரணமுங் கூடப்பேசும்
பூதலத்தில் நீயுமொரு சித்தனவாய்
போற்றினு லென்னபல னில்லையென்றால்
பொதியமலே யெனக்கேது புலத்தியாகேள்
போற்றினேம் பூரணத்தின் கிருபைகண்டோம்
புத்தியுடன் தானேதான் பூண்டுபோரே. 377

தானுன ஆதார சொரூபந்தன்னைச்
சமர்த்தாகத் தானறிந்து தியாகஞ்செய்து
தேனுன புலத்தியனே யறிவாய்தானும்
தேகத்தி லுயிர்சிவமாய்த் தெரிந்துகொண்டு
வானுன கேசரியில் மனக்கண்வைத்து
மனங்கனிந்து ஓம்நீங் அங்ஙன்றேத
கோனுன ஆதார பூசைதானும்
கோடான பூசைசெய்த பலத்துக்கொப்பே. 378

ஒப்பென்றால் மனம்கிலேக்க உறுதிகேளு
ஓமென்ற பிரணவமே மூலபீடம்,
செப்பென்ற பீடமதில் நீங்காரவாலே
சென்றிருந்த ஆகாரபதி சிவமுமாச்சு

குப்பென்று தானெழுந்து வாசியாக்கிக்
கொண்டுநின்ற திருவாசி யமாவாசை
அப்பனே அரகரா அமாவாசை
யறிந்துகொண்டு பௌர்ணமியில் பூசைபண்ணே.

பூசையென்று லந்திசந்தி பூசைபண்ணு
புண்ணியனே காயாதி கற்பங்கொண்டு
நேசமுடன் பூரணத்தைத் தினமும்போற்றி
நினைவாக வுனதுசடம் நிலைத்துப்போகும்
பாசமென்ற பாசமதை விலக்கிமைந்தா,
பக்குவமாய் காரமென்றால் சத்திசிவமாச்சு
பேசவொண்ணாச் சத்தி காணேன். 380

காண்ப்பா மயேந்திரமாங் கிரிக்கடுத்துக்
கணநாதர் தனைநோக்கிப் பூசைசெய்தால்
தோணப்பா அம்மலையில் வாழுஞ்
சாரைசுத்தமுள்ள வெண்சாரை நிலத்திற்பாயும்
சாணப்பா பூமியிலே பாய்ந்தபின்பு
சமர்த்தாக மையமதிற் பிடித்துக்கொண்டால்
ஊணப்பா பிடித்தபிடி கையில்தங்கு
முத்தமனே ரண்டுதுண்டு மொன்றும்பாரே. 381

ஒன்றாகப் பூமியிலே யோடிப்போகு
முண்மையுடன் பிடித்தபிடி யுள்ளேகேளு
நன்றாக வருஷமொன்று அந்திசந்தி
நாட்டமுடன் கொண்டுவரும் போதிலேதான்
பண்டான வாசியது பாயாதப்பா
பகர்ஞான காயமது சித்தியுண்டாம்
சென்றாட பத்தியந்தான் கடுகெள்ளெண்ணெய்
திறமான சையோக மூன்றாகாதே. 382

377, 382-வது உரை

பரிபூரணமாகிய இந்த மெய் நூலை அறிந்து அதன்நெறியில் நின்றால் பிறவியில்லாப் பதவிபெற ஏதுவாது மன்றி பொதிகைமலை

யிடையும் மார்க்கமும் உண்டாகும் அந்தப்பூரணத்தை நோக்கி ஓங் நீங் சங் என்று ஜெபித்து மனநிலையை உறுதிசெய்து வாசியைக் கொண்டு பூரணத்தில் ஆரம்பித்து காலை மாலை பூரணத்தைப் பூசிக் கப்பாவம் விலகும் கணபதியைப் பூசைசெய்தால் வெண்சாரை அங் கிலத்தில் காணும் அதையறிந்து பூசிக்கவேண்டும் காயா சித்திக்கு ஏற்றமருந்து பத்தியம் கடுகு நல்லெண்ணெய் போகம் கூடாது.

மூலகிரி :—

383, 386-வது கவி

ஆகாது வாண்டென்று சிவத்தைப்பூசி
அப்பனே சத்தியுட கற்பங்கேளு
போகாத நீலகிரி தன்னில்நீயும்
புத்தியுடன் சென்றுதவஞ் செய்தாயானால்
ஆகாசந தனிலிருந்து மூசிதன்னி
லந்தரமாய்க் கருஞ்சாரை பாயுமுன்னே
தாகாச மந்திரந்தா னவும்மென்றோதித்
தப்பித்து மையம் பிடித்துக்கொள்ளே. 383

கொள்ளப்பா ஆண்டொன்பது அந்திசந்தி
குணமாகக் கொண்டுவரக் குணத்தைக்கேளு
கிள்ளப்பா மூலத்தில் அனலேமீறிப்
பித்தமது மேற்கொண்டு செந்தீபற்றி
துள்ளப்பா தேகமது இளைத்துக்கண்டால்
தூங்கலே மூதண்டக் கியாழுங்கொள்ளி
நள்ளப்பா உகாரமதைப் பூசைசெய்ய
நரையான திரைநின்று நாட்டங்காணும். 384

நாட்டமென்றால் சுழிமுனையில் நாட்டங்காணும்
நடுமனையில் தீபஒளி நன்றாய்த்தோணும்
தோட்டமென்ற பூரணத்தின் தீபுங்கண்டால்
திறமான தேகமது வலுத்துப்போச்சு
கூட்டமென்ற சிவசக்தி பூசைசெய்து
குணமான ரண்டுகற்பங் கொண்டபின்பு

பாலையிலே சிவத்தைப் பூசி
பாதகனே மாலையிலே யுகாரங்கொள்ளே. 385

கொள்ளவே யாண்டுமொரு மூன்றுசென்றால்
குணமான சட்டையது மூன்றுநீங்கி
விள்ளவே ஆண்டுனக்கு முந்நூற்றாண்டு
மிஞ்சாது குறையாது நித்திரையும்நீங்கி
வள்ளலார் திருநடனம் வெளியாய்த்தோணு
மைந்தனே ரவிமதியு மொன்றாய்க்காணும்
மெள்ளவே வாசியென்ற குதிரையேறி
மேலான போதகிரி யுச்சம்பாரே. 386

383, 386-வது உரை

ஒரு வருஷம் சிவத்தைப் பூசிக்கக் கருஞ்சாரை தோன்றும் மந்திரம் (உம்) என்று 9 வருடம் அந்தி சந்தி பூசிக்க மூலத்தில் அனலேறிப் பித்தங்சொண்டு செந்தீய்பற்றி இலைப்புக்கண்டால் மூதண்டல் அல்லது தூதுவளைக் கியாழம் சாப்பிடவும் உகாரத்தைப் பூசிக்க நரைதிரை நீங்கும் சுழி முனையில் நின்று காலையில் சிவத்தையும் மாலையில் உகாரத்தையும் பூசித்து 3 வருடம் வந்தால் 3 சட்டையாகிய மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை நீங்கும் 300 ஆண்டு வயது உண்டாகும் வாசியை அறிந்து யோகநிலையை அறிவாயாக.

போதகிரி :—

387, 388-வது கவி

உச்சமென்ற போதகிரி யுச்சந்தன்னில்
உண்மையுடன் கற்பூர தீபம்போலே
பச்சமுடன் சதாசிவமும தாமும்கூடப்
பதினெட்டுச் சித்தர்களு மங்கிருப்போம்
இச்சையுடன் போதகிரி தன்னிலென்னை
யேறிவந்து கண்டவுட னின்பாக
அச்சமென்ற அச்சமதை யகற்றிமைந்தா
அழியாத பதவியுனக் களிப்போம்பாரே. 387

பாரப்பா போதகிரி யார்தான்காணபார்
பாலகனே நவசித்தர் பார்த்தபோதம்
நேரப்பா போதமென்றால் சிவபோதந்தான்
நிலைபாத போதத்தை நிலைத்தோன்காண்பான்
மேரப்பா வுச்சமென்ற போதங்கண்டு
மேன்மையுள் ளழியாத பதவிபெற்றால்
சாரப்பா சதானந்தி மணியைநீயும்
சார்ந்ததினா லுனதுவினை தவரிப்போகும். 388

387, 388-வது உரை

மேலேயுள்ள போதகிரியில் சிவாலய முண்டும் அங்கே கற்பூர தீபம்போல் எப்பொழுது சதாகால மும் ஜோதிப்பிரகாசமாய் விளங்கும் (சதாசிவத்தோடு) என்றும் முடிவில்லாத அம்பலநாதனின் அம்சத்தோடு காணுங்கூட 18 சித்தர்களுமிருப்போம் அவ்வாறுவல்லமை பொருந்திய அந்த இடத்தை பக்தியோடும் விசுவாசத்தோடும் ஆசையோடும் அரிந்து வந்தார் அந்தப்போதகிரியில் என்னைக்கண்டறிந்து, நாங்கள் சந்தோஷத்தோடு உன்னை ஏற்றுக்கொள்வோம் உன்னைப் பற்றிய அச்சமாகிய பாவத்தை வெறுத்தவயானால் அழியாத பதவி பெற ஏதுவாயிருக்கும் நாங்கள் 18 சித்தர்களும் வணங்கித்துதிக்கப் படுகின்ற சிவயோகத்தை பந்தபசாமின்றி சூச்சமென்ற போதத்தைக் கண்டு அழியாத மெய்வழியே சென்று உறுதியான நந்தியையுடைய அந்த ஜீவமணியை அறிந்து போற்றுவாயாக.

சிவராச யோகம் :—

389, 396 வது கவி

தவறிப்போம் சிவராச யோகங்கண்டால்
தாரணியில் மற்றமற்ற யோகமெல்லாந்
தவறிப்போய் முச்சுடரு மொன்றாய்க்கண்டால்
தாவான பிறப்பிறப்புந் தண்மையாகித்
தவறாமல் ஞானவழி கண்டுமைந்தா
தன்மையுடன முக்கோணத் தறுகோணத்து

தவறிப்போ நாற்கோண மங்கோணத்து
சதாசிவனு ரொளிகண்டு வெளிகண்டோற்கே.

கண்டோற்கே நாதவொலி காதில்கேட்கும்
காணுத மடையருக்கு வெளிதோணுது
பண்டோர்க்கு விட்டகுறை பற்றிபேறும்
பாவியர்க்குக் கிடைத்தாலு மெட்டாதப்பா
விண்டோர்க்குக் கோடிபலனுண்டு சொன்னேன்
வீணருக்கு விண்டதினல் நரகமெய்தும்
அண்டர்பிரா னருளதனு லிந்தநூல்தான்
ஆதிதொடுத் தந்தம்வரை யடைவாய்ச்சொன்னேன்.

சொன்னடா நூல்தோறு மொளித்தசேதி
சத்தமுட னிச்சயமாய்த் தோணச்சொன்னேன்
முன்னேநான் பெருநூல்கள் அநந்தஞ்சொன்னேன்
மிச்சமிந்த நூலபோலே யொன்றுங்காணேன்
கண்ணுன புலத்தியனே யிந்நூலைக்
காட்டாதே வுலகருக்குங் காட்டிடாபே
விண்ணேருஞ் சித்தர்களும் யோகியோரும்
வேதாந்த வயித்தியபூரண மென்பாரே. 391

பாரப்பா சத்திதனை மாலையிலேபூசி
பதிவான காலையிலே சிவனைப்பூசி
சாரப்பா நடுச்சாலை நடந்துபாரு
சந்தயமோ பூரணத்தின் சார்புதோணும்
வாரப்பா பூசையென்றால் வாலைபூசை
மந்திரமா யெட்டிரண்டு மகிழ்ந்துகண்டால்
மேரப்பா மூலைவழி பாதைகாணும்
மேல்மூலைகண்டு மெள்ள விழித்துப்பாரே. 392

விழித்துமே பார்த்திடவே பொரிதான்
வீசும்முச்சந்தி நடுவீதிதீபந் தோன்றும்
சுழித்தியிலே போகாதே ஒருமனதாய்நின்றால்
சத்தமென்ற நாதவொலி காதிற்கேட்கும்

இழுத்ததென்று நீகூடத்தொடர்ந் தாயானா
லெண்ண வொண்ணாப்பிறப்பு மெய்தும்பாரு
அழித்துமனங் கழித்து தேற்றிவிழித்
துப்பாரு அரகராசிவ சத்தியாட்டமாமே. 393

ஆட்டமென்றால் மணியிடை ஆட்டேயாட்டு
அதையறிந்தால் சதாசிவத்தி ருட்டங்காணும்
பாட்டைமிகப் பார்த்ததினு லென்னதோணும்
பாடறிந்த யோகியென்றால் பலுக்குத்தோணும்
கூட்டமென்றால் வாசியிட கூட்டேகூட்டு
கூட்டுவிட்டுப் பின்றொருத்தார் கூட்டேனப்பா
தீட்டமென்றால் சதாதீட்சை தீட்டேதீட்டு
தீட்டறிய நாட்செல்லு மரிதுதானே. 394

அரிதாகயித்தனை நாள்மறைத்த தெல்லா
மன்புடனே மழைபோலே பொழிந்தேனிந்நூல்
குரியாகப்பாடி வைத்தேனிந்நூல் தன்னைக்
கூறினேன் சகலமுமே வெளியாய்ச்சொன்னேன்
பெரிதாகப் பாராட்டு மிந்தநூலைப்
பேரின்ப முத்திதனைப் பெறுவாயப்பா
சிறிதாக வெளியரங்கம் செய்தாயானால்
சிவசிவார விகோடி நரகமெய்தும். 395

நரகமென்ற நரகமதில் விழுதல்நன்றோ
நன்மையுள்ள சாயுச்சியம் பெறுதனன்றோ
தெரிவையர்கள் சந்திநடு விழுதநன்றோ
சிவஞான முத்திபெற்றி யிருக்கனன்றோ
பரிவானவாசி தனிலேற நன்றோ
பாழான வுலகமதி லிருக்கநன்றோ
தெரியாதே புலத்தியனே யிந்தநூலைத்
தேசத்தில் காட்டாதே சதிசெய்வாரே. 396

389, 396-வது உரை

சிவயோகத்தை அறிந்த ஞானிக்கு இகயோகப்பற்றற்று முச்சுடருமொன்றான மோனமாகிய முக்கோணம், அறுகோணத்தையே

நாடுவார்கள் நாற்கோணமாகிய இப்பிரபஞ்சங்கோணம் தோற்றாமல், சதாசிவத்தையே சதாப்பார்த்துக் கொண்டிருக்கும் அவர்களுக்கே அந்தநாதத்தின் சத்தம் காதில் கேட்டும் அதைக்காணாற்கு வெளியில் தோன்றாது சிவயோகிகளுக்குச்சொல் வீணராகிய அறிவு அற்றவருக்குச் சொன்னால் நரகத்தை அடைவார் அண்டம் பிண்டம் எங்கும் நிறைந்துள்ள வல்லவருடைய அருளால் இந்தப் பரிபூரணமென்ற நூலை ஆதியோடு அந்தம் வரைப்படிப்படியாய் ஒழுங்காய் சொல்லி இருக்கிறது. இந்நூலின் இடையில் அநேக மர்மங்கள் சொல்லப்பட்டது அதை உனக்குக்கொடுத்தேன் இதற்கு முன் எத்தனையோ பெரியநூல்கள் அருளியுள்ளோம் அவைகளைப் பார்க்கிலுமிந்நூல் சிறந்தது ஆகையால் அன்புள்ள புலத்தியமகாரிஷியே இதை உலகத்தோர்க்குக் காட்டாதே தேவர்களும் சித்தர்களும் யோகிகளும், வேதாந்தி வைத்தியர்களுமிதை வேதாந்த வைத்தியமென்பார்கள் ஆகையால் பத்திரப்படுத்திக்கொண்டு காலையில் சத்தியையும் மாலையில் சிவனையும் பூசிப்பாயானால் அந்தப்பூரணத்தின் வடிவுதோணும் அப்பொழுது வாலையை நினைத்துப்பூசைசெய்து அதற்கு மந்திரம் 10 அந்த பத்தையுங்கண்டு தள்ளிப்பார்த்தால் ஆதிமூலவழி தோன்றும் அங்கே வீதி தீபந்தோன்றும் அப்போது ஆசையாகிய இப்பிரபஞ்சம் சுழியில் மனதைச்செலுத்தாமலிருந்தால் உறுதியாய் நிலைப்பாய் அப்பொழுது அவலப்பிறப்பு ஒழியும் அப்பொழுது தான் சதாசிவத்தின் நாட்டந்தெரியும் பாட்டைப்படித்ததினால் பிரயோசனமில்லை கூட்டமாகிய வாசிநாடி என்றும் அழியாத சாயுச்சியத்தை அறிந்து பேரின்பமுத்திதனை அடையவேண்டுமானால் இந்நூலை ஒருவருக்கும் சொல்லாதே உன்னைமதியார் அநேகயாணபாவங்களைச் செய்வார்கள் புலத்திய மகாரிஷியே பத்திரம்.

நூல் கெடாதிருக்க :—

397, 401-வது கவி

சதிசெய்வாரிந் நூலைவெளிவிடாதே சதிராக
    வுலகத்தோர் கேட்பா ருன்னை
விதியாலே நூல்தனை யீந்துவிட்டால்
    வீணனவனுனை மதியான் வித்தையாலே

எதிராளி யானவனும் வுன்னைத்தானு
மெவ்வளவும் போடாநீ வாடாவென்பான்
குதிப்பாக குருவிந்தப் பாடுபட்டால்
குவலயத்தோர் படும்பாடு யென்னசொல்வேன்.

சொல்வானே நான்தாண்டா குருவுமென்பான்
சோதனைக்கு மாரணத்தை செய்துபார்ப்பான்
வெல்வானே யெளியோரை வலிமையாலே
வீணருக்கு நூல்கொடுத்தால் பாபமெய்தும்
செல்லாத பணமொருநாள் செல்லாதப்பா
சிவாயகுரு நாதனென்றால் செல்லவைப்பான்
வல்லோருக் கீயாதே யோகிக்கீந்தால்
வகையான நூலதனை வணங்குவாரே. 398

வணங்குவார் சிவயோகி ஞானயோகி
மற்றமற்ற பேரெல்லாம் தூஷணிப்பார்
இணங்குவார் போலிருப்பா ரிணங்கார்பின்னே
இந்நூல் கிட்டுமட்டு மிணங்கிசிற்பார்
பிணங்களுட னுதவி செய்யவேண்டாம் சொன்னேன்
புலத்தியனே பேரின்பவெளியைச் சொன்னேன்
குணங்காமல் வழிகூட்டி நடுவழியேநாடில்
குருவான பராபர னெல்வெளியாமே. 399

வெளியான வெளியதுதான் பரஞ்சோதிரூபம்
வேதாந்த ரூபமடா சொரூபானந்தம்
வழியான வயித்திய பூரணமானந்தம்
மகத்தான பூரணத் தினர்த்தங்கண்டு
நெளியாம லாகாரங் கடந்துமேலே
நெருப்பாற்றில் மயிர்ப்பால் வழியேசென்று
அளியாத பரவெளியால் ஒளியாயோம்
மருவுவது ஆனந்த பூரணமுமுற்றே. 400

முற்றுன புலத்தியனே புலத்தியமகாரிஷியே
பூச்சுடரு மாதியந்தம் நன்றாய்ப்பாரு

சித்தான வயித்திய பூரணமீதப்பா
தேசத்திற் கிடையாது திறமாய்க்கேளு
பத்தான பதிதனிலே வைத்துப்பூசி
பதிதாளை வாசியது சித்தியாகும்
வித்தான வினையறுக்கும் ஞானசித்தி
வேதாந்த பூரணத்தின் வெளிசேர்முற்றே. 401

397, 401-வது உரை

உலகத்தாருக்கு வெளிப்படுத்தாதே சிவயோகிகள் மாத்திரந் தான் வைத்து ஜாக்கிரதையாய் வைத்திருப்பார்களே தவிரமற்றவர்கள் எலியோரை வதைப்பார்கள் ஆகையால் வீணருக்குத் தெரிவிக்காதே உன்னை மதியார்கள் அப்படிப் பட்டவர்கள் உன்னையே நிந்திப்பார்கள் மேலும் இந்நூலைக் கற்றுக்கொள்ளும் வரை பணிவோடும் மரியாதையோடும் மிருப்பார் ஆகையால் புலத்தியமகாரிஷியே அவர்களுக்கு இதை வெளிப்படுத்தாதே இதில் உள்ள விஷயங்கள் எல்லாம் சன்மார்க்கத்துக்கேதுவான மெய்வழியைக்காட்டும் அவ்வழிதான் பரஜோதியின் தூய்வழி அந்த வேதாந்த சொரூபமான நாதாந்தத்தை இந்த வைத்திய நூல் என்ற பரிபூரணமே விளக்கிக் காட்டியுள்ளது. உருதியான மனதுடனே அந்தமெய் பரஞ்சோதியைக்கண்டு ஆனந்தங்கொல்வாயாக எனது அன்புள்ள புலத்தியமகாரிஷியே முற்சுடரும் ஆதியந்தமதை ஞானநேத்திரத்தால் நன்றாய் உற்றுப்பாரும் உனக்கு சித்தியைக்காட்டும் மெய்நூல் இந்தப் பூரணந் தான் மற்றவர்கு நான் இதைக்கொடுக்கவில்லை ஆகையாலிதை உள்ளமதில் பத்திரப்படுத்தி வித்தாகிய சிவஞான பரிபூரணத்தைக்கண்டு தேர்ந்து என்றும் அழிவில்லாத சாயுட்சியப்பதவி பெருவாயாக.

அகஸ்தியர் பரிபூரணம் — 400

முற்றிற்று.

செல்வரங்கன் பிரஸ், சென்னை.

ஹிப்நாடிஸ மெஸ்மெரிஸ மென்னும்

வாயுவேக மனோவசிய சாஸ்திரம்.

இந்த நூலில் மனோவசியத்தைப்பற்றியும், அதை அப்பியாசிக்க வேண்டிய வழிகளைப்பற்றியும் நன்கு எழுதப்பட்டிருப்பதுடன் உலகில் பிறர் கண்களுக்குத் தெரியாமல் உலாவும் வழியைப்பற்றியும், இறந்த பெரியோர்களுடன் எப்படிப்பேசுவது என்பதைப்பற்றியும், நன்கு எழுதப்பட்டிருக்கின் சபைதனில் விரலைக்காட்டி மற்றவர்களை தூங்கவைக்கும் வழிகளைப்பற்றியும், மனோவசிய சக்தியினால் நாம் உலகத்திற்குச் செய்யக்கூடிய நன்மை மிகுந்த செல்வாக்குடன் இருக்க விரும்புகின்றவர்களுக்கு இந்நூல் தேவாமிர்தம்போன்றதாகும். ஜெர்மெனி அமரிக்கா ஆங்கில நாட்டார் அனுபவ நூல் சித்திரப்படங்களுடன் விசித்திர செய்கைகள் அறியும் சித்திர நூல்

இதன் விலை ரூபா 1—8—0

ஒவ்வொரு குடும்பத்திலும் இன்றியமையாத

ஆயுள்வேத சிகிச்சாரத்தினமென்னும்

குடும்ப வைத்தியம்

இதன் விலை ரூபா 1 8 0

ஷண்முகானந்த புத்தகசாலை

5/34, நயினியப்ப நாய்க்கன் தெருவு

பார்க்டவுன் சென்னை.

நாகரீக நூதன மென்னும்

நவீனபாக சாஸ்திரம்

[மைசூர்..கே. வி. இராமா ராவ் அவர்களால் எழுதியது 250-முறைகள் அங்கங்கே ஒவ்வொரு பலகாரங்களுக்கும். தெளிவாக ஆண் பெண்களுக்கும், அறிய ஒரு பலகாரம் செய்யவேண்டியதாய் இருந்தால், ஷை புத்தகத்தில் அங்கங்கே வீசை, பலம், படி, கணக்கு காட்டியுள்ளேன். அரியபெரிய விஷயங்கள் அடங்கியது. இதன் விலை அணு 12]

ஜாதக கணிதாரம்பம் என்னும்

சோதிட ஆசான்

இவ்வரிய நூலில் சோதிடம் என்னது என்றும் தெரியாத ஒவ்வொருவரும் சோதிட ஆசான் முதல் பாகத்திலிருந்து முறையாக நான்கு பாகமும் வாசிப்பார்களானால் சோதிட நுட்பங்களை எளிதில் உணர்ந்து சோதிடத்தில் ஆற்றல் உள்ளவர்களாக ஆவார்கள் ஜாதகங்கள் கற்க போலி சோதிடர்களை தேடி நேர்மையான சோதிட முறைகளை கற்காமல் இடர் உருவோருக்கு எமது சோதிட ஆசான் உற்ற தோழனாய் இருப்பான் என்பதை இதனை வாசிப்போர்க்கு நன்கு புலனாகும் சோதிட மேதாவிகளுக்கும் உபயோகமாகுமாறு ஜாதகம் கணிக்கும் முறை லக்கண பலன், திரேகங்கள், அமைதலும் கொள்ளக்கூடிய எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

பிரதி பாகம் ரூ. 1. 4-பாகம் கட்டடம்ரூ. 3—8—0

ஷண்முகானந்த புத்தகசாலை.

5-34, நயினியப்ப நாய்க்கன் தெரு,

பார்க்டவுன் சென்னை

காமநூல் தேவை தேவை என்று எழுதிக்கொண்டிருப்ப
வருக்கு உண்மையான 64-லீலா விநோதப் படங்க
ளுடன் கூடிய கொக்கோக நூல் வெளி
வந்துவிட்டது போலிப்புத்தகங்
களைக்கண்டு ஏமாராமல் சென்னை
K. A. மதுரை முதலியார்
பதிப்பித்ததாகப்
பார்த்து வாங்கவும்.

கொக்கோகம்

என்னும்

இரதிமன்மதன் திருவிளையாடல்

உண்மையான மர்ம விஷயங்கள் பச்சையாக விளக்கப் பட்டுள்ள கொக்கோக சாஸ்திரம். இதில் காம உற்பத்தி, ஆண் பெண் சரீர அமைப்பு நான்கு வகைப் பெண்களின் லக்ஷணம் சம்போகம் செய்ய வேண்டியமுறை, காதல் இலக்கணம், அமுதநிலை சோதனை, ஆலிங்கண வகைகள் பெண்களை வசிகரப்படுத்தும் மார்க்கம் முதலிய மர்மமான அநேக சிறந்தவிஷயங்கள் அடங்கியுள்ளன. 64-மதன லீலா சாஸ்திரத்துக்குரிய படங்கள், இரதி மன்மதனது திரு உருவப்படங்கள் மதன சக்கரபடம் (பூஜாவிதானத்தோடு) அமுதநிலை சக்கரம் ஸ்ரீ பஞ்சாக்ஷர மனோ வசீகர சக்கரம் முதலியவை பளபளப்பான கடிதத்தில் விலை ரூ. 2.

ஷண்முகானந்த புத்தகசாலை

5-34, நயினியப்ப நாய்க்கன் தெரு,
பார்க்டவுன் சென்னை.

ஸ்ரீ பகவத்கீதை வசனம்

[18—அத்தியாயங்கள் அடங்கியது.]

இதில் வேதாந்த ரஹஸ்யத்திற்கு உபமானமாய் உபநிஷத் வாக்கியங்கள் ஆங்காங்கு உபசரிக்கப்பட்டிருக்கின்றன யோகம் ஞானங்களை விளக்கிக் காட்டும் நூற்களில் இதுவே முதன்மை பெற்றது அலைய மனதை அகத்தில் அடக்குவதற்கு அரிய பெரிய கருவியாகும் பிர்ம வித்தை யென்றும் ஆத்மாநாத்ம விவேகத்தையும் விளக்கிக் காட்டும் சாங்க்ய யோகமும் தர்ம யோகமும் சொல்லப்பட்டிருப்பதினல் யோக சாஸ்திரம் என்னும் கிருஷ்ண பகவானுக்கும் அர்ச்சுனனுக்கும் நடந்த சம்வாதம் என்னும் கிரந்தத்தை சத்திரபுரம் சொ. ஈ. துரைசாமி அய்யங்கார் மிக தெளிவான நடையில் விமரிசையாக எழுதப்பட்டிருக்கிறது.

விலை ரு 1—8—0 கிரோஸ் 2—0—0

தேவேந்திரநாத் என்னும்

மாயாஜால விநோதம்

இதில் அஷ்டமா சித்திகள் செய்யலாம், வசிய வகைகள் செய்யலாம், மணலை கிளறிவிநாயகர் காட்டலாம், மகேந்திர ஜாலம் செய்யலாம் இந்திர ஜாலம் பட்டணங்களைத் தோன்றச் செய்தல் கினைத்த தேவர்களை காட்டலாம், கண்கட்டு ஜாலம் பாதாள மைஜாலம் மோடிக்கும் வித்தை மனிதர்களுக்கு சிரசில்லாமல் செய்யும் ஜாலம் சத்துரு நாசமாகும் ஜாலம் காசுகள் உண்டாகும் வித்தை இருட்டில் சூரியனை காட்டும் ஜாலம் இராஜவசியம் வழக்குகள் வெல்லும் ஜாலம் இதைப்போன்ற அற்புத ஜாலம் 2000 சேர்ந்தது. விலை ரூபா 1.

ஷண்முகானந்த புத்தகசாலை

5/34, நயினியப்ப நாய்க்கன் தெரு, பார்க்டவுன் சென்னை.

ஆர்மோனிய
சுரசாஹித்திய சங்கீத களஞ்சியம்.

இது சங்கீதம் கற்க விரும்புகிற சிறுவர் சிறுமிகட்கும் சங்கீதத்தில் நன்றாய் தேர்ந்தவர்களும் சங்கீத உபாத்தியாயர்களும் ஆர்மோனியம் பிடில் வீணை முதலிய வாத்தியங்களில் தேர்ந்தவர்களும் கற்றுக்கொண்டு வருபவர்களும் இன்றி யமையாத புஸ்தகம். இதில் தீக்ஷதரின் கீர்த்தனை தியாகராய கீர்த்தனை இராமாயண கீர்த்தனை நந்தன் கீர்த்தனை ஜாவளி தேவாரம் திருப்புகழ் தமிழ் பதங்கள் பாடிவரும் சங்கீத வித்வான்கள் பாடல்களுக்குச் சுரதாளம்போட்டு அழகிய கிளேஸ்தாளில் உயர்ந்த பயிண்டுசெய்து யிருக்கிறது சொற்ப பிரதிகளே கைவசம் விலை ரூபா 1—8—0

சதிபதிகளின் மர்மம் (அல்லது)
மானிடரகசிய சாஸ்திரம்

இதில் வசந்தனுக்கும், சுலோசனாவுக்கும் வினாவிடை தர்க்கங்களாகவே பெண்களைச் சந்தோஷிக்கச்செய்யும் விதமும், உண்மையான ஜாதிபேதங்களும், அவைகளின் லட்சணங்களும், ஆண் பெண் இருவர்களும் இன்புற்றிருக்கும்விதங்களும், ஸ்திரீயை இன்னவர் விவாகம் செய்யக்கூடும் என்ற விதமும், போகம் செய்யவேண்டிய நாளும், நாழிகையும், இன்னவிதமாகசுகிக்கவேண்டிய கிரமமும் ஆண் பெண் மலடு விவரங்களும், மாதர்களுக்கு அமிர்த நிலை எந்த காலங்களில், எவ்விடத்தில் இருக்கும் என்பதையும் அதை எவ்விதமாய் நிலைபெயர்க்க வேண்டுமென்பதையும் அகாலச்சேர்க்கையால் வரும் கெடுதியும் இதைப்போன்ற அரியபெரிய மர்மங்கள் நமது நூலில் இனிய செந்தமிழ் நடையில்பிரசுரித்திருக்கின்றோம்.

விலை ரூ 1—0—0

ஷண்முகாநந்த புத்தகசாலை,
5/34, நயினியப்ப நாய்க்கன் தெரு,
பார்க்டவுன் சென்னை.

அகஸ்திய முனிவர் அருளிச்செய்த

வைத்திய ரத்தினச் சுருக்கம்–360

(மூலமும்—உரையும்)

நாடியின் நிதானம், செய்முறை, கைமுறை, குரு முறை, வைத்தியரின் அந்தஸ்து, அவர்கள் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம், குறிப்புணர்தல், சரக்குவைப்பு, முதலியவைகளை தெளிவுடன் விரிவாய் எழுதியுள்ளது.

மேற்படியாரால் மொழிப்பேர்க்கப்பட்ட நூற்கள்

1 அகஸ்தியர் அருளிச்செய்த குருநாடி மூலமும் உரையும் விலை 1—0—0

2 ஷை பரிபாஷை மூலமும் உரை விலை 1—8—0

3 ஷை குணவாகடம் மூலமும் உரையும் விலை 1—0—0

1 கோவலன் டிராமா
2 சாவித்திரி சரித்திரம்
3 அல்லி அர்ச்சுன
4 அரிச்சந்திரா
5 அதிரூப அமராவதி
6 சக்குபாய் சரித்திரம்
7 பாரிஜாத புஷபஹரணம்
8 தூக்குத் தூக்கி
9 பிரஹ்லாதன் சரித்திரம்
10 ஞானசவுந்தரி
11 ராமதாஸ் சரித்திரம்
12 கபீர்தாஸ் சரித்திரம்

☞ இவ்வரிய டிராமாக்கள் 12-ம் ஒருங்கு சேர்த்து அழகியதாளில் கலிகோபயிண்ட்செய்து தயாராக யிருக்கின்றது தேவையுள்ளவர்கள் உடனே ஆர்டருக்கு எழுதுக. விலை ரூ. 2

They come once in six months—ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அவர்கள் வருகிறார்கள்
He is lbe first hoy in the class—வகுப்பில் அவன் முதலில் இருக்கிறான்
He will come by the end of January—ஜனவரி மாதங் கடைசியில் அவன் வருவான்
To-day is fifteenth—இன்று பதினைந்தாவது தேதி
Do not sleep in the day-time—பகலில் தூங்காதே
I shall see you in the next week—அடுத்த வாரத்தில் உன்னைப் பார்ப்பேன்
Drink Tea in the afternoon—மாலையில் தேத் தண்ணீரைக் குடி
He is a shepherd—அவன் ஓர் இடையன்
Do you know the Tinker—தகர வேலைக்காரன் உனக்குத் தெரியுமா?
Where did you buy that adze—அந்த வாய்ச்சி எங்கே வாங்கினாய்
It is a sharp axe—அது ஒரு கூரிய கோடாரி
Bring the boner and the broach here—அந்தத் தமரையும் தமருசியையும் இங்கே கொண்டுவா
Have you brought the chisel with you?—நீ உன் உளியைக் கொண்டு வந்திருக்கிறாயா?
Cut that branch with the hatchet—சிறு கோடாரியால் அந்தக் கிளையை வெட்டு
Whose mallab is that—அது யாருடைய கொட்டாப் புளி
That razor is not sharp—அந்த க்ஷவரக் கத்தி கூர்மையாயில்லை
Take the mud in the shovel—மண்ணை மண் வாரியிலெடு
There is a sythe near the forge—உலைக்களத்தின் பக்கத்தில் ஒரு அரிவாள் இருக்கிறது
Can you work with an hatchet—சிறு கோடாரியால் நீ வேலை செய்வாயா?

நானாவித சம்பாஷணைகள்.

Where are you going?—நீ எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?
I am going to the bazaar—நான் கடைக்குப் போகிறேன்

Are you going to temple ?—நீ கோயிலுக்குப் போகிறாயா ?
No, I shall go you this evening—இல்லை இன்று மாலையில் உன்னிடம் வருவேன்
Where is your father now ?—உன்னுடைய தகப்பனார் இப்போது எங்கேயிருக்கிறார் ?
He is in his house—அவர் வீட்டிலிருக்கிறார்
Who is that man ?—அந்த மனிதன் யார் ?
How is he related to you ?—அவர் உனக்கு எப்படிச் சுற்றம் ?
He is my uncle—அவர் என் மாமன்
Is he your maternal uncle ?—அவர் உன் தாயாருடன் பிறந்த [மாமனா ?
He is my paternal uncle—அவர் என் தந்தையுடன் பிறந்த சிற்றப்பன்
What made you to come here ?—இங்கே எதற்காக வந்தீர் ?
I wish to see your master—நான் உன் எஜமானனைப் பார்க்க வந்தேன்
Is your brother at house ?—உன் சகோதரன் வீட்டில் இருக்கிறானா ?
No, he has just gone out—இல்லை, அவர் இப்போதே வெளியில் போனார்
When will he come back—அவர் எப்போது திரும்பிவருவார்
He will come in the evening—அவர் சாயங்காலம் வருவார்
What are you going to do how ?—நீ இப்போது என்ன செய்யப் போகிறாய் ?
I am going to see the market—நான் சந்தையைப் பார்க்கப் போகிறேன்
Is any body follow with you ?—உன்னிடம் யாராவது வருகிறார்களா ?
Yes, my brother will follow—ஆம், என் சகோதரன் வரு [கிறான்
How do you do ?—நீ எப்படி இருக்கிறாய் ?
I am quite well—நான் சௌக்கியமாய் இருக்கிறேன்
How are your sisters ?—உன் சகோதரிகள் எப்படி இருக்கிறார்கள்
Hites fly in the sky—பருந்துகள் ஆகாயத்தில் பறக்கும்
Owl large eyes—ஆந்தைக்குக் கண்கள் பெரிது
Parrot is green—கிளி பச்சையா யிருக்கிறது
Do you like quail ?—உனக்குக் காடை பிரியமா ?

How far are you going—நீ எவ்வளவு தூரம் போகிறாய்?

I will go as for as the museium—பொருட் காட்சிச்சாலை வரையிலும் போகிறேன்

Yes, I will come with pleasure—நான் சந்தோஷமாய் வருகிறேன்

Is it not getting late?—நேரமாக வில்லையா?

Yes, let us leave this place and go be the main road—ஆம், இவ்விடத்தை விட்டுப் பெரிய ரோட்டின் வழியாய்ப் போவோம்

How do you know that—அது உனக்கு எப்படித் தெரியும்?

I can prove it—அதை நான் ருசுப்படுத்துவேன்

Have yov any witnesses for that—அதற்கு உனக்குச் சாக்ஷிகள் உண்டா?

Yes, Madhavan knows everything—ஆம் மாதவனுக்கு எல்லாந் தெரியும்

Madhava! What do you know about this case?—மாதவா! இந்த கேஸைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

I know everything, but I do not like to say that—எனக்கு எல்லாம் தெரியும். ஆனல் அதை சொல்ல எனக்குப் பிரியமில்லை

Will you give me lone of fifty rupees—எனக்கு ஐம்பது ரூபாய் கடன் கொடுப்பாயா?

Why do you want now—இப்போது உனக்கு என்னத்திற்கு?

Owing to marriage of my sister—என் சகோதரி கலியாணத்தின் நிமித்தம்

When will you repay it?—அதை எப்பொழுது திருப்பிக் கொடுப்பாய்?

I shall repay it within a month—ஒரு மாதத்திற்குள் நான் அதைத் திருப்பிக் கொடுக்கிறேன்

Can you speak english?—நீ இங்கிலீஷ் பேசுவாயா?

Yes, I can speak little—ஆம், நான் கொஞ்சம் பேசுவேன்

In what class are you reading—நீ எந்த வகுப்பில் வாசித்துக் கொண்டிருக்கிறாய்

I am reading in the second form—நான் இரண்டாவது பாரத்தில் வாசித்துக் கொண்டிருக்கிறேன்

கொக்கோகம்

என்னும்

இரதி மன்மதன் திருவிளையாடல்

உண்மையான மர்ம விஷயங்கள் பச்சையாக விளக்கப் பட்டுள்ள கொக்கோகசாஸ்திரம். இதில் காம உற்பத்தி, ஆண், பெண் சரீர அமைப்பு, நான்கு வகைப் பெண்களுடைய லக்ஷணம், சம்போகம் செய்யவேண்டிய முறை அமுர்தநிலை ஆலிங்கன வகைகள், பெண்களை, வசீகரப் படுத்தும் மார்க்கம் மர்மமான லீலா சாஸ்திரத்துக்குரிய படமும், இரதி மன்மதனது திரு உருவப்படமும், மதன சக்கரப்படம் (பூஜா விதானத்தோடு) அமுர்தநிலை சக்கரம், ஸ்ரீ பஞ்சாக்ஷர மனோ வசீகர சக்கரம் முதலியவை அடங்கியது. இதன் விலை ரூபா. 2-8-0

அகஸ்திய மாமுனிவர்

பரிபூரணம் 400 மூலமும் உரையும்

ஸ்ரீமத். R. M. P. திருமலை ஸ்வாமி அவர்களால் சுருதி, யுக்தி, அனுபவ சம்மதமாக வாத, ஞான வைத்தியம் இவைகளுக்கு தெளிபொருள் விளக்கமாக உரை எழுதப்பட்டிருக்கிறது. இது ஞானிகட்கும், வாதிகட்கும், வைத்தியர்கட்கும் மிகவும் அவசியமானது.

விலை ரூபா. 1—0—0

ஜாதக கணித ஆரம்பம் என்னும்

சோதிட ஆசான்

ஒரு மாதத்தில்

தானே ஜோதிடம் கற்றுக்கொள்ளலாம்.

பிரதி பாகம் ரூ. 1. 4-பாகம் கட்டடம் ரூ. 3-8-0

எமது விலாசம்:—

ஷண்முகானந்த புத்தகசாலை,

பார்க் டவுன், மதருஸ்.

Sri Bharathi Press, Choolai, Madras.